# உதயன்

www.onlineuthayan.com

26 பக்கங்கள் சுடர் 28 கதிர் 024 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 05 வியாழக்கிழமை (20/12/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00




# உயிரிழப்பு 22ஆக உயர்வு

## மட்டக்களப்பு வெள்ளத்தில் மிதக்கிறது ஒரு இலட்சத்து 75ஆயிரத்து 558 பேர் பாதிப்பு

கொழும்பு, டிசெ.20

நாட்டில் கடந்த மூன்று நாள்களாக தொடர்ந்து பெய்து வரும் அடை மழையால் வெள்ளம், மண்சரிவு, மரம் முறிவு ஆகியவற்றில் சிக்கி நேற்று மாலை வரை 22 பேர் உயிரிழந்துள்ளனர். 20இக்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். 50இக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

அடை மழை காரணமாக நாடு முழுவதிலும் 45 ஆயிரத்து 916 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 558 பேர் நிர்க்கதியாகியுள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 3 ஆயிரத்து 394 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 696 பேர் 47 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வெள்ளம், மண்சரிவு, மரம் முறிவு என்பவற்றால் 146 வீடுகள் முழுமையாகவும் 805 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

### அதிக சேதம் மட்டக்களப்புக்கு; அதிக சாவு மாத்தளைக்கு

நாட்டில் நிலவிவரும் சீரற்ற காலநிலை காரணமாக மட்டக்களப்பு மாவட்டம் அதிக பார்க்க பக்கம் 4



நெருங்கிவரும் இந்திய - இலங்கை இராணுவ உறவு

## பன்றிவெடி வெடித்ததில் ஒருவர் வரணியில் சாவு

சாவகச்சேரி, டிசெ. 20

வரணி கறுக்காய்ப் பகுதியில் மர்மப் பொருள் வெடித்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த 7 பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி தங்கராசா (வயது-45) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமாலை வரணி கறுக்காய் பகுதியில் வெடிச்சத்தம் ஒன்று கேட்டுள்ளது. இதனை அவதானித்த அந்தப் பகுதி மக்கள் சம்பவ இடத்துக்குச்சென்ற போது அங்கு பார்க்க பக்கம் 4

# தெரிவுக்குழுவை எதிர்த்து ஷிராணி மனுத்தாக்கல்

கொழும்பு, டிசெம்பர்.20

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை செல்லுபடியற்றதென அறிவிக்கக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தெரிவுக்குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று நீதிமன்றம் தடை விதிக்க வேண்டும் எனவும் அந்த மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவின் சார்பில் அவரது சட்ட விவகாரங்களைக் கையாளும் நீலகண்டன் அன்ட் நீலகண்டன் நிறுவனம் இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ மற்றும் குற்றப்பிரேரணையை விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னதாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதியறிக்கை கடந்த திங்கட்கிழமை பிரதம நீதியரசருக்கு நாடாளுமன்றத்தினால் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த இறுதி அறிக்கை தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டதையடுத்தே நேற்றைய தினம் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [சி]

## தாதியர்கள் சுகவீன விடுப்பில் நோயாளர்களுக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.20

நாடு முழுவதும் அரச வைத்தியசாலைகளில் தாதியர்கள் நேற்று புதன்கிழமை ஒருநாள் சுகவீன விடுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அவசர, தீவிர சிகிச்சைப் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பிரிவு நோயாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை உள்ளிட்ட வடக்கின் அரச வைத்தியசாலைகளிலும் இந்த நிலை காணப்பட்டது. ஒரு சில தாதியரைத் தவிர வேறு தாதியர் எவருமே இல்லாததால் அங்கும் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

அவரச சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் மாத்திரம் தாதியர்கள் சிலர் பணியில் இருந்தனர். நோயாளர் விடுதியில் ஒவ்வொரு தாதியர் மட்டும் பணியில் இருந்தனர். இவர்கள் அவசர கட்டமான பார்க்க பக்கம் 4

## கொழும்பிலும் காபூலிலும் தூதரகங்கள்

கொழும்பு, டிசெ.20

கொழும்பு மற்றும் காபூலில் தூதரகங்களை திறந்து வைப்பதற்கு இரு நாடுகளும் இணங்கியுள்ளது. இரு நாடுகளுக்குமிடையிலான உறவைப் பலப்படுத்தும் வகையிலேயே இத்தூதரகங்கள் திறந்துவைக்கப்படவுள்ளன.

அத்துடன், இந்த இரு நாடுகளும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களிலும் ஒத்துழைக்க பார்க்க பக்கம் 4

## இராணுவப் புலனாய்வாளர்களை உருவாக்க உதவியது இந்தியாவே

யாழ்ப்பாணம், டிசெ.20

இராணுவப் புலனாய்வாளர்களை உருவாக்க இலங்கைக்கு இந்தியாவே உதவியதாக இந்திய ஊடகமான என்.டீ.ரி.வி. செய்தி வெளியிட்டுள்ளது.

அது மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கண்டியில் 2009 ஆம் ஆண்டு இராணுவ புலனாய்வு கல்லூரியை நிறுவ இந்தியா உதவியதுடன் சுமார் 10 திறமை வாய்ந்த இராணுவ பயிற்றுவிப்பாளர்களைக் கொண்ட அணியையும் இலங்கையில் நிறுத்தியுள்ளது.

சீனாவுடன் வலுவான இராணுவ உறவுகளை இலங்கை பேணுகின்ற போதும் தனது இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பதையே இலங்கை விரும்புகிறது.

இந்த வருடம் மட்டும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 870 அதிகாரிகள், இந்திய இராணுவ பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெற்றுள்ளனர். இந்த எண்ணிக்கை கடந்த வருடங்களை விட அதிகரித்துள்ளது.

முன்னேறித் தாக்குதலுக்குப் பயன்படும் ஆயுதங்களை இலங்கைக்கு வழங்குவதில்லையென இந்தியா தீர்மானித்துள்ளபோதும் சாதாரண ஆயுத கொள்வனவுக்காக மட்டும் 100 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ள அந்த ஊடகம் பார்க்க பக்கம் 4

## காயங்களுடன் ஆணின் சடலம் பற்றைக்குள் மீட்பு

வடமராட்சி,டிசெ.20

அல்வாய் கிழக்கு,மாயக்கைப் பகுதியில் பற்றைக் காணிக்குள் இருந்து காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் பருத்தித்துறைப் பொலிஸாரால் நேற்று புதன்கிழமை மீட்கப்பட்டது.

பருத்தித்துறை வி.எம். றோட்டைச் சேர்ந்த குமாரசாமி கருணாநிதி (வயது-47) என்பவரின் சடலம் அது என அடையாளம் காணப்பட்டுள்ளது. சடலம் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் பார்க்க பக்கம் 4

# கோத்தபாய ஜனாதிபதியாகும் நாள் இல்லை தொலைவில்

## மனோ ஆவேசம்; மாணவர்களை விடுவிக்க வலியுறுத்து

கொழும்பு, டிசெ.20

''பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, நாளுக்கு நாள் புதுப்புது அவதாரங்களை எடுத்துக்கொண்டிருக்கிறார். நகர அபிவிருத்தி என்ற பெயரில் கொழும்பு மாநகர ஆணையாளராகவும், யாழ். பல்கலை மாணவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதனூடாக புனர்வாழ்வு ஆணையாளராகவும் மாறியுள்ள இவர், நாட்டின் ஜனாதிபதியாக அவதாரம் எடுக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.''

- இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு அஸாத் சாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். பல்கலைக்கழக மாணவர்களது வீடுகளுக்குச் சென்ற பாதுகாப்புத் தரப்பினர், அவர்களைக் கைது செய்து மிருகங்களைப்போல இழுத்துச் சென்றுள்ளனர். இதற்கு கோத்தபாயவே மூலகாரணம். எனவே, பல்கலை மாணவர்களை உடன் விடுதலை செய்யாவிட்டால், அது தீ போல பரவி அணைத்து பார்க்க பக்கம் 4

## நிலம் உள்ளிறங்கி 60 அடி பள்ளம் திடீரென தோற்றம்

யாழ்ப்பாணம், டிசெ. 20

திடீரென நிலம் உள்ளிறங்கி 60 அடிக்கும் மேலான பள்ளம் தோன்றியது. பெரிய மரங்கள் அதில் புதையுண்டன.

மாத்தளை துங்கொலவத்தையிலுள்ள தொரகும்புர பகுதியிலேயே இந்த நில வெடிப்பு இடம்பெற்றுள்ளது. சுமார் 25 அடி விட்டமும் 60 அடி க்கும் மேலான ஆழமும் உடைய குழி அங்கு தோன்றியுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த புவிச்சரிதவியல் திணைக்களத்தினர், ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியிலேயே வெடிப்பு இடம்பெற்றதால் உயிராபத்துக்கள் எதுவும் இடம்பெறவில்லை. பலா, கித்துள் போன்ற உயரமான மரங்கள் புதையுண்டுள்ளன.

2005 ஆம் ஆண்டிலும் இது போன்ற வெடிப்புக்கள் இடம்பெற்றதாகவும், நிலத்தடியில் உள்ள சுண்ணக்கற்களின் பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசரிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கேட்க வேண்டும்

## அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை பாதுகாக்கும் இயக்கம் வலியுறுத்து

கொழும்பு, டிசெ.20

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை விவகாரத்தால் உள்நாட்டு, சர்வதேச அழுத்தங்கள் - நெருக்கடிகளில் அரசு சிக்கியுள்ளதால் ஷிராணி பண்டாரநாயக்கவிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மன்னிப்புக் கேட்டு இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். - இவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டைப் பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்தது.

சட்டவரையறைக்கு உட்பட்ட சமூகந்தான் பிரதம நீதியரசர் பதவியில் இருக்கவேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். ஆனால், இன்று அந்தச் சமூகத்தில் 99 சதவீதமானோர் அவருக்கு முழுமையான ஆதரவு தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த விடயத்தை இனிமேலும் பேசிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்று நவ சமசமாஜக்கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலிநிலையத்தில் நேற்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப் படுத்தும் அமைப்பின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரணை செய்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை சுயாதீனக்குழுவினூடாக ஆராய்ந்துபார்க்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அரசமைப்புக்கு எதிரான முறையிலேயே பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை கொண்டுவரப் பட்டு விசாரணைகள் நடத்தப்பட்டன. பிரதம நீதியரசருக்கு எதிராகக் குற்றப் பிரேரணை கொண்டுவரவேண்டுமெனில் அதற்கோர் நடைமுறை இருக்கிறது.

இதுபோன்றதொரு பிரேரணையை சட்டவரையறைக்குட்பட்ட சமூகந்தான் கொண்டுவரவேண்டும். பிரதம நீதியரசரின் விவகாரங்களை விசாரணை செய்யவேண்டிய தேவை இல்லை. அவர் தமது கடமையிலிருந்து தவறியிருந்தாரெனில் பதவி விலகலாம். அதற்கான ஏற்பாடுகளை சட்டவரையறைக்குட்பட்ட சமூகம் மேற்கொள்ளலாம் - என்றார். (சி)

# திட்டமிட்டபடி நாளை யாழ்.நகரில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.20

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நான்கு பேரையும் விடுவிக்கக்கோரி, தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரனால் அறிவிக்கப்பட்ட உண்ணா நிலைப் போராட்டம் நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினத்துக்குப் பின்னர் யாழ்.குடாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வன்னியில் இருந்து வந்து மீளக் குடியேறியவர்கள் எனப் பலரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

வடக்கில் தமிழர்கள் இவ்வாறு கைது செய்யப்படுவதைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

காலை 7.30 மணி முதல் பி.ப 4.30 மணிவரையும் யாழ்.முற்ற வெளிப் பகுதியில் அமைந்துள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் இந்த உண்ணா நிலைப்போராட்டம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

# சிங்களத்தில் வந்த சுற்றறிக்கை பின்னர் தமிழில் கிடைத்தது

யாழ்ப்பாணம்,டிசெ.20

பிரதேச சபைகள், நகர சபைகள், மாநகர சபை ஆகியவற்றில் ஏற்படும் வெற்றிடங்கள் தொடர்பில் உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கைக்களை எடுப்பது தொடர்பாக தனிச் சிங்கள மொழியில் அனுப்பட்ட சுற்றிக்கை இப்போது தமிழ் மொழியில் கிடைத்துள்ளது. இந்தச் சுற்றறிக்கை சிங்களத்தில் மட்டும் வெளியானமை குறித்து செய்திகள் வெளியாகியமையை அடுத்து இந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து குறித்த சுற்றறிக்கை யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தினால் தமிழ் மொழி மூலம் அனுப்பப்பட்டுள்ளது.

தேர்தல் திணைக்களத்தால் தனிச் சிங்கள மொழியில் அனுப்பப்பட்ட குறித்த சுற்றிக்கையே தற்போது தமிழ் மொழியில் அனுப்பட்டுள்ளது.

மேற்படி சுற்றறிக்கை சிங்கள மொழியில் மாத்திரம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தமையால் பதில் அனுப்புவதில் சபைகளின் செயலாளர்கள் இடர்களை எதிர் கொண்டு வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த சுற்றிக்கை யாழ். மாவட்டத் தேர்தல் திணைக்களத்தால் மொழிபெயர்க்கப்பட்டு தமிழ் மொழியில் அனுப்பப்பட்டுள்ளது. (த-5)

# சா/த வினாத்தாள் வெளியானமை குறித்து முழு விசாரணை தேவை

## ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, டிசெ.20

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் விஞ்ஞான பாட சிங்கள மொழி மூல வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியமை தொடர்பில் அரசு முழுமையான விசாரணை நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் அதிகாரிகள் மீது பாரத்தைப் போட்டுவிட்டு தாம் தப்பிக் கொள்ளும் நிலை கல்வியமைச்சின் பொறுப்பாளிகளுக்கு இல்லை என்று கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்கூட்டியே வெளியாகியமை இது முதல் சந்தர்ப்பம் இல்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"இவ்வாறு பரீட்சை வினாத்தாள் முன்கூட்டியே வெளியாகியமையின் காரணமாக அரசிற்கோ கல்வி அமைச்சிற்கோ எந்தவித பாதிப்புக்களும் இல்லை. ஆனால் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் இதன் காரணமாக பெரும் உளப்பிரச்சினைக்கு முகம்கொடுத்துள்ளனர்.'' என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்தது இலங்கை அரசு

கொழும்பு, டிசெ.20

இந்திய மோட்டார் வாகனங்களுக்கு விதிக்கப்படும் அதிகளவு சுங்கவரியை உடனடியாகக் குறைக்க முடியாது என்று இலங்கை அரசு கைவிரித்துள்ளது.

இந்திய மோட்டார் வாகன ஏற்றுமதியாளர்களுக்குக் கடும் பாதிப்பை ஏற்படுத்தும் வரி அதிகரிப்பை இலங்கை அரசு மேற்கொண்டிருந்தது.

இது குறித்து இந்திய அரசு கொழும்பிலுள்ள தமது தூதரகம் மூலம் இலங்கை அரசுடன் பேச்சுகளை நடத்தியது. எனினும், உடனடியாக இந்தக் குறைப்பை மேற்கொள்ள முடியாது என்று இலங்கை அரசு கூறியுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள இலங்கையின் பிரதிநிதி அமைச்சர் சரத் அமுனுகம, இந்த வரி அதிகரிப்பு இந்தியாவின் மீதான நேரடி நடவடிக்கை அல்ல என்றும், இலங்கையின் ஏற்றுமதி வருமானம் போதாது என்பதால் அதைச் சமப்படுத்திக் கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது எனவும் கூறியுள்ளார். (சி)

# கைது முறைப்பாடுகள் 43 ஆக உயர்ந்துள்ளன

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவித்து இதுவரையில் 43 முறைப்பாடுகள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் பதிவாகியுள்ளதாகப் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் கடந்த மாதம் 27 ஆம் திகதி மாவீரர் தினத்துக்குப் பின்னரான காலப் பகுதியில் பலர் தொடர்ச்சியாகக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். வவுனியா பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள், தமிழீழ விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிந்தவர்கள் எனப்பலரும் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர்.

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் கடந்த 17 ஆம் திகதி இருவரும், கடந்த 5 ஆம் திகதி கோப்பாய் பிரதேசத்தில் ஒருவரும், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 14 ஆம் திகதி ஒருவருமாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பான முறைப்பாடுகள் நேற்றுப்புதன் கிழமையே இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நேற்றையதினம் பதிவு செய்யப்பட்ட 4 முறைப்பாடுகளுடன் இதுவரையில் யாழ். குடாநாட்டில் 43 பேர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவற்றில் 2 முறைப்பாடுகள் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை தொடர்பிலும், 4 முறைப்பாடுகள் கிளிநொச்சி மாவட்டத்தில் கைது செய்யப்பட்டமை தொடர்பிலும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவாகியுள்ளன. (த-5)

# 10 இற்கும் மேற்பட்டோருக்கு வாராந்தம் டெங்கு தொற்று

யாழ்ப்பாணம், டிசெ. 20

தற்போது மழை வீழ்ச்சி குறைவடைந்திருந்தாலும் வாராந்தம் 10 இற்கும் மேற்பட்டோர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்படுகின்றனர். எனவே டெங்கு பற்றி விழிப்புணர்வுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் இதுவரை 76 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதத்தில் மாத்திரம் 153 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 620 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் பரவலாக அனைத்துப் பகுதிகளிலிருந்தும் பலர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். தற்போது மழை வீழ்ச்சி குறைவாக இருக்கின்றபோதும், டெங்கு நோய் பரவுகின்றமை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எனவே சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருந்து டெங்கிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். (த-4)

# மாநகர சபையில் அரசியல் ஒளிவிழா

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.மாநகர சபையில் இன்று வியாழக்கிழமை நடைபெறும் ஒளிவிழாவில் பங்குகொள்ள எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள். ''ஆளும்தரப்பு தன்னிச்சையாகச் செயற்பட்டு அரசியல் விழாவாக இதனை முன்னெடுக்கிறது. இந்தச் செயல் மாநகர சபை எதிர்கட்சி உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல். இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம்'' என்று மாநகர சபை எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், சிறப்பு விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமியும் அழைக்கப்பட்டுள்ளனர்.

விழா ஏற்பாட்டுக்கான கூட்டமொன்று சில தினங்களுக்கு முன்னர் நடத்தப்பட்டது. அதற்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை.

கடந்த காலங்களில் இந்த விழாவை நடத்துவதற்கென வர்த்தகர்களிடமிருந்தும் நலன் விரும்பிகளிடமிருந்தும் மாநகரசபை உத்தியோகஸ்தர்களிடமிருந்தும் பெருந்தொகைப் பணம் வசூலிக்கப்பட்டதாக அறிகிறோம். அது தொடர்பான வரவு - செலவு அறிக்கை இன்றுவரை எமக்கு காட்டப்படவில்லை. கடந்த காலத்தில் நடத்தப்பட்ட இந்த விழாக்களுக்கான வரவு -செலவு அறிக்கைகளும் எமக்கு வழங்கப்படவில்லை.

இன்று ஒளிவிழா அரசியல் விழாவாக நடத்தப்படுகின்றது. இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. முன்னர் நாம் ஒளிவிழாவைப் புறக்கணித்தோம் என்பதற்காக எமக்கு இம்முறை அழைப்பு அனுப்பாமல் இருக்க முடியாது. இது எமது சிறப்புரிமையை மீறும் செயல்.

சில தினங்களுக்கு முன்னர் கிராமிய மட்டத்திலான ஒருங்கிணைந்த மக்கள் பங்கேற்பு ரீதியிலான அபிவிருத்தித் திட்டம் தொடர்பான நூல் ஒன்று மாநகர சபையினால் வெளியிடப்பட்டது. யாழ்.மாநகர சபை எல்லையினுள் அடங்கும் 47 கிராமிய அலுவலர் பிரிவுகளுக்கும் தனித்தனியே புத்தகம் வெளியிடப்பட்டது. அந்த நூல் வெளியீட்டு நிகழ்வுக்கும் மாநகரசபை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கவில்லை.

யாழ்.மாநகர சபை நிர்வாகத்தை ஆளும்தரப்பினர் தமது சொந்த வீட்டு நிர்வாகம் போல கையாள்வது இது முதற்தடவையில்லை - என்றார். (த-4)

# வடக்கு மாகாண நிகழ்வில் சிங்களத்தில் தேசிய கீதம்

வடக்கு மாகாணத்தின் ஆளுநர் கிண்ணத்துக்காக நேற்று இடம்பெற்ற இறுதிப் போட்டியின்போது சிங்கள மொழியில் தேசிய கீதம் ஒலிக்க விடப்பட்டது.

வடக்குமாகாண அமைச்சுகளுக்கிடையிலான ஆளுநர் கிண்ணப் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நல்லூர் ஸ்தான பாடசாலையில் நேற்று இடம்பெற்றன.

நேற்றைய ஆட்டங்கள் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்ததால், வடமாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் குறித்த நேரத்துக்கே மைதானத்துக்குச் சென்றிருந்தனர்.

இருப்பினும் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி பி.ப. 3.10 மணியளவிலேயே வருகை தந்தார்.

வடக்கு மாகாணத்தின் நிகழ்வு ஒன்றில் இவ்வாறு சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைக்கப்பட்டமை ஆளுநரின் சர்வாதிகாரத்தனத்தைக் காட்டுவதாகப் பலரும் விசனம் தெரிவித்தனர். (த-5-23-288)

# 14 வயதுச் சிறுமி கர்ப்பம் குடும்பஸ்தர் ஒருவர் கைது

வடமராட்சி, டிசெ. 20

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சிறிய கிராமம் ஒன்றைச் சேர்ந்த, 14 வயதுச் சிறுமி ஒருத்தி கர்ப்பமடைந்தமை தொடர்பில் 42 வயதான குடும்பஸ்தர் ஒருவர் பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்.

சுமார் 6 மாதங்களுக்கு முன்னர் வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து இந்தச் சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டதாகவும், அச்சத்தின் காரணமாக அதனை அவர் யாரிடமும் சொல்லவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

சிறுமியின் உடல்நிலையில் மாற்றத்தைக் கண்ட பெற்றோர்கள் அவரை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, சிறுமி கர்ப்பமடைந்திருப்பது தெரியவந்ததாகக் கூறப்படுகின்றது.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இந்தச் சிறுமி மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுசேர்க்கப்பட்டுள்ளார். (த-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியர் பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ..20
'ஆறுதல்' நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்கான பட்டமளிப்பு விழா இன்று காலை 9 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினர்களாகப் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கௌரவ விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமியும், சிறப்பு விருந்தினராக மாகாணக் கல்வி பணிப்பாளர் வ.செல்வராசாவும் கலந்து கொள்வர். (த-9)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரை உற்சவம் நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (த-250)

## சாவகச்சேரி மீன் சந்தையை புனரமைப்பதற்கு இணக்கம்

தென்மராட்சி, டிசெ.20
சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானம், மீன் சந்தைக் கட்டடம் ஆகியவற்றைப் புனரமைக்க சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகரசபையின் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை, துணைத் தலைவர் கு.சதாசிவமூர்த்தி ஆகியோர் நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள விளையாட்டுத்துறை மற்றும் கடற்றொழில் அமைச்சுக்களின் அலுவலகங்களில் அமைச்சர்களான மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் ராஜித சேனரத்ன ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

இதன் பிரகாரம் சாவகச்சேரி பொது விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கு அமைக்கவும், 200 மீற்றர் ஓட்ட தூரம் கொண்ட மைதானம் புனரமைக்கவும் நிதி வழங்குவதாக இணக்கம் தெரிவித்து, ஜனவரி மாதத்தில் நிதி ஒதுக்கீட்டுக்கான உயர்மட்ட குழுவை அனுப்பி மதிப்பீடு செய்வதாக அமைச்சர் மஹிந்தானந்த உறுதியளித்துள்ளார்.

அதன் பின்னர் கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனரத்தனவுடன் மீன் சந்தையைத் தனங்களப்பு வீதியில் புதிதாக அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடிய போது அதற்கான மதிப்பீட்டைப் பார்வையிட்ட பின்னர் நிதி ஒதுக்கீடு செய்வதாக அவர் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது. (த-9)

# ஓமந்தை - யாழ். வரை ஏ-9 வீதி புனரமைப்பு இம்மாதம் முடிவுறும்

*யாழ்ப்பாணம், டிசெ.20*
*ஓமந்தை முதல் யாழ்ப்பாணம் வரையான ஏ-9 வீதியின் புனரமைப்புப் பணிகள் இந்த மாதத்துக்குள் முழுமையாகப் பூர்த்தியடையும்.*
*இந்தத் தகவலை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஓமந்தை முதல் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம் வரையான ஏ-9 வீதியின் புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து வருகின்றன. இந்த வீதிக்கு முழுமையாக 'காப்பெற்' போடப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் தற்போது துரிதப்படுத்தப்பட்டுள்ளன. அவை இந்த மாத இறுதிக்குள் முற்றாக முடிவடைந்துவிடும்.

சில இடங்களில் மட்டும் சிறுசிறு புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளன. குறிப்பாகக் கொடிகாமத்தில் சிறிய தூரம் வரையான வீதிக்கு 'காப்பெற்' இடப்படவேண்டியுள்ளது. அந்தப் பணி இன்னும் ஒரு வாரத்துக்குள் முடிக்கப்பட்டு விடும்.

வருட இறுதிக்குள் பணிகள் முழுமையாகப் பூர்த்தி அடைந்துவிடும் - என்றார்.

புத்தூர் முதல் புளியங்குளம் இடையிலான ஒன்றரைக் கிலோமீற்றர் வீதி புனரமைப்பு இன்னும் முடிவடையவில்லை.

இதேவேளை, குடாநாட்டில் கே.கே.எஸ். வீதி, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி ஆகியவற்றின் புனரமைப்புப் பணிகளும் தற்போதுதுரிதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த வீதிகள் அகலிப்பு மற்றும் புனரமைப்புப் பணிகள் கட்டம், கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வீதிகளின் உள்ள மதகுகள், பாலங்கள் ஆகியவற்றின் கட்டுமானப் பணிகளால் தான் வீதிப் புனரமைப்பில் சிறிது தாமதம் ஏற்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயரதிகாரி கூறினார்.

ஆயினும் அடுத்த ஆண்டு ஒகஸ்ட் மாதத்துக்குள் இவற்றின் புனரமைப்புப் பணிகள் முடிக்கப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## விதை உ.கிழங்கு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், டிசெ..20
குடாநாட்டுச் சந்தைகளில் விதை உருளைக்கிழங்குகள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

உள்ளூர் உருளைக்கிழங்குச் செய்கைக்கென விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உருளைக்கிழங்குகளே இவ்வாறு விற்பனைக்கு வந்துள்ளன என்று கூறப்பட்டது.

உருளைக்கிழங்கின் விலை உயர்வை அடுத்தே சிலர் இவ்வாறு விதை உருளைக் கிழங்கை விற்பனை செய்து வருகின்றனர்.

இதேவேளை, உள்ளூர் உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் அதிக ஆர்வம்காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## தீவுப்பகுதிக்கும் கேபிள் தொலைபேசி

யாழ்ப்பாணம், டிசெ.20
தீவுப்பகுதிக்கும் விரைவில் கேபிள் வசதி மூலமான தொலைபேசி இணைப்பை வழங்குவதற்கு ரெலிக் கொம் நிறுவனம் நடவடிக் கையை மேற்கொண்டுள்ளது.

இதற்கெனப் பண்ணையிலிருந்து இணைப்பை விநியோகிப்பதற்கு முன்னேற்பாடாகத் தற்போது தொலைபேசிக் கம்பங்கள் நடப்பட்டு வருகின்றன.

வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு போன்ற பகுதிகளுக்கு மேற்படி இணைப்பு வசதிகள் அடுத்த வருடம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் 'இம்சான்' பரிவர்த்தனை அலகுகள் பொருத்தப்பட்டு இதன் மூலம் பிரதேச மக்களுக்கு கேபிள் தொலை பேசிகள் விநியோகிக்கப்படவுள்ளன. (வ-17)

## 40 ஆயிரம் லீற்றர் கொள்ளும் தண்ணீர்த் தாங்கி வலி.மேற்கில்

யாழ்ப்பாணம், டிசெ..20
வலி.மேற்குப் பிரதேச சபையில் ஜே/165 கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட வட்டு தெற்கு, முதலி கோயிலடியில், ஒரு கோடி எட்டு இலட்சம் ரூபா செலவில் 40 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர்த் தாங்கி அமைக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேச சபையும் 'வேள்ட் விசன்' நிறுவனமும் இதற்கு பங்களித்துள்ளன.

விரைவில் இந்த தண்ணீர்த் தாங்கி மக்களிடம் கையளிக்கப்பட்டு நீர் விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்படும் என்று கூறப்பட்டது.

வட்டு. முதலி கோயிலடி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் அல்லற்படுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்ட தகவலையடுத்து பிரதேச சபைத் தலைவரால் எண்ணக்கரு பத்திரம் தயாரிக்கப்பட்டு 'வேள்ட் விசன்' நிறுவனத்திடம் வழங்கப்பட்டது.

இதனையடுத்து 40 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய தண்ணீர்த் தாங்கி திட்டம் தேவை எனவும், குறிப்பிடப்பட்டது.

இந்தத் திட்டம் 'வேள்ட் விசன்' நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-50)

## பாதை மாறி பருத்தித்துறை வந்த மன்னார் இளைஞர்

**அந்தரித்த மாற்று வலுவுள்ள இளைஞர் ஒருவரை பருத்தித் துறையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பராமரித்து வந்தனர்.**

பாதை மாறி வந்து பருத்தித்துறை நகரில் இரவு வேளையில் அந்தரித்த மாற்று வலுவுள்ள இளைஞர் ஒருவரைப் பருத்தித்துறை பன்னைக்கட்டையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பராமரித்து பாதுகாத்து வருகின்றனர்.

மன்னாரைச் சேர்ந்த இந்த இளைஞனின் பெயர், விதிவிடம் போன்ற விவரங்களை அறிய முடியாத நிலையில் இளைஞரைப் பராமரித்து வந்த குடும்பத்தினர் ஊடகம் ஒன்றில் விளம்பரம் பிரசுரித்ததைத் தொடர்ந்து மன்னாரில் உள்ள இளைஞனின் பெற்றோரும் மன்னார் பொலிஸாரும் அந்தக் குடும்பத்தினருடன் நேற்று செவ்வாய்க்கிழமை தொடர்பு கொண்டனர்.

அந்தரித்த இளைஞனை அவரது பெற்றோர்களிடம் இன்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் வைத்து ஒப்படைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-8)

## இந்தியாவிலிருந்து நவீன இயந்திரம் பனையில் சுலபமாக ஏறுவதற்கு

நவீன முறையில் தயாரிக்கப்பட்ட பனை மரம் ஏறும் இயந்திரம் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு தருவிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மிகவும் சுலபமாகப் பனை மரத்தில் ஏறக்கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரத்தை இந்தியாவில் இருந்து எடுத்து வருவதற்குச் சபை ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே சபையினால் தயாரிக்கப்பட்ட பனை மரம் ஏறும் இயந்திரத்தின் மூலம் சீவல் தொழிலாளிகள் முழுமையாகப் பயனடையவில்லை எனவும், இதனாலேயே இந்தியாவில் இருந்து புதிய இயந்திரம் எடுத்துவரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

## நிகழ்வுகள் இன்று

**ஒளிவிழா**

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாநகர சபை வளாகத்தில் ஒளிவிழா நடைபெறவுள்ளது.'

விழாவின்போது நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

**ஒருங்கிணைப்பு கூட்டம்**

பளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று வியாழக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேசத்தில் உள்ள திணைக்களத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் சி.சத்தியசீலன் கேட்டுக்கொண்டுள்ளார். (த-9)

## வலி.கிழக்கு 'பட்ஜெட்' மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.20
வலி.கிழக்கு பிரதேச சபையின் 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது என்று சபையின் தலைவர் அ.உதயகுமார் தெரிவித்தார்.

இந்த 'பட்ஜெட்' தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் அடுத்த வாரத்தில் இடம்பெறவுள்ளது. குறித்த 'பட்ஜெட்டில்' தெரிவிக்கப்பட்டிருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் பார்வைக்கு வைக்கப்படவுள்ளன.

புத்தூர் அச்சுவேலி, கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் போன்ற சபையின் உப அலுவலகங்களில் இந்த 'பட்ஜெட்' மக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## குடும்பப் பெண் மீது கொட்டனால் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசெ.20
வீட்டு முற்றத்தினூடாக செல்ல வேண்டாமென கூறிய பெண்ணை மூவர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தென்மராட்சி தெற்கு அறுகுவெளியில் இடம்பெற்றது.

அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இந்தப் பகுதியில் அனைவரும் வேலிகளை அடைத்து பயிர்களை நாட்டியுள்ளனர்.

இங்கு சிலர் போக்குவரத்து சுலபத்துக்காகக் காணிகள் ஊடாகப் பாதை அமைத்துப் பயணித்து வருகின்றனர்.

காணிகள் ஊடாகப் பாதை அமைக்கப்படுவதால் கட்டாக்காலிக் கால்நடைகள் நுழைந்து பயிர்களை நாசம் செய்கின்றன.

இவ்வாறு நேற்று முன்தினம் காணிகளுக்கு ஊடாகப் பயணித்தவர்களைத் தடுத்த குடும்பப்பெண் ஒருவர் இனி இந்த வழியால் பயணிக்க வேண்டாம் எனக் கூறியுள்ளார்.

இதனால் ஆத்திரமுற்ற மூவர் கொட்டன்களுடன் வந்து குறித்த பெண்ணைத் தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

காயமடைந்த பெண் இரத்தம் சிந்திய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுச் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேயிடத்தைச் சேர்ந்த ஆனந்தராசா கமலாதேவி (வயது-50) என்பவரே காயமடைந்தவராவார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்–கொழும்பு பஸ் சேவை நேற்று முடங்கியது

கிளிநொச்சியில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் ஒன்று நேற்று புத்தளம் பகுதியில் நீரில் அடித்துச் செல்லப்பட்டது. இதில் பயணித்த சுமார் 50 இற்கும் மேற்பட்ட பயணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

தென்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் அடை மழையால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. ஆறுகள், குளங்கள் பெருக்கெடுத்துப் பாய்கின்றன.

இதனால் வடபகுதியில் இருநபுது கொழும்புக்கான பஸ் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் வீதியூடான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதால் தற்போது குருநாகல் வழியை போக்குவரத்துக்காகப் பயன்படுத்துவதாக பஸ் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை வடபகுதியில் இருந்து கொழும்பு நோக்கி சொகுசு பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை எனவும் தெரியவருகிறது.

புத்தளம் ஊடான போக்குவரத்துக்கள் தடைப்பட்டதால் வெள்ளப் பாதிப்புக்குள்ளான மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்குவதிலும் சிரமத்தை எதிர்கொண்டதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-16)

## கொழும்பிலும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உள்ளதாக கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸும் ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஸல்மை ரசூலும் கூட்டாக அறிவித்துள்ளனர்.

மேலும், பல உயர்மட்ட அரச அதிகாரிகளுடனான சந்திப்பை மேற்கொண்ட ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் பொருளாதாரம், கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சருடனான கலந்துரையாடலின்போது, தாம் ஒரே விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதாகவும் உள்நாட்டில் உருவான தீர்வின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாகவும் இரு அமைச்சர்களும் கூறினர்.

நேற்றுமுன்தினம் கொழும்பு வந்த ஆப்கானிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஸல்மை ரசூல் நாளை வெள்ளிக்கிழமைவரை இலங்கையில் தங்கியிருப்பார். (சி)

## பன்றி வெடி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஒருவர் படுகாயமடைந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

சம்பவத்தை உடனடியாக அவர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த வரணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

பன்றியைக் கொல்ல கூடிய உள்ளூரில் தயாரிக்கப்பட்ட வெடி பொருள்கள் வெடித்தே இவர் உயிரிழந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிளில் சென்ற இருவர் இந்த வகை வெடிபொருளை கொண்டு சென்றபோது அது வெடித்து அவர்களில் ஒருவரே உயிரிழந்துள்ளார். மற்றையவர் தப்பிச் சென்றுவிட்டார். மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்தை நேரில் சென்று பார்வையிட்ட சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் எஸ். கணபதிப்பிள்ளை சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-16-9)

## காயங்களுடன்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

ஒப்படைக்கப்பட்டுள்ளது. கருணாநிதியின் இறப்புக் குறித்த விசாரணையை பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் நடத்தினார் உடற்கூற்றுப் பரிசோதனைக்கும் உத்தரவிட்டார்.சடலத்தில் காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (த-8)

## இராணுவ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னரான இராணுவ ரீதியான உறவைக் கட்டியெழுப்ப இந்தியாவும், இலங்கையும் முயன்று வருவதாக அது மேலும் தெரிவிக்கின்றது. (-16)

## நிலம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

கசிவே முன்னர் நடந்த வெடிப்புக்குக் காரணமெனக் கண்டறியப்பட்டதாகவும், தற்போதும் இதே நிகழ்வே இடம்பெற்றிருக்கலாமெனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (ஐ-16)

## கோத்தபாய ஜனாதிபதியாகும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பல்கலைக்கழகங்களையும் ஆக்கிரமிக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்பதை அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் இன்று பயங்கரவாதம் இல்லை. இருக்கும் ஒரே பயங்கரவாதம் அரச பயங்கரவாதம்தான். இந்த அரச பயங்கரவாதம் எதிர்காலத்தில் இந்த நாட்டில் வடக்கிலோ, தெற்கிலோ அரசு அல்லாத பயங்கரவாதத்தை மீண்டும் உருவாக்க போகிறது.

மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பியும், விடுதலைப் புலிகளும் இந் நாட்டின் சட்டபூர்வ அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கினார்கள். தமிழ் புலிகள் வடக்கு, கிழக்கில் தனி ஒரு நாட்டை உருவாக்க முனைந்தார்கள். சிங்கள ஜே.வி.பியினர் முழு நாட்டையும் கைப்பற்ற முனைந்தார்கள். இரு சாராருமே ஆயுதம் தூக்கியவர்கள்தான். இருசாராருமே ஆட்சியை முழுதாகவோ, பகுதியாகவோ பிடிக்க ஆயுதம் தூக்கி போராடியவர்கள்தான்.

புலிகள் வடக்கு, கிழக்கில் குறிப்பிட்ட பிரதேசங்களை தமது கட்டுப்பாட்டு ஆட்சியில் வைத்திருந்தைப்போல், ஜே.வி.பியினரும் தமது போராட்டத்தின்போது தெற்கில் மாத்தறை மாவட்டத்தில் சில பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் பிடித்து வைத்து அங்கு ஆட்சி நடத்தியவர்கள்தான்.

எனவே, இறந்துபோன ஜே.வி.பி. போராளிகளை தெற்கில் நினைவுகூரும் போது, புலி போராளிகளையும் வடக்கில் நினைவுகூருவது தவறாக முடியாது. அந்த அடிப்படையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களைச் சிறைப்பிடித்து, புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பியது ஏற்றுக்கொள்ள முடியாதது. இந்த நாட்டில் இரண்டு சட்டம் இருக்க முடியாது. இதனாலேயே யாழ். பல்கலைக்கழக மாணவர் வகுப்புகளை புறக்கணித்து வருகிறார்கள். இதை அரசு புரிந்து கொள்ளவேண்டும். மாணவர்கள் உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

தெற்குப் போராட்டங்களில் போது அன்றைய தெற்கு போராளிகள் தாம் பிடித்து வைத்திருந்த பகுதிகளில் அந்நாள்களில் காட்டு நீதிமன்றங்களை நடத்தினார்கள். மாடு திருடியவருக்கும், கோழி திருடியவருக்கும் அந்நாட்களில் அவர்கள் வழங்கிய தீர்ப்புகள் பிரசித்தமானவை. அந்த போராட்டங்களில் காட்டுத் துப்பாக்கிகளை தூக்கி சுட்டு விளையாடியவர்களே இன்று அரசுக்குள் இருக்கிறார்கள். அமைச்சர் விமல் வீரவன்ஸவுக்கு இது நன்கு தெரியும். இந்தக் காட்டு துப்பாக்கி வரலாற்றை விமல் வீரவன்ஸவால் மறுக்க முடியுமா?

தனி நாட்டை புலிகள் கோரினார்கள் என்றால், இவர்கள் அதைவிட ஒருபடி மேலே போய் முழு நாட்டையுமே கோரினார்களே. இன்று இந்த தென்னிலங்கை போராளிகள் தான் இங்கே நினைவுகூரப்படுகிறார்கள். அதற்கு அனுமதி இருக்கிறது. ஆனால், வடக்கில் இல்லை.

இதன் பின்னால் உள்ள காரணம், ஒன்றே ஒன்றுதான். இவர்கள் சிங்களவர்கள். அவர்கள் தமிழர்கள். ஒரே காரியத்தைச் செய்யும் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் வெவ்வேறு தண்டனைகள். இதனாற்றான் யாழ். பல்கலைக்கழகத்து மாணவர்களை நள்ளிரவில் வீடு புகுந்து, திருடர்களை, மிருகங்களைப் பிடிப்பதைபோல் பிடித்து இழுத்துச் சென்றுள்ளார்கள். இதை உலகம் ஒருபோதும் ஏற்காது.- என்றார். (சி)

## தாதியர் ...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பணிகளை மட்டும் மனிதாபிமான அடிப்படையில் செய்தனர். ஏனைய பணிகள் கைவிடப்பட்டன.

இதனால் கிளினிக்குகளுக்குச் செல்லும் நோயாளர்கள் மட்டுமன்றி விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களும்கூட பாதிக்கப்பட்டனர். தூர இடங்களிலிருந்து வைத்தியசாலைக்குச் சென்றிருந்த நோயாளர்கள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

பல கோரிக்கைகளை முன்வைத்து தாதியர்கள் ஏற்கனவே பல போராட்டங்களில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து சில கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன. எனினும் 3 கோரிக்கைகள் இன்றுவரை நிறைவேற்றப்படாது இருந்து வருகின்றன.

அவற்றை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே தாதியர்கள் தமது பணிப்புறக்கணிப்பு, சுகவீன விடுப்புப் போராட்டங்களைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். கோரிக்கைகளை நிறைவேற்றும்வரை தமது போராட்டம் தொடரும் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (த-4)

# உயிரிழப்பு 22ஆக உயர்வு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதோடு மாத்தளை மாவட்டத்தில் அதிக மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில்தொடர்ந்து பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் படுவான்கரை மட்டக்களப்பு நகருக்கான அனைத்துப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. படுவான்கரையில் உள்ள கிராமங்களுக்கிடையிலான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

படுவாங்கரை, மட்டக்களப்பு நகர் என்பவற்றிற்கான போக்குவரத்து இயந்திரப் படகுச்சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமங்களுக்கிடையிலான போக்குவரத்திற்குத் தோணிகள் பயன்படுத்தப்பட்டுவருகின்றன.

ஜி.சீ.ஈ. (சா/த) பரீட்சைக்கான வினாத்தாள்கள் கொண்டு செல்வதற்கும், பரீட்சை கடமைக்கான ஆசிரியர்களை ஏற்றுவதற்கும் இயந்திரப் படகுச்சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மட்டக்களப்பிலிருந்து போக்குவரத்தை மேற்கொள்வதற்காக இருந்த ஒரேயொரு பணிச்சங்கேணி பாலம் நேற்று சேதமடைந்துள்ளதால் மட்டக்களப்புக்கும் கொழும்புக்குமிடையிலான போக்குவரத்தும் அவ்வீதியினுடனான போக்குவரத்தும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

காலநிலை சீர்கேட்டால் ஏற்பட்டுள்ள சேத விவரங்கள் மாவட்ட அடிப்படையில் வருமாறு:-

**மட்டக்களப்பு மாவட்டம்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 34,753 குடும்பங்களைச் சேர்ந்த 135,646 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இருவர் காணாமற்போயுள்ளனர். சுழல் காற்று காரணமாக 115 வீடுகள் முழுமையாகவும் 607 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. நிர்க்கதியான 556 குடும்பங்களைச் சேர்ந்த 2,169 பேர் 7 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**அம்பாறை மாவட்டம்**

சீரற்ற காலநிலையால் அம்பாறை மாவட்டத்தில் பலர் பாதிப்படைந்துள்ளனர். பலர் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இங்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

**திருகோணமலை மாவட்டம்**

திருகோணமலை மாவட்டத்திலும் மக்கள் பாதிப்படைந்து இடம்பெயர்ந்துள்ளனர். இங்கு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

**மாத்தளை மாவட்டம்**

மாத்தளை மாவட்டத்தில் 952 குடும்பங்களைச் சேர்ந்த 2,930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாத்தளையில் அதிகூடியளவில் 8 இறப்புகள் பதிவாகியுள்ளன. 13 பேர் காயமடைந்துள்ளனர்., 10இற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். 32 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. அதேவேளை, 82 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. 628 குடும்பங்களைச் சேர்ந்த 1,583 பேர் 15 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**கண்டி மாவட்டம்**

கண்டி மாவட்டத்தில் இதுவரை 101 குடும்பங்களைச் சேர்ந்த 402 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நால்வர் உயிரிழந்துள்ளனர். 10 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 5 வீடுகள் முழுமையாகவும் 44 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த 35 குடும்பங்களைச் சேர்ந்த 160 பேர் 3 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**நுவரெலியா மாவட்டம்**

நுவரெலியா மாவட்டத்தில் சீரற்ற காலநிலையால் 138 குடும்பங்களைச் சேர்ந்த 561 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 33 வீடுகள் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன. இடம்பெயர்ந்த 19 குடும்பங்களைச் சேர்ந்த 123 பேர் 3 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**பொலன்னறுவை மாவட்டம்**

பொலன்னறுவை மாவட்டத்தில் 2,271 குடும்பங்களைச் சேர்ந்த 5,967 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். 20 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 30 வீடுகள் முழுமையாகவும் 147 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. 2,135 குடும்பங்களைச் சேர்ந்த 5,582 பேர் 17 தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**பதுளை மாவட்டம்**

பதுளை மாவட்டத்தில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 233 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மூவர் உயிரிழந்துள்ளனர். 5 வீடுகள் முழுமையாகவும் 4 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 15 குடும்பங்களைச் சேர்ந்த 49 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

இங்கு 3,283 குடும்பங்களைச் சேர்ந்த 13,211 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இருவர் காணாமல் போயுள்ளனர்.

**மொனராகலை மாவட்டம்**

மொனராகலை மாவட்டத்தில் 86 குடும்பங்களைச் சேர்ந்த 306 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 58 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. பாதிக்கப்பட்ட 6 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் ஒரு தற்காலிக முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

**குருநாகல் மாவட்டம்:**

குருநாகல் மாவட்டத்தில் 3,558 குடும்பங்களைச் சேர்ந்த 12,991 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**புத்தளம் மாவட்டம்**

புத்தளம் மாவட்டத்தில் 706 குடும்பங்களைச் சேர்ந்த 3,286 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

**கொழும்பு - புத்தளம் போக்குவரத்து தடை**

இதேவேளை, புத்தளம் - கொழும்பு வீதியின் பல பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு சிலாபம் - புத்தளம் வீதி மூடப்பட்டுள்ளது. இதனால் மாற்று வழியூடாகப் போக்குவரத்து இடம்பெறுகின்றது.

**நீரில் மூழ்கியது சிலாபம் நகர்**

புத்தளம் மாவட்டத்தில் பெய்துவரும் கடும் மழை காரணமாக சிலாபம் நகரம் நீரில் மூழ்கியுள்ளது.

சிலாபம் பஸ் தரிப்பிடம், கடைவீதி உள்ளிட்ட பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. முன்னேஸ்வரம் குளத்தின் அணைக்கட்டை உடைத்து நீரை வெளியேற்ற இராணுவத்தினரும், பொலிஸாரும் நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

சிலாபம் நகரிலிருந்து உள் செல்லவோ வெளியேறவோ முடியாத நிலை காணப்படுகின்றது.

**ஐந்து மீனவர்களைக் காணவில்லை**

இதேவேளை, மீன்பிடிப்பதற்காகக் கடந்த 16ஆம் திகதி இரவு கடலுக்குச் சென்ற மீனவர்கள் ஐவர் இதுவரையில் வீடு திரும்பவில்லை என சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பங்கதெனியாவைச் சேர்ந்த மூன்று மீனவர்களும் சுதுவெல்ல பகுதியைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் என்று சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன மீனவர்களின் உறவினர்கள் செய்த முறைப்பாடு தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

**தொற்றுநோய்கள் பரவும் ஆபத்து**

இதேவேளை, நாட்டின் பல பாகங்களிலும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் தொற்றுநோய்கள் பரவக்கூடும். எனவே, மக்கள் மிக அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# தெற்கின் அரசியல் தலைவர்கள் இனியேனும் நல்ல மனதுடன் சிந்திக்கலாகாதா?

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சமீபத்தில் லண்டன் கிங்ஸ் கல்லூரியில் உரையாற்றுகையில், பயங்கரவாதிகளுக்கு எதிரான தந்திரோபாயங்களைத் திட்டமிடுவதற்குமுன், அதன் தோற்றத்துக்கான காரணத்தை இனங்காணவேண்டும் என்று தெரிவித்துள்ளார். இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தின் தற்போதைய இழுபறி நிலையைக் கருத்தில் கொண்டே சந்திரிகா இப்படியான ஒரு கருத்தை முன்வைத்திருப்பதாகத் தெரிகிறது.

அதாவது, ஒரு போராட்டத்தை முறியடிப்பதற்குத் திட்டமிடுவதற்கு முன்னர் அப்போராட்டம் உருவானதற்கான அடிப்படைக் காரணத்தைக்கண்டுபிடித்துவிட்டால் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடலாம் என்பதே சந்திரிகாவின் கருத்துநிலைப்பாடெனக் கருதலாம்.

இலங்கையின் முதலாவது பெண் ஜனாதிபதியான சந்திரிகா, சாதாரண ஓர் அரசியல்வாதி அல்லர். இலங்கையின் இரு முன்னாள் பிரதமர்களின் புதல்வி என்ற அரசியல் பின்புலம் கொண்டவர் அவர். 1977 இல் ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் 17 வருடகாலப் பலம் பொருந்திய தொடரான ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தவர். 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெற்றபோது தமிழர் பிரச்சினைக்குத் தமது ஆட்சிக் காலத்தில் நிரந்தரத் தீர்வொன்றைக் காண்பார் என்ற நம்பிக்கை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்தது.

ஆனால் இறுதியில் தமிழர் பகுதிகளில் மிகவும் மோசமான இராணுவ அடக்குமுறை அவரது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டது. பெரும் அழிவுகள் ஏற்பட்டன. பேச்சுகள் மூலமோ இராணுவ நடவடிக்கை மூலமோ சந்திரிகாவால் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் எதனையும் சாதிக்க முடியவில்லை.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? அவை எவ்வாறு உண்டாகின? பிரச்சினைகளுக்கான அடிப்படைக் காரணங்கள் எவை? அவற்றுக்கு எப்படித் தீர்வுகாண முடியும்? என்பவை சந்திரிகாவுக்குத் தெரியாதவை அல்ல. அவை எல்லாவற்றையும் தெரிந்திருந்தும், 1994இல் புலிகளுடன் பேசுவதற்கு பாலபட்டபெந்தி தலைமையிலான ஒரு பலவீனமான குழுவை அவர் யாழ்ப்பாணம் அனுப்பி வைத்திருந்தார். பிரச்சினையின் ஆழம் என்னவெனச் சந்திரிகாவுக்குத் தெரிந்திருக்காது என்று கூற இயலாது. மாறாக கபட நோக்குடன் தமிழர் பகுதிகளில் இராணுவ நடவடிக்கையைத் திட்டமிட்டுக் கொண்டு அதனை நியாயப்படுத்துவதற்காகவே அவ்வேளை பேச்சு என்ற போர்வையில் அரசியல் முதிர்ச்சி இல்லாத ஒரு குழுவை அவர் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார் என்பது பின்னர் கசிந்தது. தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் பிரதிநிதிகளுடன் நான்கு சுற்றுப் பேச்சுகள் நடந்த நிலையில் எந்தவிதப் பயனும் இன்றி பேச்சுக்கள் முறிவடைந்தமை வரலாறு.

நாட்டு மக்களின் அமோக ஆதரவுடன் 1994இல் ஜனாதிபதியான வேளையில் சந்திரிகா விரும்பியிருந்தால் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றைக் கண்டிருக்கமுடியும். பிரிவினைவாதிகளுக்கு எதிரான தந்திரோபாயங்களை வகுக்கமுன் அதன் தோற்றத்துக்கான காரணம் இனங்காணப்பட வேண்டும் என்று தற்பொழுது அவர் கூறுவது அவரது காலம்பிந்திய ஞானம் என்றே கொள்ளப்படத்தக்கது. அதாவது சுடலை ஞானம் அல்லது சர்வ தேசத்தை ஏமாற்றும் ஒரு தந்திரம் எனவும் கருதத்தக்கது. அதே போன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சகல வாய்ப்புகளையும் தவறவிட்டுவிட்டு பின்னர் ஒருகாலத்தில் இப்படித்தான் கூறக் கூடும்.

மொத்தத்தில் சிங்கள மக்களின் பெரும்பான்மை வாக்குகளால் பதவிக்கு வரும் அரசுகள் எதுவுமே ஒருபோதும் தமிழர் பிரச் சினையைத் தீர்க்கப்போவதில்லை. இதுதான் யதார்த்தம். இதே விதத்தில்தான் சந்திரிகாவின் தந்தை எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் செயற்பட்டார். தாயார் சிறிமாவோவும் அதே பாணியையே பின்பற்றினார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் கூட இதே போக்குடன் செயற்பட்டார். இப்பிரச்சினையில் மட்டும் தெற்கின் அரசியல் கட்சிகளிடையே பெரிதாகப் பேதம் இல்லை. சுற்றிச் சுற்றி சுப்பரின் கொல்லைக்குள் என்பது போல தமிழர்கள் மீதான அடக்குமுறை, அரசியல் உரிமைகளில் சம அந்தஸ்தும் சம உரிமைகளும் அற்ற நிலை என்ற வாய்ப்பாடே உச்சத்தில் உயர்ந்து நிற்கிறது. நாட்டின் இன்றைய நிலைமைக்கு இதுதான் காரணம். இதனால்தான் 2002 பேச்சுகளில் தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு நோர்வேயின் அனுசரணையைக் கோரினர்.

இன்று அனைத்தையும் இழந்து மீண்டும் சர்வதேசத்தின் உதவியை நாடவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. உண்மையில் இனப்பிரச்சினை உள்நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டியது. இன்று ஐ.நா. வரை சென்றிருப்பதற்கு தென்னிலங்கையில் பதவிக்கு வந்த சகல அரசுகளுமே காரணம். இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானதற்கான முழுக்காரணமும் தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளும், உரிமைகள் பறிப்புமே.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சகல வாய்ப்புகளையும் தவறவிட்டுவிட்டு பிரச்சினைக்கான காரணம் இனம் காணப்பட வேண்டும் என்று கூறுவது நகைப்புக்கிடமானது. 2002இல் நோர்வேயின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அப்போதைய பிரதமர் ரணில் மேற்கொண்ட முயற்சிக்கு சந்திரிகா முழு ஆதரவு வழங்கி இருந்திருந்தால் பேச்சு முறிவடைவதைத் தவிர்த்திருக்கலாம்.

அப்போது ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா, பாதுகாப்பு அமைச்சு உட்பட முக்கிய மூன்று அமைச்சுகளை ரணிலின் அரசிடமிருந்து பறித்துக்கொண்டதுடன், நாடாளுமன்றத்தையும் அதன் ஆயுள் காலம் முடியும் முன்னர் கலைத்தார். ஆகவே, நாடு சர்வதேசத்தின் பிடியில் சிக்கி உள்ள இன்றைய நிலைமைக்கு அனைத்து தென்னிலங்கைத் தலைமைகளும் பொறுப்பேற்கவேண்டும்.

தமிழர்களுக்குச் சேர வேண்டிய, அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத உரிமைகளை, கொழும்பு அரசுகள் 60 ஆண்டு காலமாகத் தட்டிப் பறித்து, கையகப்படுத்தி வைத்திருக்கும் நிலை, முற்றாக நீக்கப்பட வேண்டும்.

சிறு பிள்ளைகளுக்கு உணவு ஊட்டுவதற்காக நிலாவைக் காட்டி காரியத்தை முடிப்பது போன்ற புலுடாகள் இனிமேல் அவியாது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் சார்ந்த விடயம், இப்போது கணிசமான அளவு அனைத்துலக மயப்பட்டுவிட்டது. ஆகையால் இன்றைய அரசு தனது உரிமை மறுப்பு என்ற அழுங்குப் பிடியை நீக்கி, நாட்டின் பெரும்பான்மையினருக்கு உள்ள உரிமைகள் வழுவின்றி, பிசிறின்றி சிறுபான்மையினருக்கும் வழங்கப்பட வேண்டும் என்ற நிலைக்கு மாற வேண்டும். அதுவே இன்றைய தேவை.

கடந்த காலத்தைய அனுபவங்களை அடிப்படைகளாக்கி தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வழங்குவதற்கு தென்னிலங்கைத் தலைவர்களுக்கு நல்ல மனம் வேண்டும். இத்தனை கால இழப்புக்குப் பிறகாவது அது குறித்து நேர்மையுடன், சுத்தமான மனதுடன் கொழும்புத் தலைவர்கள் சிந்திக்கப் போவது எப்போது...?

# ஒரு லட்சம் பனம் விதைகள் அடுத்த ஆண்டில் நடப்படும்

யாழ்ப்பாணம்,டிசெ.20

ஒரு லட்சம் பனம் நாற்றுக்களை நடுகை செய்யும் திட்டம் அடுத்த ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்படும் என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரினால் அழிந்து போன பனை வளத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு பனை அபிவிருத்திச் சபை பாடுபட்டு வருகின்றது. இதற்காகப் பல்வேறு செயற் திட்டங்களை முன்னெடுக்கிறது.

அடுத்த ஆண்டில் சுமார் ஒரு லட்சம் பனம் நாற்றுக்களை நடுகை செய்யும் பெரிய திட்டம் ஒன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக இந்தப் போகத்தில் அதிக அளவிலான பனம் விதைகளும் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு பனம் நாற்று நடுகை செய்யும் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கச் சபை தற்போது தயாராகி வருகின்றது.

கைதடி மற்றும் கோப்பாய் பிரதேசத்தில் நடப்பட்ட பனம் நாற்றுக்கள் அனைத்தும் நல்ல நிலையில் காணப்படுகின்றன- என்றார். (த-17)

# விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ.20

இலங்கை வங்கியாளர்கள் சங்கத்தினால் நடத்தப்பட்ட வங்கி இயல் மற்றும் நிதித்துறை தொடர்பான பரீட்சையில் தோற்றி வெற்றி பெற்றவர்களுக்கான சாதனை விருது வழங்கலும் சங்கத்தின் 10 ஆவது வருடாந்த தினமும் வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரி மாணவர்கள் பிரிவில் நடைபெறவிருக்கின்றது.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பணிப்பாளர்கள் சபையின் தலைவர் வண.டாக்டர் டானியல் எஸ்.தியாகராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் பிரதிப் பணிப்பாளரும் வடமாகாண முகாமையாளருமான எஸ். கௌரிசங்கர் பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார்கள்.

# கூ.சங்கங்களின் திட்டங்களுக்கு ஆளுநரின் அனுமதி வேண்டுமாம்

அச்சுவேலி,டிசெ.20

கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் எந்த ஒரு நிறுவனத்திடமோ அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களிடமோ நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றின் அனுசரணையுடன் வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமிடத்து, வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

மாவட்டங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவு உதவி ஆணையாளர்கள் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட உதவி கூட்டுறவு ஆணையாளரின் ஒப்பத்துடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புகளுக்கு 'மிக முக்கியம்' என்ற தலைப்புடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எந்த ஒரு நிறுவனத்துடனோ, அல்லது அரச சார்பற்ற அமைப்பின் நிதியுதவியுடனோ மேற்கொள்ளும் வேலைகள் தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவு சங்க பதிவாளரும் (வடக்குமாகாணம்) செயலாளர் ஊடாக பிரதிப் பிரதம செயலாளர் (வடக்கு மாகாணம்) ஊடாக பிரதம செயலாளர் (வடக்கு மாகாணம்) ஊடாக ஆளுநரின் அனுமதி பெறப்பட்டே வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் இறுதி வாரத்தில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கட்டுப்பாடுகளை மிக இறுக்கமானமுறையில் பாடசாலைகள் மற்றும் கல்வி அமைப்புகள் மீதும் கடைப்பிடிக்குமாறு வற்புறுத்தப்பட்டுள்ள நிலையில், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்கள் மீதும் ஆளுநரினால் திணிக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-11)

# வசந்தபுரம் குடியிருப்புகளுக்கு காணி உறுதிகள் விரைவில்

கொழும்புத்துறை,டிசெ.20

கொழும்புத்துறை வசந்தபுரம் கிராமத்தின் குடியிருப்புக் காணிகளுக்கான உறுதிகளை விரைவில் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அந்தப் பகுதிக்கான மின்விநியோகத்தை ஆரம்பித்து வைக்கச் சென்ற அமைச்சரிடம் அங்கு வாழும் மக்கள் தமது குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிய போது இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை அடுத்த ஆண்டு முற்பகுதியில் வீட்டுத்திட்ட உதவிகளைப் பெற்றுத் தருவதாகவும் அமைச்சர் தெரிவித்ததாக அந்தப் பகுதி மக்கள் கூறினார்கள்.

வசந்தபுரம் பகுதி மக்கள் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக இந்த அரச காணியில் குடியிருக்கின்ற போதிலும், இதுவரை காணிகளுக்கான உறுதிகள் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக வீட்டுத்திட்ட உதவிகளைப் பெறமுடியாது உள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். (த-135)

# 'காப்பெற்' வீதிகளுக்கு குறியீடுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.20

யாழ்.குடாநாட்டில் 'காப்பெற்' போடப்பட்ட சில வீதிகளுக்கு வீதிக் குறியீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

கைதடி-கோப்பாய் வீதி, உரும்பிராய்-மானிப்பாய் வீதி ஆகியன அகலிக்கப்பட்டு 'காப்பெற்' வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீதிகளில் குறியீடுகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (த-17)

# மின்சாரத்தை சேமிப்பது குறித்து மாணவரிடையே போட்டி

கொழும்பு,டிசெ.20

"தேசிய மின்சக்தி பாதுகாப்பு வேலைத்திட்டம்" என்னும் தலைப்பில் மின்வலு சக்தி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றின் மேற்பார்வை மற்றும் வழிநடத்தலின் கீழ் பாடசாலை மாணவர்களிடையே போட்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரதான நோக்கம் வீட்டிலோ அல்லது பாடசாலைகளிலோ பாவிக்கும் மின்சாரத்தை 20 வீதத்தால் குறைத்து அவற்றின் மூலம் மின் பாவனையில் சிக்கனத்தை கடைப்பிடித்தலாகும்.

இது தொடர்பில் பாடசாலைகள் மூலம் மாணவர்களுக்கு அச்சிட்ட விண்ணப்பப் படிவம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்த விண்ணப்பத்துடன் மின்சாரத்தை சிக்கனமாக, பாவிக்கும் வழிமுறைகள் பற்றிய விளக்கங்களும் அடக்கப்பட்டுள்ளன.

இது பாடசாலை மாணவர்களுக்கான திறந்த போட்டி என்பதுடன், அதன் நிபந்தனைகளாக, 2012 மார்ச் மாதம் தமது வீட்டு மின்கட்டணத்துக்கு ஒப்பாக ஒக்ரோபர், நவம்பர் அல்லது டிசெம்பர் ஆகிய மூன்று மாதங்களில் ஏதேனும் ஒரு மாத மின் கட்டணத்தை 20 வீதத்தால் குறைப்பதன் ஊடாக இந்தப் போட்டியில் மாணவர்கள் பங்குபற்றலாம்.

விண்ணப்பப் பத்திரத்துடன் 2012 மார்ச் மாதத்தின் தமது வீட்டு மின்பட்டியலின் பிரதி 20 வீதத்தால் குறைக்கப்பட்ட மாதத்தின் மின் பட்டியலின் பிரதி, என்பவற்றையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பப் பத்திரங்களும் பாடசாலை அதிபர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டு பதவி முத்திரை பொறித்து பாடசாலை அதிபர் ஊடாக மின்வலுசக்தி அமைச்சுக்கு அனுப்பப்படல் வேண்டும். (த-122)

# முதியோருக்கான ஆயிரம் ரூபா

தென்மராட்சி,டிசெ.20

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 70 வயதுக்கும் மேற்பட்டோருக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவுத் தொகையான ஆயிரம் ரூபா நேற்றுத் தொடக்கம் அந்தந்த அஞ்சல் நிலையங்களில் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச சமூக சேவைகள் திணைக்களத்தினால் முதியோர்களுக்கான கொடுப்பனவுப் பட்டியல்கள் அஞ்சல் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதையடுத்து நேற்று புதன்கிழமை தொடக்கம் கொடுப்பனவினை முதியோர்கள் பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# தமிழ்தெரிந்த, பெண் பொலிஸார் பொலிஸ் நிலையங்களில் இல்லை

## உடன் நியமிக்க மக்கள் கோரிக்கை

அக்கராயன்,டிசெ .20

கிளிநொச்சி மாவட்டத்தில் நகரப் பொலிஸ் நிலையம் தவிர்ந்த ஏனைய நிலையங்களில் தமிழ் பொலிஸாரோ, பெண் பொலிஸாரோ கடமையில் இல்லை என பொது அமைப்புக்கள் பூநகரி பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக் காட்டின.

பூநகரி பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. அதன் போதே பொது அமைப்புக்கள் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டின.

பூநகரி பிரதேசத்தில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்வதிலும், பெண்கள் தங்களுக்கு ஏற்படும் நிலைமைகள் தொடர்பாகவும் தகவல் வழங்கவும் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இரவு வேளைகளில் நடைபெறும் இந்தச் செயல்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்றால் பொதுமக்கள் தமது கருத்துக்களையும், சம்பவங்களையும் கடமையில் உள்ள பொலிஸ் அதிகாரிக்கு தெரியப்படுத்த முடியாது கஷ்டமுறுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் தமிழ் தெரியாத பொலிஸார் கடமையில் இருப்பதே.

அத்துடன் பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிஸார் கடமையில் இருப்பதில்லை. இதனால் பெண்கள் தமது பிரச்சினைகளை கூறமுடியாதுள்ளனர்.

இவ்வாறான நிலை நீக்கப்பட்டு தமிழ் தெரிந்த பொலிஸாரை முழுநேரக் கடமையில் ஈடுபடுத்துவதுடன் தமிழ் தெரிந்த பெண் பொலிஸாரையும் கடமையில் ஈடுபடுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பூநகரி பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி தாம் இந்த விடயத்தில் கவனம் எடுத்து வருவதாகவும், உரிய இடத்துக்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் தெரிந்த, மற்றும் பெண் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்துவதற்கு ஆளணி நெருக்கடியுள்ளதாகவும் எனினும் இந்த விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அண்மையில் திருட்டுச் சம்பவம் தொடர்பில் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற பொதுமகன் மொழிப் பிரச்சினையால் முறைப்பாடு பதிவு செய்யமுடியாது போனதாகவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பொலிஸ் பொறுப்பதிகாரி, முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் தமிழ் தெரிந்த 2 பொலிஸார் கடமையில் இருப்பதாகவும், அன்று அவர்கள் பணியில் இல்லை எனவும் தெரிவித்தார். (ஐ-18)

## பாதுகாக்கவே மின்பிறப்பாக்கியை இராணுவம் எடுத்துச் சென்றதாம்

கிளிநொச்சி, டிசெ. 20

பூநகரி, கறுக்காய்த்தீவுப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் நிதியுதவியுடன் கடந்த வருடம் அமைக்கப்பட்ட குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்துக்குச் சொந்தமான மின் பிறப்பாக்கி எங்கே என்று பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்டது.

குறித்த மின்பிறப்பாக்கியை இராணுவத்தினர் எடுத்துச் சென்று விட்டதாகவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் பூநகரிப் படை அதிகாரி அதனை மறுத்ததுடன் குறித்த இடத்தில் மின்பிறப்பாக்கிக்குப் பாதுகாப்பு இன்மையாலேயே தாம் அதனை எடுத்துச் சென்றதாகவும் பொது அமைப்பு ஒன்று முன்வந்தால் தாம் மின்பிறப்பாக்கியை அவர்களிடம் ஒப்படைப்பதாகவும் உறுதியளித்தார்.

மின்பிறப்பாக்கி பாவனைக்கு இல்லாததால், குடிதண்ணீர் சுத்திகரிப்பு நிலையம் இயங்காமலே உள்ளது என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ-6-18)

## படகுகள் தயார்; விற்க அனுமதியில்லை

பூநகரி கடற்றொழில் சமாசம், ஐ.எல்.ஓ. நிறுவனத்தின் உதவியுடன் படகுக் கட்டுமானத் தொழிற்சாலை ஒன்றை நிறுவி படகுகளைத் தயாரித்து வருகிறது.

இங்கு 40 படகுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியானவை.

ஆனால் தொழிலாளர்களுக்கு விற்பனை செய்வதற்கான படகு அனுமதியை பெறமுடியாதுள்ளது. அதனைப் பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பூநகரி கடற்றொழில் சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

உள்ளூரில் படகுக் கட்டுமானத்தை ஊக்குவிக்கவும், குறைந்தவிலையில் படகுகளைத் தொழிலாளர்களுக்கு வழங்கவும் சமாசம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆனாலும் கடலில் தொழில் செய்வதற்கான படகுகளுக்கு இலக்கத் தகடுகள் மற்றும் அனுமதியைப் பெறுவதில் தாமதம் ஏற்படுவதால் தமது நடவடிக்கைகள் பாதிப்படைவதாகவும் சமாசம் சுட்டிக்காட்டியுள்ளது.

(ஐ-18)

## காணிகளை அளவிட மக்கள் கோரிக்கை

பூநகரி, ஜெயபுரம் பகுதியில் நீண்ட காலமாக காணிகள் அளவிடப்பட்டு எல்லைகள் நிர்ணயிக்கப்படாமையால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனால் காணிப்பிணக்குகள், எல்லைத் தகராறுகள் ஏற்படுவதுடன் வீட்டுத் திட்டம் உள்ளிட்ட உதவிகளும் இல்லாது போகும் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த மக்கள் தெரிவிக்கின்றனர். ஜெயபுரம் வடக்கு கிராமத்தில் 206 குடும்பங்களும், ஜெயபுரம் தெற்கில் 204 குடும்பங்களும் வசிக்கின்றனர். இவர்களது காணிகளே சரியான அளவீடுகள் இன்றிக் காணப்படுகின்றன.

இதுதொடர்பாக பூநகரிப் பிரதேச காணிப் பிரிவினர் கவனம் செலுத்தி தமது பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தாம் தமது சொந்தக் காணிகளிலேயே பயன்தரு மரங்களை நட்டு வளர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-18)

# கண்ணிவெடி அகற்றும் பணி பாதிப்புறக் கூடிய சாத்தியம்

## 'டெனிஸ்' நடவடிக்கை முகாமையாளர் கருத்து

அக்கராயன்,டிசெ.20

நிதித்தட்டுப்பாடு காரணமாக டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் செயற்பாடுகளை 2013 ஆம் ஆண்டு பெப்ரவரியுடன் நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**தமது நிறுவனத்துக்கான நிதிப்பங்களிப்பு அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் முடிவடைவதாக அந்த நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் மார்டி நீக்கிலா தெரிவித்துள்ளார்.**

தமது நிறுவனத்துக்கான நிதிப்பங்களிப்பு அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் முடிவடைவதாக அந்த நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் மார்டி நீக்கிலா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஜெயபுரம் பகுதியில் கண்ணிவெடி அகற்றப்பட்ட இரண்டு கிராமங்களைக் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமது அமைப்புக்கு ஐரோப்பிய நாடுகள் நிதி வழங்கி வருகின்றன. அந்த நாடுகள் தமது நிதிப்பங்களிப்பை படிப்படியாக நிறுத்திவருவதால் நெருக்கடி ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி அரச அதிபர், கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் இன்னமும் கண்ணிவெடி வெடிபொருள் அபாயம் இருப்பதால் கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களின் செயற்பாடு தேவை எனவும் இதனைக் கருத்தில் கொண்டு டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனம் நிதிவழங்குனரிடம் இருந்து நிதியைப் பெற்று கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைக்கு உதவுமாறும் அரச அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பாக தாம் பரிசீலிப்பதாக டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-18)

## நல்லூர் பொதுநோக்கு மண்டபத்தை அடுத்த மாதம் இராணுவம் ஒப்படைக்கும்

கிளிநொச்சி, டிசெ. 20

பூநகரி, நல்லூர் பொது நோக்கு மண்டபம் இராணுவத்தினரின் பிடியில் தொடர்ந்து இருப்பதால் பொதுமக்கள் தமது தேவைக்காக அந்தக் கட்டடத்தைப் பயன்படுத்த முடியாதுள்ளது. இதனை படையினர் பொதுமக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

நல்லூர் பொதுநோக்கு மண்டபம் நீண்ட காலமாகப் படையினர் வசம் இருப்பதால் பொதுத் தேவைகளை நிறைவு செய்வதற்குக் கட்டட வசதிகள் எவையும் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு அந்தக் கட்டடத்தைப் பொதுமக்கள் பாவனைக்கு விடவேண்டும் என கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்தது.

இதற்குப் பதிலளித்த படையதிகாரி அடுத்த மாதம் மக்கள் பாவனைக்கு ஏற்றவகையில் கட்டடம் ஒப்படைக்கப்படும் என உறுதியளித்தார்.

662 ஆவது படைப் பிரிவின் பாவனையில் இந்த பொதுநோக்கு மண்டபம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-6)

### கண்டாவளைப் பிரதேசத்தில்

# 4,500 குடும்பங்களுக்கு புதிதாக வீடுகள் தேவை

கிளிநொச்சி,டிசெ 20

கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத்தில் மீளக் குடியேறிய 7493 குடும்பங்களில் 4488 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இன்னும் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. இந்த விவரத்தை கண்டாவளைப் பிரதேச செயலகம் வெளியிட்டிருக்கிறது.

கண்டாவளைப் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள 16 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் 7493 குடும்பங்களைச் சேர்ந்த 24200 பேர் வசிக்கின்றனர். இவர்களில் அதிகமானவர்கள் தற்காலிக வீடுகளிலும், குடிசைகளிலும் வசித்து வருகின்றனர்.

கண்டாவளைப் பிரதேசத்தில் இதுவரை 1887 வீடுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் நேர்ப் 1169 வீடுகளையும், யுஎன் கபிராற் 390 வீடுகளையும், சுவிஸ் நிதியம் 38 வீடுகளையும், என்.எச்.டி.ஏ. 69 வீடுகளையும், ஐ.ஓ.எம். 50 வீடுகளையும் அமைத்துக்கொடுத்துள்ளதுடன் இந்திய மாதிரி வீடுகளில் 61 வீடுகளும் முதலாம் கட்டத்தில் 110 வீடுகளுமாக 1887 வீடுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் யுஎன் கபிராற், 670 பகுதி சேத வீடுகளையும், சுவிஸ் நிதியம் 47 பகுதிச் சேத வீடுகளையும் திருத்திக் கொடுத்துள்ளன. இவ்வாறு 2604 குடும்பங்கள் பயன்பெற்றுள்ளன.

இவர்கள் தவிர இன்னும் 4488 குடும்பங்களுக்கு வீடுகள் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட வேண்டியுள்ளது என்றும் அடுத்தடுத்த இந்திய வீட்டுத் திட்டங்களில் இவை பூர்த்தியாக்கப்படும் எனவும் கண்டாவளைப் பிரதேச செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்தப் பிரதேச செயலகத்தில் 11000 குடும்பங்களுக்கு நிரந்தர காணி இல்லாத நிலை காணப்படுவதாகவும் செயலகம் தெரிவிக்கின்றது. (ஐ-6)




வவுனியா மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட வறுமையான பாடசாலை மாணவர்களுக்கு 'சிறுவர் அபிவிருத்தியின் ஆரம்பம்' என்ற அரசசார் பற்ற நிறுவனத்தின் ஆதரவில் வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை அண்மையில் பாடசாலை உபகரணங்களை வழங்கியது. (402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உவர்த் தடுப்பணை உடைந்தமைக்கு விவசாயிகளும் ஒருவகையில் பொறுப்பு

## கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் கூறுகின்றனர்

பூநகரி,டிசெ.20

பூநகரி ஆலங்கேணியில் அமைக்கப்பட்ட உவர்த் தடுப்பணையில் உடைவு ஏற்பட்டதற்கு விவசாயிகளும் ஒருவகையில் பொறுப் பேற்க வேண்டும் என நீர்ப்பாசனத் திணைக்களத் தினர் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இடம் பெற்ற பூநகரிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு தெரி விக்கப்பட்டது.

பூநகரிப் பிரதேசத்தில் உள்ள ஆலங்கேணியில் சாமிப்புலம் என்ற இடத்தில் அமைந்திருந்த உவர்நீர்த் தடுப்பணை மழை வெள் ளம் காரணமாக உடைந் துள்ளது. இதனால் நெல் வயல்கள் பாதிக்கப்பட் டுள்ளதுடன் இந்தப் பிரதே சம் உவராகும் ஆபத்தையும் எதிர்கொண்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்ற பூநகரிப் பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டத் தில் கலந்துகொண்ட விவ சாய அமைப்புகளின் பிரதி நிதிகள் இந்த உவர் நீர்த் தடுப்பணையை உடனடி யாகப் புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுத்தனர். அத்துடன் உவர் நீர்த் தடுப் பணை உடனடியாகப் புனர மைக்கப்படாததன் காரண மாக தமது நெல் வயல்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த நீர்ப்பாசனத் திணைக்களத் தினர் தடுப்பணையில் உடைப் பெடுத்தமைக்கு விவசாயி களும் ஒரு காரணம் எனத் தெரிவித்தனர்.

உவர்த் தடுப்பணையிலி ருந்து 30 அடி தூரத்துக்கு அப்பால் விவசாயத்தை மேற் கொள்ளுமாறு விவசாயி களுக்கு அறிவுறுத்திய போதி லும் அவர்கள் அவ்வாறு நடந்து கொள்ளாமல் தடுப் பணைக்கு அருகில் விவசா யத்தை மேற்கொண்டுள்ள னர். இதுவும் உவர்த்தடுப் பணை உடைப்பெடுத்தமைக் கான முக்கிய காரணமாகும்.

மேலும் தமது வயல் நிலங் களில் வெள்ளம் தேங்கிய தால் விவசாயிகள் சிலரே தடுப்பணையை உடைத்த தாகவும் தகவல்கள் கிடைத் துள்ளன.

எதிர்காலத்தில் தடுப்ப ணைக்கு அருகில் மேற் கொள்ளப்படும் பயிர்ச் செய் கைகள் யாவும் அழிக்கப் படும் என்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரி வித்தனர்.

இதனை விவசாயிகள் மறுத்துள்ளதுடன் தடுப்ப ணைப் பகுதியில் தேங்கிய வெள்ள நீர் உரிய வகையில் திறந்து விடப்பட்டிருந்தால் அது உடைப்பெடுத்திருக்கமாட் டாது எனவும் தெரிவித்தனர்.

எது எவ்வாறு இருப்பி னும் உடைப்பு ஏற்பட்ட தடுப்பணை விரைவில் புனர மைக்கப்படும் என நீர்ப் பாசனத் திணைக்களத்தின ரால் அங்கு உறுதிமொழி வழங்கப்பட்டது. (க-18)

## முல்லையில் நடமாடும் சேவை

முல்லைத்தீவு,டிசெ.20

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் மூன்று தினங்கள் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நடமாடும் சேவையின் போது பிறப்பு, இறப்பு, காலம் பிந்திய திருமணப் பதிவுகள் என்பவற்றுக்கான சான்றிதழ்கள் வழங்கப் படுவதற்கான ஏற்பாடுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இன்று 20 ஆம் திகதி நட்டாங்கண்டல் அ.த.க. பாடசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை நட்டாங் கண்டல், மூன்றுமுறிப்பு, சிறாட்டிகுளம், விநாயகபுரம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக் களுக்கும், நாளை 21 ஆம் திகதி அம்பாள்புரம் அ.த.க. பாடசாலையில் வன்னி விளாங்குளம், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், சிவபுரம், பாலிநகர் ஆகிய பகுதிக ளைச் சேர்ந்த மக்களுக்கும், நாளை மறுதினம் 22 ஆம் திகதி மாந்தை கிழக்கு பிர தேச செயலகத்தில் பாண்டி யன்குளம், செல்வபுரம், கரும்புள்ளியான் ஆகிய பிரதேச மக்களுக்கும் நட மாடும் சேவை இடம்பெற வுள்ளது.

இதில் சகல மக்களையும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந் தாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**நடமாடும் சேவையின் போது பிறப்பு, இறப்பு, காலம் பிந்திய திருமணப் பதிவுகள் என்பவற்றுக் கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.**

## வயிற்றோட்டம் காரணமாக சிறுமி உயிரிழப்பு

வடமராட்சி,டிசெ.20

பிறவியில் ஊனமுற்ற சிறுமி ஒருத்தி கடுமையான வயிற்றோட்டத்துக்குள்ளான நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்தார்.

புலோலி கிழக்கு, சாந்தா தோட்டத்தைச் சேர்ந்த தட்சணா உதயசூதன் (வயது-12) என்ற சிறுமியே இவ்வாறு உயிரி ழந்தார்.

பிறப்பிலிருந்து கை, கால்கள் சோர்ந்த நிலையில் படுக்கையிலே இருந்து வந்த சிறுமிக்குக் கடுமையான வயிற்றோட்டம் திடீரென ஏற்பட்டதைத் தொடர்ந்து கடந்த (திங்கட்கிழமை) இரவு அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கு உயிரிழந்தார்.

இவரது மரணம் குறித்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் மரண விசாரணை நடத்தி, விசாரணையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். (த-8)

## போதைப் பொருள் சந்தேக நபர் பிணையில்

யாழ்ப்பாணம், டிசெ.20

4 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருளைத் தன் வசம் வைத்திருந்த குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப் பட்டிருந்த சந்தேக நபர் யாழ்.மேல் நீதிமன்றினால் நேற்றுப் பிணையில் விடு விக்கப்பட்டார்.

சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத் தரணி பிணை விண்ணப்பம் செய்திருந்தார். யாழ். நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ் வநாதன் முன்னிலையில் பிணை மனு பரிசீலிக்கப்பட்டு பிணை அனுமதி வழங்கப் பட்டது.

கடந்த மே மாதம் மாதகல் பகுதியில் வைத்து 4.2 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் வைத் திருந்த குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த இராசரத்தினம் ரமீன் என்பவர் கைது செய்யப் பட்டார்.

மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப் பட்ட சந்தேக நபரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்த ரவிட்டார்.

அவரைப் பிணையில் விடுவிக்கக் கோரியே பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டது. அதனடிப்படையில் சந்தேகநபர் 25ஆயிரம் ரூபா ரொக்கப்பிணை யிலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதி யான தலா இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக் கப்பட்டார். மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமை களில் முற்பகல் இளவாலை பொலிஸ் நிலையத்தில் இவர் கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப் பட்டது.

## மோசமான தெரு

வவுனியா நகரி லுள்ள முதலாம் குறுக்குத் தெரு மோசமான நிலை யிலுள்ளதால் மக்கள் பெரும் அசௌகரியங் களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இந்தத் தெருவில் குன்று, குழிகள் காணப் படுவதால் மழைவெள்ளம் தேங்கி நின்று மக்களின் பயணத்துக்கு இடர்களை ஏற்படுத்தி வருகின்றது.

வாகனங்கள் செல்லும் போது குழிகளில் தேங்கி நிற்கும் வெள்ளநீர் தெறிப் பதால் பலரும் பாதிக்கப் பட்டு வருகின்றனர்.

எனவே இதனை விரை வில் புனரமைத்து வழங் குமாறு மக்கள் வேண் டுகோள் விடுத்துள்ளனர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா கனகலிங்கம் (கிளி)



நாவலர் றோட் நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கிளி என்று அழைக்கப்படும் கந்தையா கனகலிங்கம் நேற்று முன்தினம் (18.12.2012) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், இராச யோகத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான நாகமுத்து - லட்சுமி தம்பதியரின் மருமகனும், ஜீவராசா (லண்டன்), அகிலன், சங்கீதா (ஜேர்மனி) ஆகியோரின் தந்தையும், கல்யாணி, ஜெயராஜ் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை மற்றும் அருணகிரி, மலர் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான முத்துக் குமார், சோதிப்பிள்ளை மற்றும் சரஸ்வதி, தேவராணி, நவரட்ணம், மனோன்மணி ஆகியோரின் மைத்துனரும், மதுமிதா, அஸ்வின், அமித்தா, இலக்கியா, நிலவன், சாருஜன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2012) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

395/3, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (2500)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

### விசுவலிங்கம் அநாதரட்சகன்
(ஓய்வுபெற்ற பிரதேசசபை, எழுதுநர்)



அளவெட்டி வடக்கு, அம்பாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், குளமங்கால், மல்லாகத்தை வசிப் பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் அநாதரட்சகன் நேற்று (19.12. 2012) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவ லிங்கம் - தையல்நாயகியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கண்ணையா - ராசம்மாவின் அன்பு மருமகனும், தர்மபூபதியின் (இரத்தினம்) அன்புக் கணவரும், காண்டீபன் (கனடா), பார்த்தீபன், தமிழ்ச்செல்வி, கலைச்செல்வி, ஜெயந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், வானதி (கனடா), ஆரணி, இளஞ்சுரேஸ் (அலுவலகப் பணியாளர், அ.த.க. பாட சாலை, இராமநாதபுரம்), சுரேசன் (சாரதி, முல்லைத்தீவு) ஆகி யோரின் அன்பு மாமனும், சகானா, விட்வன், பாவரசன், பாவலன், தமிழினி, தமிழ்ப்பிரியா, இனியவன், நிருபனா ஆகி யோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஜெகதீசன், ஜெக ரட்சகன் மற்றும் ஜெகதீஸ்வரி, யோகேஸ்வரன், ஜீவரட்சகன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வேந்திரராசா (ஜேர்மனி), தெய்வேந்திரராசா ஆகியோரின் அன்பு மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2012) பி.ப ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக் கொம்பனி ஒழுங்கை,
மல்லாகம். (சி/2685)(3.14)

தகவல்:
குடும்பத்தினர்.

### விற்பனைக்கு

இல.210, கே.கே.எஸ்.வீதியில் அமைந்துள்ள கடையில் 28 அடி அகலமும் 50 அடி நீளமும் உடைய கூடாரம் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0714275724
(26990)(2.6)

### வீடு விற்பனைக்கு

நாவலர் வீதி மணிக்கூட்டு ஒழுங்கையில் 1 பரப்பு காணியுடன்கூடிய வீடு விற்பனைக்கு உண்டு
தொடர்பு : 0779563899
(C 2686)(14)

### புங்குடுதீவு நயினாதீவு பல நோக்குக் கூ. சங்கம் வாக்காளர் இடாப்பு மூடுதல்

30.06.2012 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வாக்காளர் இடாப்பு மூடப்பட்டுள்ளது. இவ் இடாப்புக்கள் அங்கத்தவர் ஆட்சேபனைகளை பெறு வதற்காக 19.12.2012 - 04.01.2013 வரை பின்வரும் கிளைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

கிளை இல. - 1, 2 இற்கான வாக்காளர் பட்டியல் - கிளை இல. - 2 இலும்
கிளை இல. - 3, 5, 6 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை இல. - 5 இலும்
கிளை இல. - 7 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை இல. - 7 இலும்
கிளை இல. - 9 இற்கான வாக்காளர் பட்டியல் தலைமைக்காரியாலயத்திலும்
கிளை இல. - 10, 12, 13 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை இல. - 10 இலும்
கிளை இல. - 14, 15, 16 இற்கான வாக்காளர் பட்டியல் கிளை இல. - 14 இலும்
கிளை இல. - 18, 19 இற்கான வாக்காளர் பட்டியல் நயினாதீவு கிளை இல. - 18 இலும்
கிளை இல. - 20 இற்கான வாக்காளர் பட்டியல் நயினாதீவு கிளை இல. 20 இலும்

★ அங்கத்தவர்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் 04.01.2013 இற்கு முன் எழுத்து மூலம் தலைமை அலுவலகத்துக்கு தெரியப்படுத்தி வாக்காளர் இடாப் பை பூர்த்தி செய்ய உதவும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
புங்குடுதீவு - நயினாதீவு பல். நோ. கூ. சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவெம்பாவை பூசைகள்

வட்டு.வடக்கு பிரமனாச்சி தோட்ட கற்பகப் பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. தினமும் அதிகாலை 5.30 மணிக்கு விசேட பூசை நடைபெற்று திருவெம்பாவை பாடல்கள் பாடப் படுகின்றன.

* * *

வண்ணை அங்குச பாசப்பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை தினமும் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறுவருகிறது. நேற்றைய தினம் ஆரம்பமான இந்த விசேட நிகழ்வு எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும்.

* * *

வண்ணை நல்ல தண்ணீர்க்கிணற்றடி ஞான வைரவர் ஆலயத்தில் திருவெம்பாவை பூசை தினமும் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்று மணிவாசகரின் திருவெம்பாவை பாடல்கள் பாடப்பெற்று நிறைவடைகின்றது.

# 20 இடங்களில் மழை அளவிடும் கருவிகள்

தேசத்துக்கு மகுடம் விசேட அபிவிருத்தித் திட் டத்தின் கீழ் புதிதாக மழை அளவிடும் கருவிகள் பொருத் தப்பட்டுள்ளள என்று மாவட்ட வானிலை அவதான நிலைய அதிகாரி கே.சூரியகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை, பொலன றுவை ஆகிய மாவட்டங் களின் 20 இடங்களில் மழை அளவிடும் கருவிகள் பொருத் தப்பட் டுள்ளன என்று அவர் கூறினார்.

அம்பாறை மாவட்டத் தில் 11 இடங்களிலும், மட் டக்களப்பு, திருகோண மலை, பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் தலா 3 இடங்களிலும் இந்தக் கருவிகள் பொருத்தப்பட் டுள்ளன என்று அவர் தெரிவித்தார். இலங்கை வானிலை அவதான நிலையம் இந்தக் கருவிகளைப் பொருத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### தவறி விட்டது

109, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நடராசா என்பவரது தேசிய அ. அட்டை (491180519 V), மோட்டார் சைக்கிள் ரக்ஸ், இன்சூரன்ஸ், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பை, சத்திரச் சந்திக்கும் சிகரட் கடைக்கும் இடையில் 23.11.2012 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0774301111 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

(26981)(6.11)

## சேவை நலன் பாராட்டு



திருமதி கமலேஸ்வரி யோகநாதன்

கடந்த 31 வருடங்களாக யாழ். போதனா வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராகவும், விடுதிச் சகோதரியாகவும் சிறப்பான சேவையாற்றி 06.11.2012 அன்று ஓய்வு பெற்ற திருமதி கமலேஸ்வரி யோகநாதன் அவர்களைப் பல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென மனதார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

(26993)(6.9.14)

தாதிய நலன்புரிக் கூட்டுறவு சங்கம்.

### தவறிவிட்டது

Nokia தொலைபேசி, MITSUBISHI வாகனத்திறப்பு என்பவை சுண்டுக்குளிச் சந்திக்கும் யாழ். பஸ்தரிப்பிடத்துக்கும் இடையில் தவறிவிட்டது (கண்டெடுத்துத் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்)

தொடர்பு : 0777320799

(26999)(14)

### தவறி விட்டது

ஐயனார்கோயிலடி, நாவற்குழியைச் சேர்ந்த கணேஸ் ஷர்மிலன் என்பவரது தேசிய அடையாள அட்டை (901542511 V), சாரதிஅனுமதிப்பத்திரம், (தற்காலிகம்) என்பன அடங்கிய பேர்ஸ் 20.11.2012 அன்று பளைக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு : 0750 407370

(26985)(6.11)

## மரண அறிவித்தல்

### கோவிந்தபிள்ளை இராமநாதன்



நயினாதீவு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும், இணுவிலை வசிப்பிடமாகவும் சித்திவிநாயகர் கோயிலடி சுதுமலையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கோவிந்தபிள்ளை இராமநாதன் நேற்று (19.12.2012) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தபிள்ளை - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும், நித்திய லட்சுமியின் அன்பு கணவரும், நாகரட்ணம், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் இலட்சுமி, காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இந்திரகுமார், உதயகுமார் மற்றும் சந்திரகுமார் (அமெரிக்கா), நாகேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும், உமாசுசி, றதிதேவி, சிவசீலி (அமெரிக்கா), காலஞ்சென்ற தர்மகுலசிங்கம் மற்றும் சுதாகரன் (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமனும், சுசீந்திரன், மதிவதனா, தசீந்திரன், மோகனா (ஆஸ்திரேலியா); சுகிதரன், நாகேஸ்வரி, உதயகரன், பகீரதி, தாட்சாயினி, கார்த்தீபன், கஜனி (அமெரிக்கா), சுரேந்திரன், அனித்தா, சர்மிளா, ஜோன் அன்ரனி (நோர்வே), தனகீர்த்தியா, பாலவசந்தன் (பிரான்ஸ்), சுகிர்தனா, தவரூபன், கமல்ராஜ், நிதுஷா ஆகியோரின் அன்பு பேரனும், தனுஸ், அஸ்வின் (நோர்வே), டிதுஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2012) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

தகவல்: குடும்பத்தினர்.

(26994)(3.14)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

### தவறிவிட்டது

மல்லாகம் ஊடாக கட்டுவனுக்கு (17.12.2012) 5.30 மணியளவில் பயணித்த தனியார் பேருந்தில் கணக்குப் பதிவேட்டுக் கொப்பி இரண்டு தவறி விட்டது. கண்டெடுத் தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு : 0777722448

### Avrankal Kids Pre School
### ஆசிரியர் தேவை

G.C.E(A/L)கலைப்பிரிவில் சித்தியடைந்த பொது ஆசிரியர் மற்றும் ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய ஆசிரியரும் தேவை

விண்ணப்ப முடிவுத்திகதி-26.12.2012

சுயவிவரங்களை அனுப்பவேண்டிய முகவரி

**Avarankal Kids Pre School 10th Mile Post, Sangana Mawatha, Avarankal.**

### தவறிவிட்டது

18.12.2012 காலை கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த மினிபஸ்சில் கச்சேரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையில் கைப்பை ஒன்று தவறுதலாகக் கைமாறிவிட்டது அதில் முக்கியமாக மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம், வங்கி அடைவு நிசிற், டயறி ஆகியன உள்ளது அதைத் தவறுதலாக எடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் தந்துதவுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

நாபா பன்முக வர்த்தகம், 104 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P-0774198325

(26996)(14)


இதுவரை யாரும் வழங்காத நத்தார் கொடுப்பனவு

YAMAHA





உங்கள் புதிய கனவினை நனவாக்க இன்றே அழையுங்கள்

நீங்கள் விரும்பி எடுக்கும் புதிய யமகா FAZER, FZ-S, FZ மோட்டார் சைக்கிள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 18000.00 விலைக் கழிவினைப் பெற்றிடுங்கள்.

இச்சலுகை டிசெம்பர் 31 வரை மட்டுமே.
நிபந்தனைக்குட்பட்டது.

FOLLOW US ON:

(C/2974)(2.6)

டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்

62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P.:- 021 222 4040/ 0776623824.

குஞ்சர்கடை சந்தி, நெல்லியடி. T.P.:-0779893343


## வாகனம் விற்பனைக்கு



JL XXXX எனும் இலக்கமுடைய லங்கா அசோக் லேடன் பஸ் விற்பனைக்கு உண்டு கைக்காசு 500,000/= உம் மாதாந்தம் 55,350/= Leasing முறைமூலம் 24 மாத தவணை.

உடனடித் தொடர்புகளுக்கு

**T.P.:- 0770729038, 0773159841**

(26989)(2.6)

## மரண அறிவித்தல்

### யோசப் றேமன்ட்



தேவாலயவீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், பதவி சிறிபுரவை வசிப்பிடமாகவும் கொண்ட யோசப் றேமன்ட் (இளைப்பாறிய அரச மருந்தாளர்) 18.12.2012 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான டானியல் யோசப் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், கிரிமெனிக்கேயின் அன்புக் கணவரும், துசார (பொலிஸ் உத்தியோகத்தர், புதுக்குடியிருப்பு), சந்திரகுமாரி, சித்தாரா டில்றுக்சி (தாதியர் பயிற்சிக் கல்லூரி, அம்பாறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காமினி ஆரியசிறியின் மாமனும், நிம்சரா ஹரிசான், சானுக்கி மிதேறா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பேனால்ட் இம்மானுவல் (சிறாப்பர், துறைமுக அதிகாரசபை), சிறில் (ஓய்வுபெற்ற டிப்போ அதிகாரி, பெற்றோலிய கூட்டுத்தாபனம்), கிறிஸ்ரின் புஸ்பம், விக்டோரியா பரிமளம், செல்வரத்தினம் (ஜேர்மனி), குணரத்தினம் (பொது முகாமையாளர், வட மாகாண ப.தெ.வ.அ.கூ. சங்கங்களின் சமாசம்), லில்லி, சாள்ஸ் (யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (21.12.2012) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சிறிபுரவில் நடைபெறும்.

ஜோமாறி, மல்லாகம்.

தகவல்: சகோதரர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னப்பிள்ளை செல்லையா

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அன்னப்பிள்ளை செல்லையா அவர்கள் 2012 டிசெம்பர் 18 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் தமது 92 ஆவது அகவையில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்கப்பூர் வர்த்தகர் தில்லையம்பலம் அம்பலவாணர் - காமாட்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான நாகப்பர் பெரியதம்பி - செல்லாச்சி தம்பதியரின் மருமகளும், சிங்கப்பூரில் காலமான பெரியதம்பி செல்லையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லம்மாவின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற அம்பலவாணர் தம்பிராசாவின் (C.T.B) மைத்துனியும், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலய முன்னாள் அதிபர் காலஞ்சென்ற தம்பிராசா சண்முகலிங்கம் மற்றும் இராமலிங்கம் குணமணிதேவி ஆகியோரின் அன்பகலாத சிற்றன்னையும், இளைப்பாறிய பாடசாலை அதிபர் சண்முகலிங்கம், முத்தம்மாவின் அன்பு மாமியும், முன்னாள் உதவி அரசாங்க அதிபர்/ பிரசித்த நொத்தாரிசு சண்முகம் இராமலிங்கத்தின் பாசமிகு மைத்துனியும், கோகுலநாதன் தயாளினி, பெருமயினார் தர்ஷினி, கிராஞ்சிதரன், விநாகேஸ்வரன், குறிஞ்சிதரன், முரளீதரன், கிருபாகரன், யசோதா, கங்காதரன் ஆகியோரின் அன்பகலாத பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20ஆம் திகதி வியாழக்கிழமை புங்குடுதீவு இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மணற்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: ச. இராமலிங்கம்

(26952)(45.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு அரியாலையில் தொடர்கிறது

## இரவு வேளையில் இந்த அட்டகாசம்

யாழ்ப்பாணம், டிசெ.20

அரியாலைப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழும் நடவடிக்கைகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும், இது தொடர்பாக அதிகாரிகள் கவனம் செலுத்துவதில்லை எனவும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பூம்புகார் கடற்கரைப் பகுதியில் சுமார் 20 இற்கும் அதிகமான டிராக்டர்கள் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச் சென்றதாக அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றனர்.

அரியாலை நாவலடியில் உள்ள தனியார்களின் கைவிடப்பட்ட தென்னந்தோட்டங்கள், கடற்கரையை அண்டிய பகுதிகளில் இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதால் அங்கு பெரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது

**அரியாலை நாவலடியில் உள்ள தனியார்களின் கைவிடப்பட்ட தென்னந்தோட்டங்கள், கடற்கரையை அண்டிய பகுதிகளில் இவ்வாறு சட்டவிரோதமாக மணல் அகழப்படுவதால் அங்கு பெரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது**

நாவலடியில் நடைபெறும் இந்தச் சட்டவிரோத மணல் அகழ்வை அந்தப் பகுதியில் கடமையில் உள்ள சீருடையினரும் கண்டு கொள்வதில்லை எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கடற்கரையோரங்களில் இவ்வாறு மணல் அகழ்வு இடம்பெறுவதால் கடல்நீர் இந்தப் பகுதிக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்தனர். மீளக்குடியமராத மக்களின் காணிகளிலும் அவ்வாறு மணல் அகழப்படுவதாகவும் இரவு 9 மணிக்குப் பின்னரே பெரும் எண்ணிக்கையான டிராக்டர்கள் மணல் ஏற்றிச் செல்வதாகவும் கூறப்படுகின்றது.

இது குறித்து உரியவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-7)



யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதிக்கு அண்மையில் அமைந்திருந்த வைரவர் ஆலயம் துரிதகதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. (த-135)

## பண்டத்தரிப்புக்கு விரைவில் கேபிள் தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், டிசெ.20

வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பண்டத்தரிப்பு, மாதகல் பகதிகளுக்கு ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

சித்தன்கேணியில் இருந்து இந்த கேபிள் தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் தற்போது அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கம்பங்களை நடும் பணிகளும் ஆரம்பமாகி யுள்ளன.

இணைப்புக்களை விநியோகிப்பதற்கு முன்னேற்பாடாக 'இம்சான்' பரிவர்த்தனை அலகுகள் அமைக்கும் பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரதேசங்களுக்கு முதற்கட்டமாக இம்சான் மூலம் 400 தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவுள்ளன. (த-17)

## மக்கள் பாவனைக்கு எறியாப்பிட்டி மயானம்

தென்மராட்சி, டிசெ..20

கச்சாய் தெற்கு எறியாப்பிட்டி இந்து மயானம் 15 வருடங்களின் பின்னர் பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்ததால் இந்தப் பிரதேச மக்கள் இதுவரை காலமும் வேறு மயானங்களைப் பயன்படுத்தி வந்துள்ளனர்.

அண்மையில் மயானப் பகுதி வெடிப்பொருள்கள் அகற்றப்பட்டுப் படையினரால் கையளிக்கப்பட்ட பின்னர் பொது மக்களும் படையினரும் இணைந்து சிரமதானம் மூலம் அதனைத் துப்புரவு செய்தனர். அங்கு மண்டபம் அமைப்பதற்கான தூண்கள் நடப்பட்டன.

522 ஆவது படையணி கட்டளைத்தளபதி பிரிகேடியர் அத்துள சில்வா, கச்சாய் பிரிவு முகாம் பொறுப்பதிகாரி லெப்டினன் உபதிலக உட்பட படையினர் சிரமதானத்தில் கலந்து கொண்டனர். (த-9)

## மாலுசந்தி– வியாபாரி மூலை வீதிப் போக்குவரத்துத் தடை

### மதகு சேதமடைந்தமையே காரணம்

வடமராட்சி, டிசெ.20

உடைந்த மதகு திருத்தப்படாமையால் மாலு சந்தி- வியாபாரி மூலை வீதி ஊடான போக்குவரத்துக்கள் வாரக்கணக்காக தடைப்பட்டுள்ளன.

இந்த வீதியில் நாவலடிச் சந்திக்கும் மெதடிஸ்த தேவாலயத்துக்கும் இடைப்பட்ட வீதியில் இருந்த பழுதடைந்த மதகு மீது கனரக லொறி சென்றபோது அது உடைந்து சேதமடைந்தது.

சேதமடைந்த மதகு ஊடாக எந்தவொரு வாகனமும் சென்று வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சேதமடைந்த மதகின் சிறு பகுதி ஊடாக மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் மற்றும் பாதசாரிகள் மாத்திரமே சென்று வரக் கூடியதாக உள்ளது.

பல கிராமங்களை ஒன்றிணைக்கும் இந்த வீதியின் மதகைத் திருத்தியமைப்பதில் வீதி அபிவிருத்தித் திணைக்களம் கால தாமதம் காட்டுவதால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளார்கள். (த-8)

## சட்டவிரோதமாக ஆஸி. பயணிக்க வேண்டாம்

### சாவகச்சேரியில் பிரசாரம்

தென்மராட்சி, டிசெ.20

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியா நாட்டுக்கு செல்ல வேண்டாம் என்ற பிரசாரம் நேற்றுப் புதன்கிழமை சாவகச்சேரி பஸ் நிலையத்தில் இடம்பெற்றது.

இலங்கை- ஆஸ்திரேலிய நாடுகளின் ஒத்துழைப்புடன் வெளிநாட்டுப் பணியகத்தினரால் நடத்தப்பட்ட இந்தப் பிரசாரத்தில் ஆஸ்திரேலியா நாட்டுக்கு சட்டவிரோதமாக படகுகளில் செல்வதால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் அந்த நாட்டில் எந்தவொரு உதவியும் வழங்கப்படாத நிலையில் பலர் திருப்பி அனுப்பப்பட்டு வருவது பற்றியும் மக்களுக்கு விவரமாக எடுத்துக் கூறப்பட்டது.

அத்துடன் அந்த நாட்டுக்குச் சட்டபூர்வமாக செல்வதற்கான ஆலோசனைகளும் அதிகாரிகளால் வழங்கப்பட்டன.

**அந்த நாட்டுக்கு சட்டபூர்வமாக செல்வதற்கான ஆலோசனைகளும் அதிகாரிகளால் வழங்கப்பட்டன.**

சட்டவிரோதமாகப் படகுகளில் செல்வோர் சந்திக்கும் அவல நிலையையும் அங்கு சென்றோர் தடுத்து வைக்கப்பட்டுள்ள முறைகள், திருப்பி இலங்கைக்கு அனுப்பப்படுவதையும் குறிக்கும் விவரணப் படமும் காண்பிக்கப்பட்டது. (த-9)

## பருத்தித்துறை பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர்

வடமராட்சி, டிசெ.20

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆளும் கட்சி சார்பில் புதிய உறுப்பினராக இன்பருட்டியைச் சேர்ந்த கு.மதியழகன் நியமிக்கப்படவுள்ளார்.

இந்தச் சபையில் அங்கம் வகித்த ஆளும் கட்சி உறுப்பினர் பொ.திருச்செல்வம் சுகவீனத்தால் கடந்த மாதம் காலமானதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவரை நியமிக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட இவர் எட்டாம் இடத்தில் உள்ளார். (த-8)

## 2013 இல் 'காப்பெற்' வீதியாக பண்ணை– ஊர்காவற்றுறை வீதி

யாழ்ப்பாணம், டிசெ.20

பண்ணையில் இருந்து ஊர்காவற்றுறை வரையான பிரதான வீதி அகலிக்கப்பட்டு 'காப்பெற்' வீதியாக மாற்றப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் மேற்படி பிரதான வீதியின் புனரமைப்புப் பணிகள் அடுத்த வருடம் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ளன.

ஏற்கனவே பண்ணையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி அகலிக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டுள்ளது.

எஞ்சிய பகுதியே அடுத்த வருடம் ஆசிய அபிவிருத்தி வங்கி யின் உதவியுடன் புனரமைக் கப்படவுள்ளதாக என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ-17)

## வடமராட்சியில் புதிதாக குடிதண்ணீர் தாங்கிகள்

வடமராட்சி, டிசெ.20

வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் மருதங்கேணி, செம்பியன் பற்று, குடத்தனை ஆகிய கிராமங்களுக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கான நடவடிக்கைகளைத் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் குடிதண்ணீர் திட்டத்துக்கெனத் தாளையடி எல்லைப் பிரதேசத்தில் மூன்று குழாய்க் கிணறுகளை அமைத்து அந்தக் கிணறுகளிலிருந்து தண்ணீர் பெறப்படும். தண்ணீரை விநியோகத்துக்காகச் சேமிக்கவென மருதங்கேணி, குடத்தனை ஆகிய கிராமங்களில் தலா இரு தண்ணீர்தாங்கிகளும் செம்பியன்பற்று கிர்ாமத்தில் ஒரு தண்ணீர்த் தாங்கியும் 19 மில்லியன் ரூபா செலவில் நிறுவப்படவுள்ளன.

இந்தத் தண்ணீர் தாங்கிகளிலிருந்து குழாய் மூலம் அந்தந்தக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படும் என யாழ். பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (த-8)

## திருத்தப்படுகிறது குமுதினி

யாழ்ப்பாணம், டிசெ.20

பழுதடைந்துள்ள குமுதினிப் படகு ஒரு வாரத்துக்குள் திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பயணிகள் படகு திடீரெனப் பழுதடைந்ததை அடுத்து அதனைத் திருத்தியமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது நெடுந்தீவு-குறிகாட்டுவான் இடையே பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையில் தனியார் படகுகளே ஈடுபட்டுள்ளன என்று அந்த அதிகாரி மேலும் கூறினார்.

**இந்தப் பயணிகள் படகு திடீரெனப் பழுதடைந்தமையால் அதனைத் திருத்தியமைக்கும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

இதேவேளை - சீரற்ற கால நிலை காரணமாக நேற்று முன்தினம் மாலையில் இந்தப் பயணிகள் படகுச் சேவை பாதிக்கப்பட்டது.

ஆயினும் நேற்றுக் காலை முதல் இந்தச் சேவை வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

## கண்ணாடிப்பிட்டி மயானத்தின் அபிவிருத்திக்கு மக்கள் பங்களிப்பு

தென்மராட்சி, டிசெ..20

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயான அபிவிருத்திக்குத் தாமும் பங்களிக்க மக்கள் பலர் முன்வந்துள்ளனர்.

இந்த மயானப் பராமரிப் [illegible] புகளை நகர சபையினர் நீண்ட காலமாகச் செய்து வருகின்றனர். சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு வரும் இந்த மயானத்தைச் சபை எல்லைக்குட்பட்ட அனைத்து [illegible] மக்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

மயானப் பராமரிப்புக்குப் பெருமளவு நிதியை நகர சபை செலவிட்டு வருகிறது. இந்த நிதியின் ஒரு பகுதியைப் பொதுமக்கள் தாம் இந்த மயானத்தைப் பயன்படுத்தும் போது நகர சபைக்கு வழங்க முன்வந்துள்ளனர். நிதி பெற்றுக் கொள்வது தொடர்பாக நகர சபையினர் மக்களின் நலன்களையும், மயானத்தின் அபிவிருத்தியினையும் கருத்தில் கொண்டு ஒருசிறு தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோவை, சூலூர் விமானப்படைத் தளத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் 33ஆவது படைப் பிரிவுக்கு ஜனாதிபதி தரச்சான்று பதாகைகளை வழங்குகிறார் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி. அருகில் விமானப்படை தலைமைத் தளபதி என்.ஏ.கே.பிரௌனி.

## தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 24 பேரின் கருணை மனு நிராகரிப்பு

டில்லி, டிசெ.20

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 24 பேரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாக உள்துறை இணை அமைச்சர் முள்ளப்பள்ளி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

லோக்சபாவில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அவர், 2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மொத்தம் 24 பேரின் கருணை மனுக்கள் அரசால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. இதில் மும்பைத் தாக்குதலில் தொடர்புடைய அஜ்மல் கசாப்பின் கருணை மனுவும் அடக்கம். கசாப் கடந்த மாதம் 21 ஆம் திகதி மகாராஷ்டிராவின் எரவாடா சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

இன்னும் 13 பேரின் கருணை மனுக்கள் நிலுவையில் உள்ளன. 2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் தூக்கு விதிக்கப்பட்ட அப்சல் குரு மற்றும் பஞ்சாப் முன்னாள் முதல்வர் பியாந்த்சிங் கொலையாளி ரஜோனா ஆகியோரது கருணை மனுக்கள் அடங்குகின்றன.

அரசியல் சாசனப் பிரிவு 72 இன் கீழ் கருணை மனுக்கள் மீது முடிவு எடுக்க கால வரையறை எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (வ)

## 78 ஆயிரம் ச.கி.மீ. பரப்பளவு பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புக்குள்

இந்திய பிராந்தியத்தில் உள்ள ஜம்மு-காஷ்மீரில் 78 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்பளவு இடத்தை பாகிஸ்தான் சட்டவிரோதமாக ஆக்கிரமித்து இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது. இது தொடர்பாக மக்களவையில் நேற்று முன்தினம் பேசிய உள்துறை இணை அமைச்சர் முல்லப் பள்ளி ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:-

சீனா- பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் 1963 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டது. அதன்படி, இந்தியப் பகுதியில் பாகிஸ்தான் ஆக்கிரமித்திருந்த 5180 சதுர கிலோ மீற்றர் பகுதியை சீனாவுக்குக் கொடுத்து விட்டது.

இந்தோ- பங்களாதேஷ் இந்தோ- சீனா, இந்தோ- நேபாள், இந்தோ-பூடான் மற்றும் இந்தோ-மியன்மார் எல்லைகள் வழியாக எந்த வெளிநாடுகளும் அத்துமீற வில்லை. ஆனால் பாகிஸ் தான் அத்துமீறி இந்திய நிலைகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் பிராந்திய ஒருமைப் பாட்டை திறம்பட பாதுகாக்கத் தேவையான நடவடிக்கை எடுப்பதில் இந்தியா விழிப்புடன் உள்ளது-என்றார். (வ)

## கறுப்புப் பணப்புழக்க பட்டியலில் 8 ஆவது இடத்தில் இந்தியா

உலக ரீதியில் கறுப்புப்பணம் புழக்கத்தில் உள்ள நாடுகளின் பட்டியலில், இந்தியா 8 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. குளோபல் பினான்சியல் இன்டிகிரிட்டி வெளியிட்ட அறிக்கையில், இந்தியா சுதந்திரம் பெற்றது தொடக்கம் 2010 வரையிலான கால கட்டத்தில், 232 பில்லியன் டொலர்கள் கறுப்புப் பணத்தை இந்தியர்கள் வைத்திருந்தனர் என்றும், இது லஞ்சம், ஊழல் மற்றும் பல்வேறு வழிகளில் பெறப்பட்ட பணமாக இருந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

இதே காலகட்டத்தில், கறுப்புப் பணம் மூலமாக இந்தியர்கள் வாங்கியுள்ள சொத்துக்களின் மதிப்பு 487 பில்லியன் டொலர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# இறையாண்மையைப் பாதுகாக்க தயார் நிலையில் படைப்பிரிவுகள்

## விமானப்படையின் 50 ஆவது நிறைவு நிகழ்வில் பிரணாப் கருத்து

கோவை, டிசெ.20

அமைதியே இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை. எனினும் நாட்டின் இறையாண்மைக்குப் பாதிப்பு ஏற்படாமல் எந்த நேரத்திலும் படைப்பிரிவுகள் தயாராகவே உள்ளன- என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

விமானப்படையின் 25 ஆவது மற்றும் 33 ஆவது படைப்பிரிவுகள் 1963 இல் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவடைந்தன. இதையொட்டி இதன் பங்களிப்பைக் கௌரவித்து விருது வழங்கும் நிகழ்வு கோவை அருகே சூலூர் விமானப்படையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு இரு படைப் பிரிவுகளுக்கு தர விருதை



அங்கீகரிக்கும் கொடிகளை அதன் தளபதிகளிடம் வழங்கினார். இதை யொட்டி, விமானப்படை வீரர்கள் மற்றும் பாதுகாப்பு படை விமானங்களின் அணி வகுப்பு மரியாதையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார். அவர் அங்கு பேசுகையில் தெரிவித்ததாவது:-

நாட்டின் பாதுகாப்புக்காக விமானப்படையின் பாரம்பரியமிக்க இரு பிரிவுகளுமே (25, மற்றும் 33) முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டன. எமது விமானப்படை உலகிலேயே மிகத் திறன் வாய்ந்ததாக விளங்குவதோடு, இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக எவ்வித அச்சுறுத்தல் வந்தாலும் அதை எதிர் கொள்ளும் திறனோடு விளங் குகிறது.


அமைதியின் பக்கமே இந்தியா எப்போதும் நிற்கிறது. அதுதான் எமது வெளியுறவுக்கொள்கை. அந்த நோக்கம் வெற்றியடைய வேண்டும் என்பதைத் தான் நாம் எப்போதும் முன் னிறுத்துகிறோம். எமது பாதுகாப்பு விடயத்தில் தற்காப்புக் கொள்கையைக் கடைபிடித்து வருகிறோம். அதேசமயத்தில் நாட்டின் இறையாண்மைக்கு குந்தகம் ஏற்படாமல் தடுப்பதில் எமது படைப் பிரிவுகளும், வீரர்களும் தயார் நிலை யிலேயே உள்ளனர். ஐக்கிய நாடுகள் அவையின் அமைதிப்பணிக்கு எமது படைவீரர்கள் தெரிவு செய்யப்பட் டிருப்பது இதன் வெளிப்பாடுதான்-என்றார். (வ)

# இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு 11 வயது மாணவி ஊர்வசி நோட்டீஸ்!

## தகவல் அறியும் உரிமைச் சட்டம் குறித்து

டில்லி, டிசெ.20

தகவல் அறியும் உரிமை சட்டத்தை பெரும்பாலானோர் தவறாகப் பயன்படுத்துவதாக குற்றம் சாட்டிய பிரதமர் மன்மோகன்சிங் அதற்கான ஆதாரங்களைத் தர வேண்டும். இல்லையேல் மன்னிப்பு கேட்கவேண்டும். இல்லாவிட்டால் சட்ட ரீதியான நடவடிக்கையை சந்திக்க நேரிடும் என்று 11 வயதுப் பாடசாலை மாணவி பிரதமருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.



காங்கிரஸ் தலைவர் சோனியாவின் மருத்துவ சிகிச்சைக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?' என்று தகவல் உரிமைச் சட்ட ஆர்வலர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்கு காங்கிரஸ் மற்றும் மத்திய அரசு வட்டாரங்களில் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. தனிப்பட்ட மனிதர்களின் மருத்துவ செலவு பற்றி தகவல் கேட்பதா என்று காங்கிரஸ் தலைவர் [illegible]

இதற்கிடையில் ஒக்டோபர் 12 ஆம் திகதி டில்லியில் நடைபெற்ற தகவல் உரிமைச் சட்ட மாநாட்டில் பேசிய பிரதமர், 'தகவல் பெறும் உரிமை சட்டத்தை தவறாக பயன்படுத்தும் சிலர் தேவையே இல்லாத தகவல்களையும் தனிப்பட்ட தகவல்களையும் ஒன்றுக்குமே உதவாத தகவல்களையும் கேட்கின்றனர். பரந்த அளவுக்கு அவர்கள் கேட்கும் தகவல்களைத் திரட்ட வேண்டியுள்ளது- என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதற்கு உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவை சேர்ந்த தகவல் உரிமைச் சட்ட ஆர்வலர் 11 வயது ஊர்வசி சர்மா என்ற மாணவி, பிரதமர், மன்மோகன் சிங்குக்கு தன் சட்டத்தரணி மூலம் கடந்த திங்கட்கிழமை நோட்டீஸ் அனுப்பியுள்ளார்.

## ஹைதராபாத் விமான நிலையத்தில் தீ 6 விமானங்கள், ஒரு ஹெலி தீக்கிரை

ஹைதராபாத், டிசெ.20

ஹைதராபாத் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 6 விமானங்கள், ஒரு ஹெலிகொப்டர் என்பன எரிந்து நாசமாகின.

தீ விபத்து குறித்து விசாரணை நடத்த ஆந்திர முதல்வர் உத்தரவிட்டுள்ளார். ஆந்திர தலைநகரமான ஹைதராபாத்தில் உள்ள பேகம்பேட் விமான நிலையத்தில் பயிற்சி விமானங்கள், அரச விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் மேற்படி விமான நிலையத்தில் திடீரென தீ பிடித்தது.

தீ பிடித்த இடத்தில் விமானங்களுக்கான வெள்ளை பெற்றோல் பரல்கள் இருந்தன. தீ மளமளவெனப் பரவியது.

பயங்கர சத்தத்துடன் பரல்கள் வெடித்துச் சிதறின. 3 முறை பயங்கர வெடிச்சத்தம் கேட்டதால் அந்தப்பகுதி மக்கள் அலறியபடி வீட்டுக்குள் இருந்து வெளியே ஓடிவந்தனர். சம்பவ இடத்துக்கு அருகே சென்றனர்.

இதற்கிடையில் தீ விபத்து குறித்து அறிந்த விமானத் துறை அதிகாரிகள் உடனடியாகத் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

10 தீயணைப்பு வாகனங்கள் சென்றன. சுமார் 4 மணி நேரம் போராடி தீயை அணைத்தனர். தீ விபத்தில் 5 பயிற்சி விமானங்கள், அரசு விமானம், ஆந்திர முதல்வரின் ஹெலிகொப்டர் ஆகியவை கருகியதாகக் கூறப்படுகிறது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுமிகளை துன்புறுத்தியவர் கைது

ரொரன்றோ, டிசெ.20

சிறுமிகளைத் தொடர்ந்து பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்த நபர் கனடாவில் கைது செய்யப்பட்டார்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் குழந்தைகள் நல மையத்தை நடத்தி வந்த பெண்மணி ஒருவரின் கணவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

வேலைக்குச் செல்லும் பெற்றோர், தங்கள் குழந்தைகளை இங்கு விட்டு செல்வர். இந்தநிலையில் இவரின் கணவர் தொடர்ந்து சிறுமிகளை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்தமை தெரியவந்தது. இதனையடுத்து இவரைக் கைது செய்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்த பாடசாலைச் சிறுவர்களுக்கு அமெரிக்காவின் பல பகுதிகளிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

## நாசா விண்கலங்கள் நிலவில் மோதி அழிப்பு

காலாவதியான இரு விண்வெளி ஓடங்கள் நிலவில் மோதி அழிக்கப்பட்டன. விண்வெளி ஓடங்கள் மோதிய இடத்துக்கு அமெரிக்காவின் முதல் விண்வெளி பெண் வீராங்கனையான சேல்லி ரைட்-டின் பெயர் சூட்டப்பட்டது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா நிலவில் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்புள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறது. இதற்காக சிறிய அளவிலான விண்வெளி ஓடங்கள் அனுப்பப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அனுப்பப்பட்ட விண்வெளி ஓடங்கள் இதுவரை சுமார் 1,14,000 புகைப்படங்களை பூமிக்கு அனுப்பியுள்ளன.

இந்த ஆய்வில் ஈடுபட்டிருந்த எப், பிளோ என்ற விண்வெளி ஓடங்களில் எரிபொருள் தீர்ந்து விட்டதால் அவற்றை நிலவின் மீது மோதவிட்டு அழித்துவிட நாசா முடிவு செய்திருந்தது. அதனையடுத்து இவற்றின் ஆய்வு நடவடிக்கைகள் கடந்த 9ஆம் திகதி முதல் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்த நிலையில் விண்வெளி ஓடங்களை நேற்று முன்தினம் மாலை நிலவின் மேற்பரப்பில் உள்ள மலையின் மீது மோதச் செய்து அமெரிக்க விஞ்ஞானிகள் தகர்த்தனர்.

30 வினாடி இடைவெளியில் எப்பும், பிளோ-வும் ஒன்றன்பின் ஒன்றாக மோதி வெடித்துச் சிதறின.

இந்த விண்வெளி ஓடங்கள் மோதி தகர்ந்த இடத்துக்கு அமெரிக்காவின் முதல் விண்வெளி பெண் வீராங்கனையான சேல்லி ரைட்-டின் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்று நாசா அறிவித்திருக்கிறது.

# உக்ரைனில் உறைபனி

## இதுவரை 37 பேர் சாவு; பலரின் நிலை கவலைக்கிடம்

கீவ், டிசெ.20

உக்ரைன் நாட்டில் தட்பவெப்பநிலை மைனஸ் 17 டிகிரிக்கும் கீழ் சென்றுள்ளது. உறையவைக்கும் இந்தக் கடும் குளிர் காரணமாக இதுவரையில் 37 பேர் உயிரிழந்துள்ளனர்.


ஐரோப்பாவின் கிழக்கில் உள்ள உக்ரைன் நாட்டில் கடந்த ஒரு மாதமாகக் கடுமையாக பனி பொழிந்து வருகிறது.

அங்கு தட்பவெப்ப நிலை மைனஸ் 17 டிகிரிக்கும் கீழ் சென்றுள்ளது. இதனால் மக்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர், இதனால் இந்த மாதத்தில் மட்டும் 37 பேர் பலியாகி உள்ளனர்.

மேலும் பலரது உடலின் வெப்பநிலை கணிசமாக குறைந்து ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வீடில்லாமல் சாலையோரங்களில் வசிப்பவர்களுக்காக உக்ரைன் அரசு 1,500 தங்கும் இடங்களை அமைத்து, உணவு வழங்கி வருகிறது.

கடும் பனிப் பொழிவால் சாலையில் பனிக் குவியல்கள் காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.



## கிழக்கு ஜெருசலேமில் 1,500 குடியிருப்புகள்

### பிடிவாதம் பிடிக்கும் இஸ்ரேல் பிரதமர்



ஜெருசலேம், டிசெ.20

"தலைநகர் ஜெருசலேத்தை இரண்டாக பிரிக்க முடியாது. திட்டமிட்டப்படி குடியிருப்புகள் அமைக்கப்படும்" என்று இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அண்மையில் பலஸ்தீனத்திற்கு உறுப்பினர் அல்லாத கண்காணிப்பாளர் நாடு என்ற அந்தஸ்தை ஐ.நா வழங்கியது.

இதனையடுத்து இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, கிழக்கு ஜெருசலேத்தில் ஆயிரத்து 500 குடியிருப்புகளை கட்ட ஒப்புதல் வழங்கினார். அதற்கு பலஸ்தீனியர்கள் உட்பட உலக நாடுகள் பலவும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இதுகுறித்து பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு,

"ஜெருசலேத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டமில்லை. கிழக்கு ஜெருசலேத்தில் திட்டமிட்டபடி 1500 குடியிருப்புகளை இஸ்ரேல் அரசு கட்டும்.

இந்த விடயத்தில் யாருடைய எதிர்ப்புகளையும் கருத்தில் கொள்ளப்போவதில்லை" என்று தெரிவித்துள்ளார்.

## ஈராக் ஜனாதிபதி மருத்துவமனையில் அனுமதி



பக்தாத், டிசெ.20

ஈராக் ஜனாதிபதி ஜலால் தலபானி (வயது-79) பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து ஈரான் பிரதமரின் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்-

"2 நாள்களுக்குப் பிறகு மருத்துவர்கள் அளிக்கும் அறிக்கையைப் பொறுத்தே, ஜனாதிபதிக்கு ஈராக்கிலேயே சிகிச்சையை தொடர்வதா அல்லது வெளிநாட்டில் சிகிச்சை அளிப்பதா என்று முடிவு செய்யப்படும். பிரதமர் நெப்ரி அல் மாலிக் ஜனாதிபதியை நேரில் சென்று நலம் விசாரித்தார்." என்று தெரிவித்தார்.

எனினும் ஜனாதிபதி செய்தித் தொடர்பாளர் இது தொடர்பாக தகவல் எதையும் வெளியிடவில்லை.

இதேவேளை கடந்த திங்கட்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தலபானிக்கு இன்னும் நினைவு திரும்பவில்லை என்ற தகவல்களும் வெளியாகியுள்ளன.

## போலியோ தடுப்பு உத்தியோகத்தர்கள் பாகிஸ்தானில் சுட்டுக் கொலை

கராச்சி, டிசெ.20

பாகிஸ்தான் கராச்சி நகரில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் போலியோ தடுப்பூசி ஏற்றும் பெண் உத்தியோகத்தர்கள் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் போலியோ தடுப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டிருந்தவர்களே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.



யுனிசெப் அமைப்பினால் இந்தத் திட்டத்துக்கு அனுசரணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதலுக்கு எவரும் இதுவரை உரிமை கோராத நிலையில் தலிபான்கள் நடத்தியிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளை பாகிஸ்தான் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

சர்வதேச ரீதியில் போலியோவின் பாதிப்பினால் அவதியுறும் நாடுகளில் பாகிஸ்தானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## அமைச்சரவையில் பங்கேற்று சாதனை படைத்தார் எலிசபெத்

லண்டன், டிசெ.20



பிரிட்டன் மகாராணி இரண்டாம் எலிசபெத் அமைச்சரவைக் கூட்டத்தில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு சாதனை படைத்தார்.

பிரிட்டன் அரசர்கள் மிக முக்கியமான காலகட்டத்தில் மட்டுமே அமைச்சரவை கூட்டத்தில் கலந்து கொள்வர்.

இந்நிலையில், இரண்டாம் எலிசபெத் லண்டனில் டவுனிங் தெருவில் அமைந்துள்ள பிரதமர் டேவிட் கமரூன் அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் வந்தார்.

பிரதமருடைய இருக்கையில் அமர்ந்து சிறிது நேரம் விவாதித்தார். எலிசபெத் அரியணை ஏறிய வைர விழாவையொட்டி நடந்த கொண்டாட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் பேசப்பட்டது. பிரிட்டிஷ் அமைச்சரவை கூட்டத்தில் எலிசபெத் அரசி கலந்து கொண்டது ஒரு வரலாற்று நிகழ்வாக கருதப்படுகிறது.

இரண்டாம் உலகப் போரின்போதே எலிசபெத்தின் தந்தை நான்காவது ஜோர்ஜ் மன்னர் பிரிட்டன் அமைச்சரவையைக் கூட்டி விவாதித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.


# துப்பாக்கி வன்முறைகள்; தடுக்க விரைவில் நடவடிக்கை

## வெள்ளை மாளிகை அறிவிப்பு

வோஷிங்டன், டிசெ.20

அமெரிக்காவில் துப்பாக்கி வன்முறைகள் பெருகி விட்டன. அதற்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் ஜே கார்னே தெரிவித்ததாவது:-




"இது சிக்கலான பிரச்சினை. இதற்கு உரிய தீர்வு காணப்பட வேண்டும். தற்போதுள்ள அரசியலமைப்புச் சட்டங்கள், நடவடிக்கைகள் இந்தப் பிரச்சினையை முழுமையாகக் கையாளும் விதத்தில் இன்னும் துப்பாக்கி உரிமைச் சட்டங்களைக் கடுமையாக்குவதற்கு ஜனாதிபதி பராக் ஒபாமா அதிக முன்னுரிமை கொடுத்துள்ளார்.

இதுகுறித்து மக்கள் பிரதிநிதிகள், கல்வியாளர்கள், மனோதத்துவ நிபுணர்கள், சட்ட அமுலாக்கத்துறையினர் ஆகியோருடன் இணைந்து இதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்." என்றார்.

இதேவேளை, தன்னிடம் உள்ள அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்தி, துப்பாக்கி வன்முறைக் கலாசாரத்தில் இருந்து அமெரிக்கக் குழந்தைகளைப் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஒபாமா உறுதியளித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிஜியைத் தாக்கிய கடும் புயலால் 8 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நிர்க்கதி

சுவா, டிசெ.20

பிஜி தீவைத் தாக்கிய புயலால் அங்கு சுற்றுலா சென்ற 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் நிர்க்கதியாகியுள்ளனர்.

நியூசிலாந்து நாட்டின் வடபகுதியில் இருந்து 1,100 கடல் மைல் தூரத்தில், பசிபிக் பெருங்கடலின் இடையில் உள்ளது பிஜி தீவு.

சமோவா என்ற இடத்தில் வீசிய 'இவான்' சூறாவளிக்கு 8 பேர் உயிரிழந்தனர். இந்த நிலையில் பிஜியில் நேற்று முன்தினமும் பலத்த மழையுடன் கடும் சூறாவளி காற்று வீசியது. மணிக்கு 200 கி.மீற்றர் வேகத்தில் வீசிய இந்த சூறாவளியால் பல வீடுகளின் மேற்கூரைகள் பறந்து விழுந்தன.



தொடரும் கடும் மழையால் மின்சார விநியோகம் நிறுத்தப்பட்டது. பிஜி தீவைச் சுற்றிப்பார்க்க வந்த வெளிநாட்டு பயணிகள் உட்பட 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர், 137 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சூறாவளியை அடுத்து விமான சேவைகள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பிஜி அரசு அறிவித்துள்ளது.



ஆப்கன் வீதியில் தண்ணீர் குடங்களை உடல் முழுவதும் கட்டி வைத்து விற்பனை செய்யும் சிறுவன். ஆப்கனில் பாடசாலை செல்லும் சிறார்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது என்று தொண்டு நிறுவனங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

# பாடசாலைக்கு துப்பாக்கி கொண்டு வந்த சிறுவன்

## தற்காப்புக்காகவே என்றவன் விசாரணையில்

வோஷிங்டன், டிசெ.20

அமெரிக்காவில் 6ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன், பாடசாலைக்குத் துப்பாக்கியுடன் வந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவில் கனக்டிக்கட்டில் உள்ள சாண்டி ஹீக் தொடக்க பள்ளியில் இளைஞர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 20 குழந்தைகள் உட்பட 28 பேர் உயிரிழந்தனர்.

இந்தநிலையில் உடாவின் மேற்கு கியர்ன்ஸ் பகுதியில் உள்ள தொடக்கப் பாடசாலையில் 6ஆம் வகுப்பில் கல்விகற்கும் 11 வயது மாணவன் ஒருவன் பள்ளிக்கு துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை கொண்டு வந்துள்ளான்.

அவன் பையில் துப்பாக்கி இருப்பதைப் பார்த்து பயந்துபோன சக மாணவர்கள் இது குறித்து ஆசிரியையிடம் தெரிவித்தனர். அவர் உடனே பொலிஸாருக்கு தகவல் கொடுத்தார்.

பொலிஸார் விரைந்து வந்து துப்பாக்கியையும், தோட்டாக்களையும் பறிமுதல் செய்தனர். அந்த சிறுவன் தன் துப்பாக்கியில் தோட்டாவை நிரப்பவில்லை. இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

''யாராவது என்னைத் துப்பாக்கியால் சுட்டால் தற்காத்துக் கொள்ளவே துப்பாக்கியைப் பள்ளிக்கு கொண்டு வந்தேன்.'' என்று அந்தச் சிறுவன் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளான்.

# கிறிஸ்தவர்கள் முதலிடம் இந்துக்கள் மூன்றாமிடம்

வோஷிங்டன், டிசெ.20

அமெரிக்காவில் உள்ள பேவ் (பி.இ.டபிள்யூ) பேரவை அமைப்பு உலக அளவில் மதரீதியாக மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தியுள்ளது. கணக்கெடுப்பின் படி இந்து மதம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

அந்தக் கணக்கெடுப்பின்படி கிறிஸ்தவர்கள் முதலிடத்தில் உள்ளனர். 220 கோடி பேர் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றுகின்றனர். இது மக்கள் தொகையில் 32 சதவீதமாகும்.

இவர்களை தொடர்ந்து 2ஆவது இடத்தில் முஸ்லிம்கள் உள்ளனர். இவர்களின் மக்கள் தொகை 160 கோடி. 3ஆவது இடத்தில் இந்துக்கள் உள்ளனர். இந்து மதத்தைப் பின்பற்றுபவர்களின் தொகை 100 கோடி. இது உலக மக்கள் தொகையில் 15 சதவீதமாகும்.

இவர்களையடுத்து 50 கோடி புத்த மதத்தினரும், 1 கோடியே 40 லட்சம் யூதர்களும் உள்ளனர். இந்த கணக்கெடுப்பு மற்றும் ஆய்வு 230 நாடுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடத்தப்பட்டது. அவர்களில் 10இற்கு 8 பேர் மத அடிப்படையில் வாழ்கின்றனர். மொத்தம் 580 கோடி பேர் பல்வேறு மதங்களைக் கடைபிடித்து வருகின்றனர் என்றும் அந்தக் கணக்கெடுப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டுக்கு வருவோரால் தொல்லையே அதிகம்

## ஜேர்மனி மக்கள் கருத்து

பெர்லின், டிசெ.20

புலம்பெயர்ந்து வருபவர்களால் தொல்லையே அதிகம் என ஜேர்மனி மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பெரட்டெல்ஸ்மேன் அறக்கட்டளை, 'எம்னிட்' என்ற நிறுவனத்துடன் இணைந்து புலம்பெயர்ந்தோர் குறித்து ஆய்வொன்றை நடத்தியது. அவர்கள் 1002 பேரிடம் கருத்துகளை கேட்டறிந்தனர்.

புலம்பெயர்ந்து வருபவர்களால் நன்மையும் உண்டு, தீமையும் உண்டு என 50 சதவீதமானோர் பேர் கருதுகின்றனர்.

சமூக பாதுகாப்புக்கு இவர்களின் வருகை மேலும் ஒரு சுமையைப் போன்று உள்ளது என மூன்றில் இருவர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும் இவர்களின் வருகையால் சர்வதேச நிறுவனங்கள் ஜேர்மனியில் முதலீடு செய்வது அதிகரித்துள்ளது. இதுதவிர நாட்டின் தொழில்நுட்ப பணியாளர்களின் தேவை நிறைவு பெறுவதாகவும் பெரும்பாலானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

மேலும் இரட்டை குடியுரிமை வழங்க வேண்டும் என்றும், இன- மத வேறுபாடுகள் குறித்த சட்டங்களை கடுமையாக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com

HND in Pharmacy
Be a Pharmacist in 2 Years
* Work in Government/Private Sector
* Run your own Pharmacy
Lectures by MBBS Doctors !
Entry Req: 3 Passes in A/L -Bio/Maths
Admissions are open now !
K.U Education
Pioneers in Medical Studies
[ Small Group Classes/Internship will be arranged ]
Knowledge Universe
(லாவா வைத்தியசாலை மேல்மாடி)
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
Tel :0777302882 Web :www.kugroup.info
(சி/3053) (45.6.7)

# கொங்கோ முன்னாள் இராணுவத் தளபதி விடுதலை



கொங்கோவின் முன்னாள் சிவில் இராணுவ தலைவரான மத்தியூ நுட்ஜோலோ சூய் இழைத்ததாகக் கூறப்பட்ட யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் என்பவற்றிலிருந்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு கொங்கோ குடியரசின் ரிஷ் இற்றுறி மாகாணத்தில் பொகொறோ கிராமவாசிகள் 200 பேரை கொலை செய்ததாக இவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.


இந்த வழக்கில் சாட்சியம் அளித்தவர்கள், பொதுமக்கள் உயிரோடு எரிக்கப்பட்டதாகவும் பெண்கள் மீது பலாத்காரம் புரியப்பட்டதாகவும் குழந்தைகள் சுவரில் அடித்துக் கொல்லப்பட்டனர் எனவும் தெரிவித்தனர்.

எனினும் நுட் ஜோலோ, தான் இந்த தாக்குதலுக்கு கட்டளையிடவில்லை எனவும் சில நாள்களின் பின் தான் இது பற்றி கேள்விப்பட்டதாகவும் கூறியிருந்தார்.

நுட்ஜோலோ மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என்னும் காரணத்தால் இவரை விடுவிப்பதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற நீதிபதி கூறினார்.

எனினும் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் குற்றவாளி அல்ல என தீர்மானிக்கப்பட்டதால், அவர் எதுவுமறியாத அப்பாவி என்று அர்த்தப் படாது எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
22.12.1958
மறைவு
01.01.2012

அமரர்
பூரணலிங்கம் பரமேஸ்வரன்

திதி: (20.12.2012)

ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தாலும்
அன்புத் தெய்வத்தின் ஆறாத் துயர்தனை
ஈடு செய்ய இனி யாருமில்லை
நெஞ்சமதில் உம்முருவம் நீங்காமல் வாழ்கிறதே
தஞ்சமென்று நாம் அடைய
தரணியிலே யாருமில்லை
அல்லும் பகலுமாய் உழைத்திட்ட உத்தமரே
அயலவர் மட்டுமல்ல அவனியில் அனைவரது
உள்ளத்திலும் உறைந்திட்டீரே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மீளாத்துயரில் மூழ்கியிருக்கும்
குடும்பத்தினர்.

சைவப் பாடசாலை வீதி,
திருநெல்வேலி. (26929)(2.6.1)

வருஷாப்திக அழைப்பு



பிரம்மஸ்ரீ
கணபதீஸ்வரக்குருக்கள்
சிவசுப்பிரமணியசர்மா

சரவணை கிழக்கு, மயிலப்புலம் ஐயனார் ஆலய முன்னாள் பிரதம குருக்களும் பூசகருமாகிய கணபதி ஐயாவின் புத்திரரும், அராலி ஞானியார் ஆலய பிரதமகுருக்களும், பூசகருமாகிய சிவசுப்பிரமணியசர்மாவின் ஓராண்டுசிரார்த்தம்.

சென்ற கர வருடம் மார்கழி 16 ஆம் திகதி (01.01.2011) ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்க அட்டமி திதியில் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் பிரம்மஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் சிவசுப்பிரமணியசர்மா அவர்களின் வருஷாப்திகம் நிகழும் நந்தன வருடம் மார்கழி மாதம், 5 ஆம் திகதி இன்று (20.12.2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஞானியார் கோயிலடி,
அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை. (26898)(6.1)

மனைவி, பிள்ளைகள்.

யாழ்/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்
பழைய மாணவர் சங்கம்
மீண்டும் சந்திப்போம்

யாழ்.புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களை ஒன்றிணைத்து பாடசாலையின் கடந்த கால அனுபவங்களை மீட்கவும், பழைய நட்பினைப் புதுப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஓர் அரிய நிகழ்வு
"மீண்டும் சந்திப்போம்"
உடன் தொடர்பு கொள்ளுங்கள் உங்கள் நண்பர்களுக்கும் தெரியப்படுத்துங்கள் நிகழ்வு நடைபெறும் திகதி:- 27.12.2012
தொடர்புகளுக்கு:
லி.நிர்மலன் - 0779788746
[illegible] - 0772298923
[illegible] - 0774803746
தொடர்பு கொள்ள வேண்டிய இறுதித் திகதி :- 23.12.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலவீனம், பலவீனம் அல்ல!

(3)

நீங்கள் ஏன் அந்தக் காரியத்தைச் செய்யவில்லை என்று ஒருவரைக் கேட்டால், என் உடல் இடம் கொடுக்கவில்லை என பளிச்சென்று பதில் சொல்லிவிடுகிறார். உடல் இடம் கொடுக்கவில்லையென்பது உண்மையல்ல. மனம் இடம் கொடுக்கவில்லையென்பதுதான் உண்மை.

நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுகிறோம். நம்முடைய சக்தியை, தகுதியை நாமே குறைத்து மதிப்பிட்டுக் கொள்கிறோம். அதன் விளைவாக நம்மிடம் உள்ள சிறிய குறைபாடுகளும் பெரிதாகத் தோற்றமளிக்கிறது. அதை வைத்து நம்மால் சாத்தியமில்லை என்கிற முடிவுக்கு நாமே வந்து விடுகிறோம்.

எல்லா மனிதர்களிடமும் பலமும் இருக்கிறது. பலவீனமும் இருக்கிறது. பெற்றிருக்கின்ற பலத்தை முதலில் உணருங்கள். இருக்கின்ற பலவீனங்களை அலட்சியப்படுத்துங்கள். பலத்தை செயற்படுத்துகின்றபோது பலவீனம், பலவீனமடைந்து விடுகிறது. சாதனைகள் தாமாகவே உருவாகின்றன. பெரியவர்களின் வாழ்க்கை இதைத்தான் நமக்கு சொல்லிக் கொடுக்கிறது.

**அவமானம் உங்களை வேகப்படுத்தட்டும்**

நீங்கள் அவமானப்படுத்தப்படுகிறீர்களா? உடனே உணர்ச்சி வசப்படாதீர்கள். ஏன் அவமானப் படுத்தப்பட்டோம் என்று யோசியுங்கள்.

இரண்டு சிறுவர்கள். ஏழைச் சிறுவர்கள். கிராமத்தில் வசிப்பவர்கள் ஏதோ வேலையாகச் சென்ற தந்தையுடன் நகரத்துக்குப் போனார்கள். அங்கே உள்ள பிரமாண்டமான கடைகளை அப்போதுதான் முதன் முறையாகப் பார்க்கிறார்கள். வாய் பிளந்து கடைகளைப் பார்த்துக் கொண்டே செல்கிறார்கள்.

மறுநாள் தாயாரின் பிறந்ததினம் என்பது அவர்களுடைய நினைவுக்கு வருகிறது. ஏதாவது பரிசுப் பொருளை வாங்கி, தாயாரை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஒரு கடைக்குள் இரண்டு சிறுவர்களும் நுழைகிறார்கள். அங்குள்ள பொருள்களையெல்லாம், வைத்த விழி வாங்காமல் பார்க்கிறார்கள்.

ஏழைச் சிறுவர்கள் இவ்வளவு பெரிய பணக்கார கடைக்குள் நுழைந்து அங்குமிங்கும் செல்வதைக் கடைச் சிப்பந்திகள் சந்தேகத்தோடு பார்க்கிறார்கள். கடைச் சிப்பந்தி ஒருவன் என்ன வேண்டுமென்று கேட்கிறான்.

கண்ணாடி அலுமாரியில் உள்ள ஒரு சீப்பு மலிவாக இருக்குமென்று எண்ணுகின்ற சிறுவர்கள், அந்தச் சீப்பைக் கொடுக்கும்படி கேட்கிறார்கள். சீப்பை வெளியில் எடுக்காமல் கடைச் சிப்பந்தி விலையைச் சொல்லுகிறான். பையில் கையை விட்டுப் பார்க்கின்றார்கள். சிப்பந்தி கூறிய விலையைக் கொடுத்து வாங்க அவர்களிடம் காசு இல்லை. நிலைமையைச் சொல்கிறார்கள்.

திருட வந்த பையன்கள் சமாளிக்கிறார்கள் என எண்ணிய கடைச் சிப்பந்தி அவர்களை நையப் புடைத்து கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளுகிறான். தாங்க முடியாத அவமானத்துடன் இருவரும் தெருவில் வந்து விழுகிறார்கள்.

இந்த அவமானம் இரண்டு பையன்களில் ஒருவன் மனதில் ஆழமாகத் தைத்துவிடுகிறது. தங்களைப் போல் எத்தனை சிறுவர்கள் பணக்காரக் கடைகளுக்குள் நுழைந்து இப்படி அவமானத்தால் வேதனைப்பட்டு இருப்பார்கள் என்று அவன் எண்ணுகிறான்.

வாழ்க்கையில் அவனுக்கு ஒரு கனவு உருவாகிறது. அவமானத்தால் விளைந்த கனவு அது. வீட்டுக்குத் திரும்பும் அந்தச் சிறுவன் விவசாயத் தொழிலில் ஈடுபட மறுத்து அருகில் உள்ள ஒரு கடையில் எடுபிடியாக அமர்கிறான்.

தன்னுடைய உழைப்பால், அக்கறையினால் அந்தக் கடையின் முக்கிய சிப்பந்தி ஆகிறான். வாடிக்கையாளர்களிடம் நளினமாகப் பேசி விற்பனையை அதிகரிக்கிறான். அந்தக் கடை முதலாளி வாழ்க்கையில் ஏற்படுகின்ற வேறு பிரச்சினைகளால் கடையை மூடி விட எண்ணுகிறார். இந்தச் சிறுவனுக்கு இப்போது நான்கைந்தாண்டு அனுபவம் ஏற்பட்டு விட்டது. கடையைத் தன்னிடம் ஒப்படைத்தால், அதற்குரிய தொகையை மெல்ல மெல்லக் கட்டி விடுவதாகக் கூறுகிறான். அவன் மீது பாசம் கொண்ட முதலாளி அதற்குச் சம்மதிக்கவில்லையாயினும், தான் கொள்முதல் செய்கின்றவர்களிடம் சிபாரிசு செய்து குறைந்த விலையில் சரக்குகளை அவனுக்குப் பெற்றுத்தர ஒப்புக் கொள்ளுகிறார்.

ஏழைகளும், மத்தியதர வர்க்கத்தினரும் வாங்கக் கூடிய பொருள்களை மட்டுமே அவன் கொள்முதல் செய்து ஒரு கடையை ஆரம்பிக்கிறான். விற்பனை பெருக பல கடைகள் உருவாகின்றன. மலிவு விலை பொருள்களை மட்டுமே விற்பனை செய்கின்ற கடைகளை நாடெங்கும் உருவாக்கி காலப் போக்கில் பெரிய கோடீஸ்வரனாகி விடுகிறான்.

நியூயோர்க் நகரில் பொருள்களை விற்பனை செய்வதற்கு என்றே பிரமாண்டமான வான் முட்டும் பலமாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டி முடிக்கிறான். அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த உட்ரோ வில்சன் அந்தக் கட்டடத்தை வந்து திறந்து வைக்கிறார்.

இது கதையல்ல. உண்மையில் நடந்த சம்பவம். இன்றைக்கும் பிரமாண்டமான அந்தக் கட்டடம் நியூயோர்க் நகரில் முக்கியமானதொரு விற்பனை நிலையமாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அவமானத்தால் அந்தச் சிறுவன் தாழ்வு மனப்பான்மையைப் பெற்றிருந்தால் இவ்வளவு பெரிய சாதனைக்கு சொந்தக்காரனாகி இருக்க முடியாது.

ஒருவர் அவமானப்படுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. மற்றவர்கள் அவரைப் பற்றி வைத்துள்ள தாழ்வான அபிப்பிராயம் காரணமாக இருக்கலாம். சந்தர்ப்ப சூழ்நிலைகள் காரணமாகி விடலாம். திட்டமிட்டு எதிரிகளால் அவன் அவமானப்படுத்தப்படலாம்.

பி.சி.கணேசன் (தொடரும்)

# எங்களுக்குள் காணப்படும் திறமைகள் ஏனையோருக்கும் பயன்பட வேண்டும்

## அமலமரித் தியாகி சபை வண. பிதா சத்தியசீலன் கருத்து

யாழ்ப்பாணம்,டிசெ.20

எங்களுக்குள்ளே காணப்படும் திறமைகள் தனிமனிதனுக்கு மட்டுமல்லாது அனைவருக்கும் பயன்பட வேண்டும். அதுவே எம்மை மனிதனாக மாற்றும் எனத் தெரிவித்தார் அமலமரித் தியாகி சபை வண.பிதா சத்தியசீலன் அடிகளார்.

யாழ்.தியாகி அறக்கொடை நிலையத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான நிதியுதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.தியாகி அறக்கொடை நிலைய சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் ஆசியுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு மனிதனும் தனக்குள்ள திறமைகளைக் கொண்டே சமூகத்துக்கு நல்ல பணிகளைச் செய்ய முடியும். நான் மட்டுமல்லாது என்னால் மற்றவர்களும் நன்மை அடைய வேண்டும் எனும் சிந்தனை மனதில் தோன்ற வேண்டும்.

சமூகப் பணிகளைச் செய்பவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் பலாபலன்களை வாழ்நாளிலேயே பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றே கூற வேண்டும். அவ்வாறானதொரு அறப்பணியை இந்த நிலையத்தினூடாகச் செய்தும் கொண்டிருக்கிறார்கள்.

தனது தேவை, தனது பொருளாதாரம் என்ற மனப்போக்கு இல்லாமல் அனைவருக்கும் உதவ வேண்டும் எனும் மனப்பக்குவம் ஒவ்வொருவரினது உள்ளத்திலும் தோன்ற வேண்டும்.

நாம் செய்கின்ற அறப்பணிகள் எம்மை மனிதர்களாக சமூகத்தில் பிரதிபலிக்கச் செய்கின்றது என்பதை உணர வேண்டும்.

அத்துடன் மற்றவர்களுக்குச் செய்கின்ற உதவிகள் பயனுள்ளதாகவும் அமைய வேண்டும். அதன் மூலம் உதவிகள் கிடைக்கப் பெறுகிறவர்கள் நன்மை அடைகிறார்களா என்பதையும் அவதானித்து உதவிகளை வழங்க வேண்டும்-என்றார்.

(வ-14)

# சைவசமயப் போட்டி முடிவுகள்

காரைநகர்,டிசெ.20

காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய சைவ சமய பாடப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இந்தப் பரீட்சையில் அதி உயர் பெறுபேறுகளைப் பெற்ற ஐந்து மாணவர்கள் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளதுடன், தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

**தங்கப்பதக்கம் பெறுவோர்கள்**

பி.ரேந்தினி- தரம் 3 (யாழ்ற்றன் கல்லூரி), கி.மதுஷன்- தரம் 4 (ஊரி அ.மி.த.க.வித்தி.), பா.சிவராஜினி- தரம் 6 (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி), செ.கமலேஸ்வரி -தரம் 9 (யாழ்ற்றன் கல்லூரி), க.சாந்தினி -தரம் 11 (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி) ஆகிய ஐந்து மாணவர்களும் தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

தரம் ரீதியாக முதல் ஐந்து இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பரிசில் பெறுவோர்,**

தரம் -2 சி.மயூரதன் (சுப்பிரமணிய வித்தி.), சு.சானுஷா (ஊரி அ.மி.த.க.வித்தி.), ஜெ.புவியரசன் (யாழ்ற்ரன் கல்லூரி), ச.பவித்திரா (மெய்கண்டான் வித்தி.), தி.கம்ஷிகா (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம் -3 பி.ரேந்தினி (யாழ்ற்ரன் கல்லூரி), சி.லக்சிகன் (சுப்பிரமணி வித்தி.), ச.கனிஸ்ரன் (ஊரி அ.மி.த.க.வித்தி.), அ.ஜெயந்தினி (சுப்பிரமணிய வித்தி.), இ.சுருதி (சுப்பிரமணி வித்தி.).

தரம் -4 கி.மதுஷன் (ஊரி அ.மி.த.க.வித்தி), தி.எழில்வேந்தன் (தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தி.), சு.சுகிர்தன் (ஊரி அ.மி.த.க.வித்தி), வி.கஜந்தினி (வலந்தலை வடக்கு அ.மி.த.க.வித்தி.), க.தர்சிகா (சுப்பிரமணி வித்தி.).

தரம் -5 செ.கஜரூபன் (யாழ்ற்ரன் கல்லூரி), ச.கஸ்தூரி (சுப்பிரமணிய வித்தி.), ஆ.பேபிஷாமினி (யாழ்ற்ரன் கல்லூரி), பே.தமிழினி (சுப்பிரமணி வித்தி.), ர.சயுவண்ணன் (சுப்பிரமணி வித்தி.).

தரம் -6 பா.சிவராஜினி (கலாநிதி ஆ.தி.ம.ம. வித்.), ஏ.கோபிநாத் (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்.), ச.கஜமாலன் (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), செ.நாகதீபா (யாழ்ற்ரன் கல்லூரி), யோ.சுஜீவன் (யாழ்ற்ரன் கல்லூரி).

தரம் -7 இ.கிருத்திகா (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்.), யோ.கோபிகா, த.சங்கவி, செ.கீர்த்தனா, ப.யாழினி (யாழ்ற்ரன் கல்லூரி)

தரம் -8 கி.பிரியா, பா.குலமதி ( கலாநிதி ஆ.தி.ம.ம.வித்.), ச.ரோகினி (யாழ்ற்ரன் கல்லூரி), க.அபினோசா (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்.), ப.துவாரகா (யாழ்ற்ரன் கல்லூரி)

தரம் -9 செ.கமலேஸ்வரி (யாழ்ற்ரன் கல்லூரி), சி.விதுஷா (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்.), த.திருமகள், ம.நவநிலா (யாழ்ற்ரன் கல்லூரி), சி.விசாலினி (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்.).

தரம் -10 த.ஆரணி, சு.மனோகரி (யாழ்ற்ரன் கல்லூரி), கோ.நிறோஜினி (வியாவில் சைவ வித்.), ந.தீபிகா, ப.மகீபன் (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்).

தரம் 11 க.சாந்தினி (கலாநிதி ஆ.தி.ம.ம.வித்), அ.திவ்ஜா (யாழ்ற்ரன் கல்லூரி), த.பார்த்திகா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), [illegible] (யாழ்ற்ரன் கல்லூரி).

(வ-250)



கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியில் அமைக்கப்பட்ட மனவள கலை தியான மையத்தை இலங்கை மனவளக் கலைமன்ற அறக்கட்டளைத் தலைவர் மனவளக் கலைப் பேராசிரியர் மதுரைவீரன் நாடாவெட்டித் திறந்து வைக்கிறார். (ம-9)

# சங்கானை பிரதேச செயலக ஏற்பாட்டில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.20

சங்கானை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று வியாழக்கிழமை நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

வலி.மேற்கு சங்கானையில் 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களின் நலன் கருதி பிறப்பு, இறப்பு, காலங்கடந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகள், உத்தேச வயதுச் சான்றிதழ் தொடர்பான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன. இதனடிப் படையில் மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறும் நடமாடும் சேவையில் பதிவுகள் பெறுபவர்களை சமுகமளிக்குமாறு சங்கானை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ)



ஈழத்துச் சிதம்பரம் திருவெம்பாவை
இரண்டாம் திருவிழா

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போ(து) இப்போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார் யாம் ஆரேலோர் எம்பாவாய்.

உபயம்
சிவன் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ்
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
சிவகுமரன் என்ரப்பிறைஸ்
75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வீதிக்கு முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலெக்ட்ரிக்' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571, 'சஹரா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

# பூஜ்ஜியத்தின் ராஜ்ஜியம்

எம்மில் பலபேர் இல்லாமையை வெளிப்படுத்த வெட்கப்படுகிறோம். கௌரவத்தின் பொருட்டு பட்டினி கிடந்தாலும் இரந்து உண்ணத் தயாராகவும் இல்லை. அப்படி வயிற்றுப் பிழைப்புக்கு வாழ்க்கை நடத்தவேண்டிய அவசியமும் இல்லையென்று கருதுகிறோம்.

சொந்தக் காலில் நின்று எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனதும் ஆசை. சில சமயம் துரதிர்ஷ்டவசமாக அந்த ஆசை நிறைவேறாதும் போய்விடுகிறது.

உடல் தகுதி இல்லாத நிலையிலும் ஒருவர் தனது சொந்த முயற்சியால் உயர்நிலைக்குச் செல்வதைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

ஆனால் புதிய உத்தி இப்படியும் நடக்கிறது. அண்மையில் தென்பகுதியில் பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையில் 20 பிச்சைக்காரர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். ரயில் நிலையங்களில் தமக்கு ஏற்படும் அசௌகரியங்கள் குறித்துப் பயணிகள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததை அடுத்து இந்தக் கைதுகள் இடம்பெற்றன.

கைதுகளின்பின் பொலிஸாருக்குக் கிடைத்த அதிர்ச்சி, தாம் ஒரு லட்சாதிபதியைக் கைது செய்ததே. பொலிஸார் நடத்திய திடீர் வேட்டையில் ரயில்களில் ஏறிப் பிச்சையெடுத்த 20 பேர் கைதாகியிருந்தனர். அவர்களில் ஒருவர்தான் இந்த லட்சாதிபதி.

இவர் குருநாகல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். ஒரு வான், இரண்டு ஓட்டோ என்பவற்றின் உரிமையாளரான இவரின் வங்கிக் கணக்கில் 20 லட்சம் ரூபா பணம் வைப்பிலிருக்கிறது.

கைதான அன்று அவரிடம் 4 ஆயிரம் ரூபா பணம் இருந்திருக்கிறது. அந்தப் பணத்தை, தான் இரண்டு மணித்தியாலத்தில் ஒரு ரயிலில் பிச்சையெடுத்துச் சேகரித்ததாக அவர் தெரிவித்திருக்கிறார்.

தினமும் தனது சொந்த வானில் வந்து இறங்கும் இவர், பிச்சைக்கார உடை மாற்றித் தனது தொழிலை ஆரம்பிப்பாராம். தொழிலுக்கு முடிவு நேரம் இல்லை. விருப்பப்படி அந்த நேரத்தில் அவர் புறப்பட்டுச் சென்றுவிடுவாராம். பொலிஸாருக்கு அவர் கொடுத்த வாக்குமூலம் இது.

சம்பவத்தை அறிந்ததும் பொலிஸார் திகைத்துப் போய்விட்டனராம். இல்லாமையைச் சொல்லி இரப்பவர்கள் மத்தியில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்பது பலருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம். நேர்வழியில் சம்பாதித்து எதையுமே இந்த நாட்டில் சாதித்துவிட முடியாதிருக்கையில் ஊழல்களும், அட்டூழியங்களுமே அதிகரித்திருக்கின்றன. இதன்மூலம் இருப்பவர்களுக்கே இன்னும் பொன்னும் பொருளும் போய்ச் சேருகின்றன. இல்லாதவர்கள் தமது இல்லாமையை எண்ணி வேதனைப்படுகின்றனர்.

இந்தப் பிச்சைக்காரனும் வித்தியாசமாகச் சிந்தித்திருக்கிறான். அவனது சிந்தனை அவனைப் பணக்காரனாக்கிவிட்டது. இன்னும் எத்தனை பணக்காரர்கள் பிச்சையெடுக்கிறார்களோ?

இல்லாமைக்காகக் கையேந்துபவர்கள் மத்தியில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள். யாரைத்தான் நம்புவது இந்த உலகத்திலே? பாத்திரத்தைப் எப்படித் தான் அறிந்து பிச்சை கொடுப்பதோ!

# வாளின் மறுபக்கத்தால் தாக்குதல்; தெரிவுக்குழுவின் கெட்டித்தனம் இது!

மூலம்: மவ்பிம
உப்புல் யோசெப் பெர்னாண்டோ
தமிழில்: வி.எஸ்.ரி.

"நாட்டின் நல்லாட்சிக்கு நீதித்துறையின் சுயாதீனம் அத்தியாவசியமாகும். ஆதலால் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்"

இராணுவப் புரட்சியொன்றின் மூலம் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி, பின்னர் பொதுத் தேர்தலொன்றின் மூலம் நாட்டு மக்களது ஆதரவையும் சுட்டிக் கொண்ட, பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப், அந்த நாட்டின் பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து அகற்ற எடுத்த முடிவு சட்டபூர்வமற்றது என அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக் கொண்டு வெளியிட்ட கருத்தே மேற்கண்டதாகும்.

இன்று இலங்கையின் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை குறித்து விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்குவதற்கு முன்பாகவே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அந்த நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் விசாரணை அறிக்கை குறித்து விசாரணை செய்ய, தாம் தனியாக சுயாதீன விசாரணைக்குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

கேள்வி என்னவெனில், சபாநாயகரால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற விசாரணைக்குழு சுயாதீனம் கொண்டதல்ல என அவர் சொல்ல விழைகிறாரா என்பதுதான். ஜனாதிபதியின் அறிவிப்பை அவ்விதம்தான் அர்த்தப்படுத்த வேண்டியுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப், தாம் பிரதம நீதியரசரை பதவியினின்றும் அகற்ற மேற்கொண்ட தீர்மானம் செல்லுபடியற்றதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து, தாம் பிரதமர் வழங்கிய ஆலோசனையின் பேரிலேயே அந்தத் தீர்மானத்தை மேற்கொண்டதாகக் கூறிப் பழியைப் பிரதமர் மீது சுமத்தித் தப்பித்துக் கொண்டார்.

சுயாதீனம் கொண்டதல்ல என ஜனாதிபதி கூறாமல் கூறிய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை நியமித்தவர் ஜனாதிபதியின் மூத்த சகோதரரும் நாடாளுமன்றத்தின் சபாநாயகருமான சமல்ராஜபக்ஷவே. பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை வடிவமைத்தவர் ஜனாதிபதியின் இளைய சகோதரரான பஸில் ராஜபக்ஷ ஆவார். தவிர, கடந்த காலத்தில் ஜனாதிபதி இந்த குற்றவியல் பிரேரணை தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள், தற்போதைய அவரது முடிவுக்கு முற்றிலும் மாறுபட்டவை. அரசமைப்பு விதிகளுக்கமையவே தாம் இவ்விடயத்தில் செயற்பட்டதாகப் பல தடவைகள் அவர் கருத்து வெளிப்படுத்தி வந்துள்ளார். சர்வதேசத்தின் அழுத்தம் காரணமாகவே ஜனாதிபதி தற்போது இத்தகைய முடிவொன்றை மேற் கொண்டதாகச் சிலர் கூறுகின்றனர். ஆனால் இலங்கை உயர் நீதிமன்றம், பாகிஸ்தான் விடயத்தில் அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புப் போன்று அரசின் செயற்பாடு செல்லுபடியற்றதெனத் தீர்ப்பு வழங்கக் கூடுமென்ற அச்சத்தில் ஜனாதிபதி தற்போது இத்தகைய முடிவை மேற் கொண்டிருக்கிறார் என வேறு சிலர் கூறுகின்றனர்.

எது எவ்வாறாயினும் மஹிந்த அரசு இவ்விதம் தனது முடிவொன்றிலிருந்து பின் வாங்கியது இதுவே முதல் தடவை என்றில்லை. பல்கலைக்கழக விரிவுரையாளர்களது வேலை நிறுத்த விடயத்தில் கூட, அரசு தனது முடிவிலிருந்து பின் வாங்கியிருந்தது. எனினும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தமது போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகக் கருதினாலும் இன்றுவரை அவர்களது கோரிக்கைகள் எதுவுமே அரசினால் நிறைவேற்றப்படவில்லை என்பது கசப்பான உண்மை.

கேள்வி என்னவெனில் தற்போதைய பிரதம நீதியரசர் விவகாரத்திலும் அரசு அதேவித 'ஜில்மால்' செயற்பாட்டையே மேற்கொள்ளப் போகின்றதா என்பதே.

அது குறித்து தற்போது எதுவும் கூற இயலாத போதிலும், மஹிந்த அரசின் நிலைப்பாட்டை நிலை நிறுத்த செயற்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்களது இடுப்புத் துணி ஜனாதிபதியால் அவிழ்த்தெறியப்பட்டுள்ளது என்பதே உண்மை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் உறுப்பினர்களில் சிலர், பிரதம நீதியரசரைப் பண்பற்ற விதத்தில் விமர்சித்ததாகக் கூறப்பட்டது. முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது பிரஜாவுரிமையை இழக்க நேர்ந்த வேளையில் கூறியமை போன்று வாளொன்றுக்கு இரு பக்கங்கள் உள்ளன எனவும், வழமையான பக்கத்துக்குப் பதிலாக அவ்வாளின் மறு பக்கத்தாலும் வெட்ட இயலும் எனவும் கூறியிருந்தமையை நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்கள் அறிந்திருக்க மாட்டார்கள் போலும். குற்றவியல் பிரேரணையில் கையெழுத்திட்ட 117 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இது குறித்து அறிந்திருக்க மாட்டார்கள் போலும்.

**பாகிஸ்தானில் முஷாரப் காலத்தில் பிரதம நீதியரசரைப் படுகொலை செய்ய முயன்றவேளை...**

நாளையோ, நாளை மறுநாளோ ஜனாதிபதி 13 ஆவது திருத்தத்துக்கும் அப்பால் சென்று தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு வழங்க முடிவு செய்து விமல் வீரவன்சவுடன் முரண்பட்டுக் கொண்டால், விமல் வீரவன்ச, தமது நிலைப்பாட்டை நிலை நிறுத்த நீதிகோரி நீதிமன்றத்தையே நாட வேண்டியேற்படும். இதனை அறியாது வாளின் மறுபக்கத்தால் தாக்குதல் மேற்கொண்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்கள் தற்போது கேலிக்கு உரித்தாகும் நிலைக்கு ஆட்பட நேர்ந்துள்ளது. ஆனால் நீதி தேவதை நிமிர்ந்த முதுகுடனும் திட்டியவாளுடனும் இருப்பதாலேயே பிரதம நீதியரசருக்கெதிரான குற்றவியல் பிரேரணையை விசாரணை செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் செயற்பாட்டுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது.

உண்மையில் அரசு பிரதம நீதியரசருக்கு எதிராக அவசர அவசரமாக குற்றங்கள் சுமத்தி குற்றவியல் பிரேரணை கொண்டு வந்ததே அதற்கு அஞ்சி பிரதம நீதியரசர் தமது பதவியைத் துறந்துவிடுவார் என்ற நம்பிக்கையிலே தான். அதேபோன்று அவசர அவசரமாக தெரிவுக் குழு விசாரணையை நடத்தி முடித்தமை, அதன் பின்னர் நீதித்துறை அவ்விடயத்தில் தலையிடாது என்ற நம்பிக்கையின் பேரிலே தான். உண்மையில் நீதித்துறை இவ்விடயத்தில் தலையிட இயலாதெனவே இன்றும் அரசு நம்புகிறது.

ஆனால் இதேபோன்றதொரு சூழ்நிலையில் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப், பிரதம நீதியரசரைப் பதவியிலிருந்து விலக்கி, பதில் நீதியரசரொருவரையும் நியமித்தார். பிரதம நீதியரசர் சௌத்திரிக்குப் பின்னர் அந்தப் பதவியை வகிக்க வேண்டிய சிரேஷ்ட நீதியரசர் பாகிஸ்தானிலிருந்து வெளியேறிச் சென்றிருந்ததால், மற்றொரு நீதியரசரே பதில் பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். அவரது தலைமையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களை உள்ளடக்கி நியமிக்கப்பட்ட சுப்ரீம் ஜுடிஷல் கவுன்சில் என்ற பெயரிலான ஆயம், பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை விசாரிக்குமென அறிவிக்கப்பட்டது.

அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சௌத்திரி உயர் நீதிமன்றத்தை நாடிய போது, முஷாரப்பின் அரசு, உயர் நீதிமன்றத்துக்கு சௌத்திரி தொடுத்த வழக்கை விசாரிக்க சட்டப்படியான அதிகாரம் கிடையாதென ஆட்சேபித்தது. ஆனால் அரசமைப்பின்படி தமக்கு அத்தகைய அதிகாரம் உண்டென உயர் நீதிமன்றம் தெரிவித்தது. கடைசியில் பின் வாங்கிய முஷாரப் அரசு, தாம் உயர் நீதிமன்றத்தின் அந்தத் தீர்மானத்தை மதிப்பதாகவும் உயர் நீதிமன்றமும் சுப்ரீம் ஜுடிஷல் கவுன்சிலும் இணைந்து பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டை விசாரிக்க இயலுமெனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை மேற்கொண்டு குற்றச்சாட்டை நிராகரித்தது மட்டுமன்றி சௌத்திரியை மீண்டும் பிரதம நீதியரசராக நியமிக்குமாறும் உத்தரவிட்டது. இதனால் முஷாரப்பின் முன்னிலையில் பதில் பிரதம நீதியரசராகப் பதவிப் பிரமாணம் மேற்கொண்ட நீதியரசர் தமது பதவியை இழக்க நேர்ந்தது.

சௌத்திரிக்கு எதிரான வழக்கை உயர் நீதிமன்றம் விசாரணை செய்து வந்த வேளையில் பிரதம நீதியரசர் என்ற பதவியில்லாத நிலையில் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று வந்த சௌத்திரியைப் படுகொலை செய்து விட முஷாரப் அரசு இரு தடவைகள் முயன்றபோதிலும் அவை தோல்வி கண்டன. சௌத்திரி பாகிஸ்தானில் தனி இராச்சியம் கோரி வந்த பலுகஸ்தான் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதால் அவர் இஸ்லாமிய கடுங்கோட்பாட்டாளர்களால் கொல்லப்பட்டதாகக் காட்டும் திட்டத்துடன் முஷாரப் அரசு சௌத்திரியைப் படுகொலை செய்ய முயன்றபோதிலும், அந்தத் திட்டங்கள் எதுவும் வெற்றியளிக்கவில்லை.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கா, மஹிந்த அரசின் அழுத்தங்களுக்குப் பணிந்து அரசுக்குச் சார்பாக தீர்ப்புக்கள் வழங்கியிருந்தால் அவர் மேலும் பல ஆண்டுகள் காலம் தொடர்ந்தும் பிரதம நீதியரசர் பதவியை எவ்வித குறுக்கீடுகளுமின்றி ஆற்ற வாய்ப்பு அமைந்திருக்கும்.

அவருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை முன்வைக்கப்பட்ட பின்னர் அரசின் ஆலோசனைக் கேற்பத் தமது பதவியை விட்டு விலகியிருந்தால், அவருக்கு வெளிநாட்டுத் தூதுவர் பதவியொன்று வழங்கப்பட்டிருக்கும். அவரது கணவருக்கு எதிரான வழக்குகளும் கைவிடப்பட்டிருக்கும். ஆனால் தமக்கும் மேலாக நீதித்துறையின் சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டுமென்ற நோக்கிலேயே அவர் மஹிந்த அரசின் பயமுறுத்தல்களுக்கும் அழுத்தங்களுக்கும் கீழ்ப்படிய மறுத்தார்.

அவர் நீதித்துறையில் பேராசிரியர் பட்டம் பெற்றவர். பிரதம நீதியரசர் பதவியை இழக்க நேர்ந்தாலும் கூட அவரால் வெளிநாட்டுப் பல்கலைக் கழகமொன்றில் அதிகூடிய சம்பளத்துடன் வேலைவாய்ப்பொன்றைத் தேடிக் கொள்ள இயலும். சர்வதேச நீதிமன்றமொன்றில் நீதியரசர் பதவியொன்றைக் கூட ஈட்டிக் கொள்ள இயலும். ஆனால் நீதித்துறைக்கு ஆபத்து ஏற்படக் கூடுமென்ற அச்சத்தைப் போக்குவதற்கே அவர் போராடுகிறார். அவ்விடயத்தில் அவர் தமது பொறுப்பையும் கடமையும் உரிய வகையில் நிறைவேற்றியுள்ளார். தற்போது நீதிமன்றத்தின் கையிலேயே அவருக்கான தீர்ப்பு உள்ளது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதி சிரத்தையுடன் கையாளப்பட வேண்டிய விவசாய இரசாயனங்கள்

■ சிறிகரன் ரகுராஜ்,
விவசாய பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஏர் பின்னது உலகு என்ற கூற்று உலகமே விவசாயத்தைத்தான் நம்பியுள்ளது என்பதை விளக்குகின்றது. விவசாய இரசாயனங்களின் ஆக்கிரமிப்பு இன்று யாழ்ப்பாணத்தில் மேலோங்கி விட்டது. பூச்சிநாசினி, பங்கசு நாசினி, களை நாசினி, இரசாயன வளமாக்கிகள் எனப் பல்வேறு இரசாயனங்கள் இன்று விவசாயத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையிலே அதிகளவில் விவசாய இரசாயனங்கள் விற்பனையாகும் மாவட்டம் யாழ்ப்பாணம் என்பது கசப்பான உண்மை. அதேபோல புற்றுநோய்த் தாக்கத்துக்கு அதிகம் உட்பட்ட மாவட்டம் என்ற பெயரையும் தனதாக்கிவிட்டது.

இலங்கையிலே அதிகளவில் விவசாய இரசாயனங்கள் விற்பனையாகும் மாவட்டம் யாழ்ப்பாணம் என்பது கசப்பான உண்மை. அதேபோல புற்றுநோய்த் தாக்கத்துக்கு அதிகம் உட்பட்ட மாவட்டம் என்ற பெயரையும் தனதாக்கிவிட்டது.



சந்தைக்குச் சென்றால் கண்ணுக்கு பளிச் என்று தெரியும் ஒரு பூச்சித் தாக்கமும் இல்லாத மரக்கறிகளை தெரிவு செய்வதில் நம்மவர்கள் முண்டியடிக்கின்றனர். ஆனால் பூச்சியே விரும்பி உண்ணாத உணவை நாங்கள் விரும்பி உண்கின்றோம். அதன் மூலம் எவ்வளவு தீமை விளைவிக்கும் இரசாயனங்களை உண்ணுகின்றோம் என்பதை மறந்துவிடுகின்றோம்.

வித்து முளைத்ததிலிருந்து (விதைப் பரிகரணம்) சந்தைப்படுத்தும் வரை இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பீடை நாசினிகளை உபயோகிக்கும்போது 'லேபலில் குறிப்பிடப்பட்டுள்ள பிரயோகிக்கும் முறை, கலக்கும்முறை, களஞ்சியப்படுத்தும் முறை, நச்சுத் தன்மையின் அளவு என்பன பற்றி அறிந்திருத்தல் அவசியமானதாகும். பீடைநாசினிகளின் 'லேபலின் அடிப்புறத்தில் காணப்படும் நீலநிறக்கோடு நடுத்தர நச்சுத் தன்மையையும் மஞ்சள் நிறக் கோடு குறைந்த நச்சுத் தன்மையையும், பச்சை நிறம் நச்சுத்தன்மையற்றது என்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

ஆகவே கூடியவரைக்கும் பச்சை மற்றும் மஞ்சள் நிற லேபல்களை பயன்படுத்துவது சூழலுக்கு அதனால் ஏற்படும் தீங்கைக் குறைக்கும்.

பீடை நாசினிகளை பயன்படுத்தும் போது அதில் கூறப்பட்டுள்ள கலவை அளவு, பாவனை அளவு, எந்தப் பயிருக்கு பாவிக்கப்பட வேண்டும் போன்ற அறிவுறுத்தல்களைப் பின்பற்ற சில விவசாயிகள் தவறிவிடுகின்றனர். குறித்த அளவு இரசாயனத்துடன் கலந்து விசிறப்பட வேண்டிய நீரின் அளவைக் குறைத்து அதிக செறிவுடன் பீடையை உடனடியாகக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் நோக்குடன் விசிறுகின்றனர். இதன் மூலம் சூழலுக்கு அதிகளவு இரசாயனங்கள் விடுவிக்கப்படுகின்றன.

குறித்த ஒரு பீடை பலவகைப் பயிர்களைத் தாக்கினாலும் ஒரே பீடை நாசினியையே விசுறுகின்றனர். பீடை நாசினியின் 'லேபலில் குறிப்பிடப்படாத பயிருக்கு விசுறுவதன் மூலம் கிடைக்கும் பயன் மிகக் குறைவே. குறித்த ஒரு பீடையைக் கட்டுப்படுத்த ஒரே இரசாயனத்தை தொடர்ந்து பாவிப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் பீடை அதற்குப் பழக்கப்பட்டு எதிர்ப்புத் திறனை இழந்துவிடும்.

இதனைத் தவிர்க்க வெவ்வேறு இரசாயனங்கள் மாறி மாறி உபயோகிக்கப்பட வேண்டும். சில பீடை நாசினிகள் அளவுக்கு அதிகமாகப் பாவிக்கப்பட்டு சூழல் மாசடைந்ததன் காரணமாக அவை இன்று அரசினால் தடை செய்யப்பட்டுவிட்டன.

விவசாயிகள் இரசாயனங்களை விசிறும்போது கையுறை, முகக் கவசம் என்பன கட்டாயம் அணிந்திருக்க வேண்டும். அதிக காற்று மற்றும் மழை நேரங்களில் விசிறுவதைத் தவிர்க்க வேண்டும். விசிறும்போது காற்று அடிக்கும் திசையில் நின்று விசிறவேண்டும். இல்லையேல் அதிகளவு இரசாயனத்தை சுவாசிப்பதனால் அது அவர்களுக்கே நஞ்சாக மாறிவிடுகின்றது. விசிறி முடித்தவுடன் அணிந்திருந்த உடைகளை நீரில் அலசி குளிப்பதன் மூலம் உடலின் மேல் காணப்படும் தேவையற்ற நச்சுப் பதார்த்தங்களை அகற்றிவிடலாம்.

இரசாயனங்களைப் பாவித்த பின் அதன் போத்தல்களை மூடியால் மூடி உடனடியாக அகற்றிவிட வேண்டும். கிணற்றுக்கு அருகிலோ அல்லது வயற்கரைகளிலோ குவித்து வைப்பதைத் தவிர்க்க வேண்டும். இதன் மூலம் நிலத்தடி நீர் மாசுபடுதலைத் தடுக்கலாம்.

பயிர்களுக்குத் தேவையான போசனை பெரும்பாலும் அசேதன உரங்களின் மூலமே வழங்கப்படுகின்றன. நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பன தேவையான அளவில் தேவையான நேரத்தில் வழங்கப்பட வேண்டும். அளவுக்கு அதிகமான உரப்பாவனை மாபோசனை மூலகங்களுக்கும் நுண்போசனை மூலகங்களுக்குமிடையிலான சமநிலையைப் பாதிப்பதோடு நிலம், நீர் மாசடைதலை ஊக்குவிக்கின்றது.

திராட்சைப் பயிர்ச் செய்கையில் வருடத்துக்கு இருமுறை மட்டுமே விளைச்சலைப் பெற முடியும். அவ்வாறு பெறப்பட்ட பழங்கள் இனிப்புச் சுவை உடையவையாகக் காணப்பட்டன. ஆனால் சிலர் அளவுக்கு அதிகமாக இரசாயன வளமாக்கிகளை பாவித்து மூன்றுமுறை விளைச்சலைப் பெற்றார்கள். ஆனால் பெரும்பாலான பழங்கள் புளிச் சுவை உடையவையாக மாறிவிட்டன.

சில பயிர்கள் காலையிலே பீடைநாசினிகள் விசிறப்பட்டு மாலையிலே அறுவடை செய்யப்படுகின்றன. பல மரக்கறிகள் மருந்து விசிறப்பட்டு சரியாக நீரால் கழுவப்படாமல் சந்தைக்கு கொண்டு வரப்படுகின்றன. உண்மையிலேயே விசிறிய இரசாயனங்கள் செயல் அற்றுப் போன பின்புதான் அவை சந்தைப்படுத்தப்பட வேண்டும்.

பழங்களைப் பழுக்க வைக்க எதிலீன் என்ற இரசாயனம் பயன்படுத்தப்படுகின்றது. உண்மையில் எதிலீன் வாயுவால்தான் பழங்கள் பழுக்க வைக்கப்பட வேண்டுமே தவிர எதிலீன் திரவத்தை உட்செலுத்துவதன் மூலம் அல்ல. எனவே விவசாய இரசாயனங்களை சரியான அளவிலும் வினைத்திறனாகவும் பாவிப்பதன் மூலம் நுகர்வோரையும் இயற்கைச் சூழலையும் பாதுகாக்கலாம் என்பது திண்ணம். ★



# எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே...

“ தந்தை போதைக்கு அடிமையாதல், கற்றலுக்கான சூழலைக் குழப்புதல், குடும்பப் பிணக்கில் ஈடுபடுதல், அதிக சுதந்திரத்தைப் பிள்ளைகளுக்கு வழங்குதல், கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற காரணிகள் பிள்ளைகளின் நடத்தைக் கோலத்தை பாதகமாக மாற்றியமைக்கின்றன.

■ சி.நற்குணலிங்கம்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
கரவெட்டி.

ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என வள்ளுவர் அந்தக் காலத்தில் கூறி வைத்தாலும், இந்தக் காலத்துக்கு பெரிதும் பொருத்தப்பாடுடையதாகவும் தேவைப்பாடுடையதாகவும் அந்தக் கூற்று ஏற்கப்படுகின்றது. இன்று ஒழுக்கம் பின்னோக்கிய அசைவில் நீண்ட தூரம் சென்ற காரணத்தால் சமுதாயம் சீரழிந்து காணப்படுகின்றது.

காலமாற்றத்தால் இளம் சமுதாயத்தினர் தேவையற்ற, பொருத்தப்பாடற்ற, ஒவ்வாத ஒழுக்கங்களில் ஈடுபட்டு வேகம் கொண்டு திளைப்பதில் சமுதாய ஒழுக்கக் கட்டமைப்பானது ஆபத்தின் விளிம்பில் காணப்படுகின்றது. இவ்வாறின்றி மது, புகை, போதை, சிறுவர் துஷ்பிரயோகம் அற்ற ஒரு நல்லொழுக்க சமுதாயம் உருவாக்க வேண்டும்.

சிறுவர் முதல் பெரியோர் வரை வயது வேறுபாடு அற்ற நிலையில் அவர்களது மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்படுதல் வேண்டும். நல்லொழுக்கம் சார் சமுதாயம் அவசியம் என்பதற்கு அமைவான வகையில் மனப்பாங்குகளில் மாற்றம் ஏற்படுமாயின், நல்லொழுக்க சமுதாயம் தோற்றம் பெறும் எனலாம். அத்துடன் பாடசாலை, மனை, அரச சார்பற்ற நிறுவனங்கள் என எல்லோரும் ஒன்றுபட்டு இயங்கி நல்லொழுக்க சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

குரு, பெற்றோர், முதியோரை மதித்தல், மது, புகைத்தல், சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடாமை, பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல், கல்வியைய [illegible] [illegible] களை சிறுவயது முதல் பின்பற்ற பாடசாலையும் பெற்றோரும் வழிகாட்டிகளாகவும் உந்து சக்தியாகவும் விளங்க வேண்டும்.

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும் தீயவராவது பெற்றோர் வளர்ப்பினிலே என்பதைப் பெற்றோர் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் குடும்பத்தின் நேர்ப்பாங்கற்ற செயற்பாடுகள் பிள்ளைகளின் நல்லொழுக்கத்தில் செல்வாக்கு செலுத்துகின்றன. தந்தை போதைக்கு அடிமையாதல், கற்றலுக்கான சூழலைக் குழப்புதல், குடும்பப் பிணக்கில் ஈடுபடுதல், அதிக சுதந்திரத்தைப் பிள்ளைகளுக்கு வழங்குதல், கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற காரணிகள் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களைப் பாதகமாக மாற்றியமைக்கின்றன. எனவே குடும்பச் சூழல் நல்லொழுக்க சமுதாயம் உருவாக வழி சமைக்க வேண்டும். பெற்றோர் இவ்விடயத்தில் விழிப்புணர்வு பெற வேண்டும்.

பாடசாலைகளிலும் காலைக் கூட்டத்தின்போது ஒழுக்கத்தின் முக்கியத்துவங்கள், நல்லொழுக்கம் எவ்வாறு ஒருவனை முழு மனிதனாக்குகின்றது. ஒருவன் சிறப்புற வாழ கல்வி மட்டுமல்ல, சாதகமான பொருளாதார நிலைமட்டுமல்ல, சிறந்த நல்லொழுக்கங்களே மேலானது போன்ற எண்ணக் கருக்களை மாணவர் மத்தியில் தொடர்ச்சியாக விதைக்க வேண்டும். அந்த விதைகள் நல் விருட்சமாகின்றன. மாணவர்களின் ஒவ்வொரு அசைவுகளிலும் ஒழுக்கமானது இணைந்து காணப்படுகின்றது. அவற்றை இனங்கண்டு, சுட்டிக் காட்டி, கொடுப்பதன் மூலம் நல்லொழுக்கமான மாணவனாக அவனை மாற்றமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதம் பார்ப்பது பாவம்

இறைவன் படைப்பில் அனைத்துயிரும் சமமே. அனைத்துயிர்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்துள்ளான்.

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'' என்றார் வள்ளுவப் பெருந்தகை.

வேறெந்த உயிர்களும் தங்களுக்குள் பேதம் பார்ப்பதில்லை. ஆனால், மனிதர் மட்டுமே தங்களுக்குள்ளேயே பேதம் பார்க்கின்றனர்.

நீ தாழ்ந்தவன், நான் உயர்ந்தவன் என்று மனிதன் பிரிந்து கிடக்கிறான்.

உண்மையில் மனிதனுக்குள் பேதம் என்பதே இல்லை. இஃது இறைவன் ஏற்படுத்தியதல்லை.

மனிதனே மனிதனைப் பிரித்து வைக்கும் கொடுமை இது.

உன்னை நீ உணர்வாய் வெற்றி உனதே!

இந்தக் கொடுமையை எதிர்த்து, எத்தனையோ மகான்களும், ரிஷிகளும் மக்களுக்கு உபதேசம் செய்துள்ளனர்.

இறைவன், மனிதனை மனிதன் உயர்வு, தாழ்வு என்று கூறிப் பிரிந்திருக்கக் கூடாது என்பதற்காகவே பல திருவிளையாடல்களை நடத்தியுள்ளான்.

ஆனால் மனிதன் எவருடைய வார்த்தையையும் இன்றளவும் கேட்டதாக இல்லை. திருந்தியதுமில்லை. வருந்தியதுமில்லை..

பாரதி தன் பாப்பா பாட்டில்,

''சாதிகள் இல்லையடி பாப்பா- குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'' என்றார்.

அவர் சாதி வேறுபாடு காட்டுவதும் பாவம் என்றே கூறுவதை உற்றுநோக்க வேண்டும்.

மனிதன் பேதம் பார்த்து, யாரையும் ஒதுக்காமல், அன்பால் அரவணைக்க வேண்டும் என்பதை இராமர் தன் வாழ்வில் நடத்திக் காட்டினார்.

குகன் ஒரு வேடன், சுக்கிரீவன் குரங்கினம், விபீஷணன் அரக்க இனம். இந்த மூவரையும் உள்ளன்போடு தன் தம்பியராக ஏற்றுக்கொண்டார் இராமர்.

மக்கள் இதனைக் கதையாகவே கேட்டனர். ஆனால், வாழ்வில் நடைமுறைப்படுத்த சிறிதளவேனும் முயற்சி செய்யவில்லை.

''இழிகுலம் என்று சொல்லப்படுகிற குலத்தில் பிறந்தவனானாலும் அவன் என்னைச் சரணடைந்தால், அவன் என்னை அடைகிறான்'' என்றார் கிருஷ்ணன்.

இருப்பினும் எந்தப் பயனுமில்லை.

இவ்வாறு மனிதருள் ஏற்றத்தாழ்வு பார்க்கும், தன்மையைப் போக்க, அனைவரும் சமமே என்பதை உணர்த்த, இறைவனே திருவிளையாடல்கள் புரிந்தான்.

மனிதனுக்குள் பேதம் சிறிதளவும் பாராதவனே உண்மையான ஞானி. பேதம் பார்த்ததால் அமிர்தத்தை இழந்தார் உத்தங்க முனிவர்.

நீ மனிதருள் பேதம் பார்க்காதே!

நீ யாரை இழிவாக நினைக்கிறாயோ, அவன் இறைவனுக்கு மிகவும் பிடித்தவனாக, அன்புக்குரியவனாக இருப்பான்.

அனைவரும் ஒன்றே என்று நினை.

ஒருவரைக் குலத்தால் தாழ்ந்தவன் என்று கூறி, அவன் மனதைப் புண்படுத்துவது மகாபாவம்.

மகான்கள் அனைவருமே சாதிபேதத்தை ஒழிக்கப் பட்டாதபாடு பட்டுள்ளனர். சாதியால் மட்டுமன்று; மதத்தாலும் பிரிவினை இருக்கக்கூடாது.

மதம் என்பது, இறைவனை அடைவதற்கான வழி. மதம் என்பது மனிதனைப் பண்படுத்துவதற்காகவே. புண்படுத்துவதற்காக அன்று.



எனவே, அனைவரையும் அன்புடன் நேசி.

யாரிடத்தும் பேதம் பார்க்காதே.

பேதம் பார்ப்பதும் ஒரு மகா பாவமே.

பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்

# மன்னாரில் 468 ஆண்டுகள் பழமையான குருசுக்கோயில்



எஸ்.ஆர்.லெம்பேட்

புனித பிரான்சிஸ்கு சவேரியார் சீடரின் மன்னார் வருகை நினைவு கூரப்பட்டது 30.11.2012 அன்று ஆகும்.

இற்றைக்கு 468 வருடங்களுக்கு முன் மன்னார் வாசிகளின் வேண்டுகோளுக்கிணங்க மன்னாருக்கு தோணி மூலம் வருகை தந்த புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் நம்பிக்கைக்குரிய சீடரான 'சவேரியார் குரு' மன்னாருக்கு வருகை தந்தார்.

பட்டிம் கிராமத்திற்குச் செல்வதற்காக வடதிசையில் தற்போது அவரின் பெயரைக் கொண்டு இயங்கும் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் பின்புறமாக அமைந்துள்ள கடல் ஏரியைக் கடப்பதற்கு முனைந்த போது அவரின் கழுத்திலிருந்த சிலுவை கடலில் விழுந்தது.

அவர் பல முயற்சிகள் எடுத்தும் அந்தச் சிலுவையைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

சில வாரங்களின் பின் கடல் நண்டுகளின் கால்களில் சிக்கிய நிலையில் அந்தச் சிலுவை கடல் ஓரத்தில் இருக்கக் கண்டு அதை மீண்டும் எடுத்து கடவுளுக்கு நன்றி செலுத்தி கழுத்தில் அணிந்து கொண்டார்.

அதன் நினைவாக அந்தக்காலத்து வேத சாட்சிகளான மன்னார் கிறிஸ்தவர்களால் அந்த இடத்தில் காட்டு மரங்களினால் அமைக்கப்பட்ட சிலுவை ஒன்று நடப்பட்டது.

அந்த இடத்தை கிறிஸ்தவர்கள் மன்னார் குருசுக் கோயில் என்று அழைத்தனர்.

பனை தென்னை மரங்களினால் கட்டப்பட்ட சிறிய கோயிலில் மக்கள் குறிப்பாக குருசு நட்ட இடத்தில் பிரார்த்தனை செய்து தமது வலைகளை வீசிய போது இறால், நண்டு, திருக்கை, பாலை உட்பட மீன்பாடு அதிகம் இருந்ததாக நம் முன்னோர்கள் மூலம் அறிய முடிகிறது.

> **இந்தக் கோயிலை கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப வேலைகள் 1.1.2011 இல் பங்குத்தந்தை அருட் திரு. யேசுராஜா அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு 30.11.2012 இல் முடிவுக்கு வந்தது. இந்தத் தேவாலயம் சம்பிரதாய பூர்வமாக ஆசீர்வதிக்கப்பட்டு அதிமேதகு வண. இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையினால் திறந்து வைக்கப் பட்டதுடன் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது.**

1980-1998 களில் இலங்கையில் கலவரம் ஆரம்பித்து மக்கள் மன்னாரிலிருந்து இந்தியாவுக்குச் சென்ற போது இந்தச் சிறிய கோயில் கைவிடப்பட்டது.

பின்னர் 2011ஆம் ஆண்டு கோயிலைச் சூழவுள்ள அயற் கிராமங்களில் உள்ள மக்கள் தனிமையில் ஒன்றுகூடி வழிபாடுகளைச் செய்தனர்.

இந்தக் கோயிலைக் கட்டியெழுப்புவதற்கான ஆரம்ப வேலைகள் 1.1.2011 இல் பங்குத்தந்தை அருட் திரு. யேசு ராஜா அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு 30.11.2012 இல் முடிவுக்கு வந்தது.

இந்த ஆலயமானது சம்பிரதாய பூர்வமாக ஆசீர் வதிக்கப் பட்டு அதிமேதகு வண. இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையினால் திறந்து வைக்கப் பட்டதுடன் திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது.

இதில் வேத சாட்சியின் மைந்தர்களான மன்னார் தோட்ட வெளி, பள்ளிமுனை மற்றும் சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கலந்து கொண்டனர்.

வரலாற்றுப்பழமை வாய்ந்த இந்தக்கோயிலில் '6' அடி உயரமான கர்த்தர் சிலை ஒன்று நிறுத்தி வைக்கப்பட்ட நிலையில் நிறுவப்பட்டுள்ளது.

இது பரப்புக்கடந்தான் கர்த்தர் திருச்சுருவத்தை எமக்கு நினைவூட்டுவதாக உள்ளது.

அமைதியான இடத்தில் கடல் ஏரி சூழ்ந்துள்ள இந்தக் கோயில் பக்தர்களுக்கு ஒரு தியான மண்டபம் போல விளங்குகிறது.

சுமை சுமந்திருப் போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள்; என்பது போல மன அமைதி கிடைக்கப்பெறும் ஒரு தலமாக இது காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் தொடர்ந்து கொட்டுகிறது மழை

## கிராமங்களுக்கான தொடர்பும் துண்டிப்பு





அம்பாறை,டிசெ.20

திருகோணமலை,மட்டக்களப்பு,அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து அடைமழை பெய்து வருகிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் வானம் இருள்சூழ்ந்த நிலையிலேயே காணப்படுகிறது.

**திருகோணமலையில்**

திருகோணமலை மாவட்டத்தில் பெய்துவரும் மழையால் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சம்பூர் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து கடந்த ஏழு வருடங்களாக கிளிவெட்டி, பட்டித்திடல், மணல்சேனை, கட்டைபறிச்சான் ஆகிய இடங்களில் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் அடை மழையால் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் அடை மழையால் - படுவான்கரை-மட்டக்களப்பு நகருக்கான அனைத்துப் போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. படுவான்கரையில் உள்ள கிராமங்களுக்கிடையிலான தொடர்பும் துண்டிக்கப்பட்டுள்ளது.

படுவான்கரை - மட்டக்களப்பு என்பவற்றுக்கான போக்குவரத்துக்கு இயந்திரப் படகுச் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிராமங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குப் படகுகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு- வாழைச்சேனை வீதியின் போக்குவரத்துக்களும் துண்டிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக படுவான்கரை பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலக வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெல்லாவெளி, பட்டிப்பளை,வவுணதீவு,செங்கலடி, கிரான் ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளில் அதிகளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வெல்லாவெளி-மண்டூருக்குமான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

**அம்பாறையில்**

அம்பாறை மாவட்டத்தில்பெய்துவரும்தொடர்மழையின் காரணமாக பல தாழ் நிலப் பிரதேசங்கள் வெள்ளத் தில் மூழ்கியுள்ளதுடன் பல பாதைகளினூடான போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவின் கீழுள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் எதுவித போக்குவரத்து வசதிகளுமின்றி பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில் உள்ள மக்கள் உறவினர் வீடுகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இதேவேளை, கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலகத்துக்குட்பட்ட துறைவந்தியமேடு கிராமத்துக்கான போக்குவரத்துப் பாதை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. இதனால் இங்கு வாழும் மக்களுக்காக இயந்திரப் படகு சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கல்முனை தமிழ்ப் பிரிவு பிரதேச செயலாளர் கே.லவ நாதன் தெரிவித்தார்.

(ச-30-31-40)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணத்தை வழங்குக

### கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் வேண்டுகோள்



மட்டக்களப்பு,டிசெ.20

வெள்ள இடரால் இடம் பெயர்ந்த மக்களுக்கு அவசர நிவாரண உதவிகளை வழங்குமாறு கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து இடர் முகாமைத்துவ அமைச்சர், சமூக சேவைகள் அமைச்சர், கிழக்கு மாகாண செயலாளர், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கு அவசர மனு ஒன்றை அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த சில நாள்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக இந்த மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை காரணமாக பெரும்பாலான மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தின் வயல்களும் ஏனைய பயிர் செய் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

உன்னிச்சைக் குளம், உறுகாமம் நீர்ப்பாசனக் குளங்களின் நீர்மட்டம் உயர்ந்துள்ளமையினால் இந்தக் குளங்களின் வான் கதவுகள் திறந்து விடப் பட்டுள்ளன. இதனால் மட்டக்களப்பிலிருந்து வாழைச்சேனை வரையான பிரதேசங்கள் வெள்ள அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

ஏறாவூர், ஐயன்கேணி, சதாம் ஹுசைன் கிராமம், மீராக்கேணி, ஹிஸ்புல்லா கிராமம், சித்தாண்டி, செங்கலடி, வாழைச்சேனை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 5,000 குடும்பங்களைச் சேர்ந்த 25,000 மக்கள் இடம் பெயர்ந்து பாதுகாப்பான பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கொடுவாமடு, மயிலவட்டுவான், ஈரளைக்குளம், வெல்லாவெளி போன்ற கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் அந்தப் பிரதேச மக்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டு பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அத்தியாவசியத் தேவைகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

தொடர்ந்து மழை பெய்கின்றமையால் இந்தப் பிரதேசம் மேலும் இடர்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

இந்த நிலையைக் கருத்தில்கொண்டு மக்களின் தேவைகளான உணவு, உடை, மற்றும் ஏனைய தேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவ வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

## வெள்ளத்தில் சிக்கிய இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன

மட்டக்களப்பு,டிசெ.20

மேய்ச்சலுக்காக சென்ற மாடுகளைத் தேடிச்சென்ற போது வெள்ளத்தில் சிக்குண்டு காணாமல் போனவர்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டன.

காணாமல் போன மாடுகளைத் தேடுவதற்காக மாவடி ஓடைக்குச் சென்றுவிட்டு திரும்பிவரும் வழியில் சப்பாத்து பாலத்தில் வைத்தே இவர்கள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டனர்.

இவர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் வரை தேடுதல் நடத்தியும் கண்டுபிடிக்கப்படாத நிலையில் நேற்று மரமொன்றில் சிக்குண்ட நிலையில் பத்மநாதன் என்பவரின் சடலத்தை படையினர் மீட்டனர். மற்றையவரின் சடலம் நேற்றிரவு மீட்கப்பட்டுள்ளதாக படையினர் அறிவித்துள்ளனர்.

மயில்வாகனம் ராகுலன் (35 வயது), பாலகப்போடி பத்மநாதன் (34 வயது) ஆகிய இருவருமே வெள் ளத்தால் அடித்துச்செல்லப் பட்டவர்களாவர். மீட்கப்பட்ட சடலங்கள் செங்கலடி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ஜ-16)



அக்குறணை பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த ரம்புக்வெல கிராமத்தில் இரண்டு. வீடுகள் மண் சரிவால் முற்றாக அழிந்துள்ளன.

## காணாமற்போன மீனவர்களின் படகு மீட்பு

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள காங்கேயனோடை வாவியில் கடந்த திங்கட்கிழமை மாலை காணாமல் போன இரண்டு மீனவர்களும் மீன் பிடிப்பதற்காகக் கொண்டு சென்ற படகை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

எனினும், காணாமற்போன இரண்டு மீனவர்களும் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களைத் தேடும் பணியில்கடற்படையினர்தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர் என்று காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

(ச)

## மட்டு. வைத்தியசாலையின் கணக்காளர் இடைநிறுத்தம்

மட்டக்களப்பு,டிசெ.20

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பில் அந்த வைத்தியசாலையின் கணக்காளர், பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மற்றும் ஏனைய முறைகேடுகள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனைத் தொடர்ந்து கணக்காளர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டு, அவரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடமையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இவரிடம் சுகாதாரத் திணைக்களத்தினால் உயர்மட்ட உள்ளக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வைத்தியசாலை ஊழியர்கள், மாவட்ட வைத்தியசாலைக்குழு, பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரிடமிருந்தும் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையிலேயே இந்தக் கணக்காளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## இடர் அபாய குறைப்பு நிலையம் திறப்பு

கல்முனை,டிசெ..20

கல்முனை மாநகர சபையில் இடர் அபாய குறைப்பு நிலையத்தின் திறப்பு விழா மாநகர சபை கட்டடத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது.

இடர் இடம்பெறுகின்றபோது ஏற்படுகின்ற பாதிப்புகளைக் குறைக்கும் வகையில் இந்த இடர் அபாய குறைப்பு நிலையம் கல்முனை மாநகர சபையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட கல்[illegible]
[illegible]
வைத்தார்.

(ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** பிள்ளைகளை நல்வழிப்படுத்துவீர்கள். அவர்களின் எதிர்காலத்தை மனதில் கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. வீண் செலவுகளைத் தவிர்ப்பீர்கள்.



**இடபம்:** புதிய எண்ணங்கள் தோன்றும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்கள் முழுமையடையும். வியாபாரத்தில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். அயல் வீட்டாரின் ஆதரவு உண்டு.



**மிதுனம்:** எதிர்பாராத செலவுகள் வந்தாலும் எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சமாளிப்பீர்கள். பேச்சுத் திறமையால் சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**கடகம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். யாரையும் தூக்கி எறிந்து பேசாதீர்கள். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் மற்றவர்களை நம்பி எந்த வேலைகளையும் ஒப்படைக்க வேண்டாம்.



**சிங்கம்:** புதிய முயற்சிகள் வெற்றியடையும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.



**கன்னி:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். சகோதர வகையில் நன்மை பிறக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரியும்.

### நாளை

மார்கழி -06 வெள்ளிக்கிழமை 21.12.2012
திதி: நவமி பி.இ 05.13 வரை
நட்சத்திரம்: உத்தரட்டாதி பி.ப 02.48 வரை
சுபநேரம்: 06.25- 07.55 வரை
ராகுகாலம்: 10.55- 12.25 வரை



**துலாம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**விருச்சிகம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தாயின் உடல் நிலை சீராகும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.



**தனுசு:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.



**மகரம்:** மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். பழைய நண்பர்கள் உதவுவார்கள். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிட்டும். முன்கோபம் விலகும். அரச பணிகள் சுமுகமாக முடியும். வேற்று மதத்தினரால் ஆதரவு கிட்டும்.



**கும்பம்:** நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். முன்கோபத்தால் நல்லவர்களின் நட்பை இழக்க வேண்டி வரும்.



**மீனம்:** மறைமுக விமர்சனங்களும், எதிர்மறை எண்ணங்களும் வந்து செல்லும். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் மோதல்கள் ஏற்படலாம்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 1 | 3 | 2 | | 7 |
| | 8 | | | 7 | 2 | 5 | | 4 |
| 4 | | 7 | | | | | 3 | |
| 6 | | | 1 | | 5 | | | |
| | 9 | | | 3 | | | 7 | |
| | | | 7 | | 4 | | | 9 |
| | 5 | | | | | 8 | | 2 |
| 3 | | 6 | 8 | 2 | | | 4 | |
| 8 | | 2 | 9 | 5 | 1 | | | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 6 | 8 | 9 | 7 | 4 | 5 | 2 |
| 5 | 8 | 2 | 4 | 1 | 6 | 3 | 9 | 7 |
| 7 | 9 | 4 | 5 | 2 | 3 | 6 | 8 | 1 |
| 4 | 6 | 3 | 2 | 8 | 1 | 5 | 7 | 9 |
| 2 | 7 | 5 | 3 | 6 | 9 | 8 | 1 | 4 |
| 9 | 1 | 8 | 7 | 4 | 5 | 2 | 3 | 6 |
| 6 | 4 | 7 | 1 | 5 | 8 | 9 | 2 | 3 |
| 3 | 5 | 9 | 6 | 7 | 2 | 1 | 4 | 8 |
| 8 | 2 | 1 | 9 | 3 | 4 | 7 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்கள்

## சபாரத்தினம் கந்தையா

(இளைப்பாறிய ஆசிரியர்,யாழ். நல்லூர் ஸ்தான சி.சி.த.க சாதனா பாடசாலை)

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் கந்தையா 18.12.2012 செவ்வாய்க்கிழமை இரவு 9.30 மணியளவில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற முத்துலட்சுமியின் அன்புக் கணவரும், சேமபராபரன் (முன்னாள் கிளை முகாமையாளர், நல்லூர் ப.நோ.கூ.சங்கம்), காலஞ்சென்ற திரவியநாயகம் மற்றும் மஹேந்திரநாயகம் (பாதுகாப்பு உத்தி யோகத்தர்,கைதடி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை), கிருபாகுமாரி (யாழ்.மாநகர சபை நூலகர்), சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பராணியின் (கொக்குவில்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(20.12.2012) வியாழக்கிழமை மு.ப.10.00 மணிக்கு கச்சேரி நல்லூர் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

108,கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(26931)(5-6)

தகவல்:
மஹேந்திரநாயகம்(மகன்),
கிருபாகுமாரி(மகள்).

## துரைச்சாமி ஆச்சிப்பிள்ளை



பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ஆச்சிப்பிள்ளை 16.12.2012 ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை- கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற துரைச்சாமியின் அன்பு மனைவியும் பாலசுப்பிரமணியம் (அமெரிக்கா), பரமேஸ்வரன் (கனடா), யோகாம்பிகை (ஆஸ்திரேலியா), உருத்திரகுமார் (ஆஸ்திரேலியா), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சகுந்தலா (அமெரிக்கா), சந்திரகுமாரி(கனடா), சற்குணநாதன் (ஆஸ்திரேலியா), தனேஸ்வரி (ஆஸ்தி ரேலியா), ஞானசரஸ்வதி(லண்டன்) ஆகியோரின் மாமியும் பாலகுமார்(அமெரிக்கா), கிருசாந்தன், சாயிவந்தனா (கனடா), பிரபுசங்கர் பவானி (ஆஸ்திரேலியா), சாயிபிரியதர்சன் (ஆஸ்திரேலியா), திவாகரன், வர்ணிக்கா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (20.12.2012) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அதிகாரி வீதி, (V.Cமுன்)
கோப்பாய் தெற்கு.

(26964) (45.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சபாபதி தங்கராசா

(இளைப்பாறிய அதிபர், சமாதான நீதிவான் - சிறுப்பிட்டி வடக்கு,நீர்வேலி)



சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய அதிபரும், சமாதான நீதிவானுமாகிய சபாபதி தங்கராசா (16.12.2012) ஞாயிற்றுக் கிழமை இரவு இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி-அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-அன்னம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புச் சகோதரரும்,கௌரி(சுவிஸ்), காண்டீபன் (ஜேர்மனி), காகுந்தன் (சுவிஸ்), கஜமுகன்(லண்டன்),கௌந்தி, கௌசலா (ஆசிரியை-உமையாள்புரம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,தனபாலசிங்கம்(சுவிஸ்),இராஜலட்சுமி (கனடா), மலர்மகள்(ஆசிரியை-கொழும்பு), அன்பரசி (லண்டன்), தயாளன் (உரும்பிராய் சைவத்தமிழ் பாடசாலை),ராஜ்குமார்(பங்குச் சந்தை வியாபாரம்), கிருஸ்ணராசா(மோகன்-சுவிஸ்),காலஞ்சென்ற சிவராசா(அதிபர்) மற்றும் பாலராணி,ஜெயராஜ்(சட்டத்தரணி-லண்டன்),தவராசா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும்,நடராசா(கனடா), காலஞ்சென்ற முத்துத்தம்பி மற்றும் மனோன்மணி,பத்மராணி(கனடா), லீலாவதி(பிரான்ஸ்), கனகசிங்கம் (தண்ணீரூற்று),வைத்தியநாதன்(இளைப்பாறிய கிராம அலுவலர்), ஸ்ரீஸ்கந்தராசா (இளைப்பாறிய கிராம அலுவலர்), பாக்கியநாதன்(நாதன் சவுண்ட்ஸ்), ஸ்ரீபாலசரஸ்வதி(கனடா),காலஞ்சென்ற சிவனேஸ்வரி,தங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,விதுஷா,வினுஷா, சிந்துஜா,சியாமினி, லவ்சிகா, தர்சிகா,சங்கவி,கவியகன், சனாதினி,தனுஷ்யந்தி,கேதுகா,தாருகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.12.2012) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 04.00மணிக்கு புத்தூர் ஹிந்துசிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'அன்னபதி வாசா',
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(26933)(5-6)

தகவல்:
குடும்பத்தினர்,
த.தயாளன்(மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசிய கண்தான தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ கண் மற்றும் உடல் அவயங்களைத் தானம் செய்யும் உடன்பாட்டுப் பத்திரத்தில் கையெழுத்திட்டார்.

# பாதிக்கப்பட்டோருக்கு உதவிகளை வழங்குக

## ஜனாதிபதி உத்தரவு



கொழும்பு,டிசெ.20

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டோருக்கு எவ்வித தடைகளும் இன்றி முழு அளவில் உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

இடர் முகாமைத்துவ அமைச்சின் அதிகாரிகள் 24 மணித்தியாலங்களும் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகிறன என்று அவர் கூறினார்.

இராணுவத்தினரும் பொலிஸாரும், கடற் படையினரும் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். உலங்கு வானூர்திகள், படகுகள் மூலம் நீரில் மூழ்கிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச)

### பிரதம நீதியரசருக்கு எதிரான

# குற்றப் பிரேரணையை மீளப்பெற முடியாது

## பிரதி சபாநாயகர் சொல்கிறார்

கொழும்பு,டிசெ.20

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது என்று பிரதி சபா நாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குற்றப் பிரேரணையை மீளப் பெற்றுக்கொள்ள அரசமைப்பில் இடமில்லை.

குற்றப் பிரேரணை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை ஏற்கனவே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் மீளவும் அதனை மீளப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் இல்லை. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்தப்பட உள்ளது. இதில் பிரதம நீதியரசரைப் பணி நீக்க வேண்டும் என்று மூன்றில் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதினால் அது குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படும்.-என்றார். (ச)

# அரசின் உயர் மட்டத்தில் லஞ்ச ஊழல் மோசடிகள்

## சந்திரசிறி கஜதீர குற்றச்சாட்டு



சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீது குற்றச்சாட்டுகளை சுமத்திய போதிலும், உயர் மட்ட அரச தரப்பினர் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பு,டிசெ.20

அரசின் உயர் மட்டத்தில் லஞ்ச ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருகின்றன என்று சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திரசிறி கஜதீர குற்றம் சாட்டியுள்ளார்.

கைதிகள் நலன்புரி பேரவையின் 95 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொதுத்துறை ஊழியர்கள் மீது லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட போதிலும், உயர் மட்டத்தினர் அதிகளவில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சில தரப்பினர் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மீது அடிக்கடி குற்றச்சாட்டுக்க ளைச் சுமத்துகின்றனர்.

நேர்மையாகக் கடமைகளை ஆற்றிவரும் தரப்பினர் மீதும் லஞ்ச ஊழல் முத்திரை குத்தப்படுவது கவலை தரும் விடயமாகும். புளத்சிங்கள பிரதேசத்தில் பத்து ஏக்கரில் பெண்களுக்காக தனியான சிறைச்சாலையொன்று அமைக் கப்படவுள்ளது.- என்றார். (ச)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு

கொழும்பு,டிசெ.20

கொழும்பு,அவிசாவளை பிரதான வீதியின் எம்புல்கமுவ பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் உயிரிழந்ததோடு பின்னால் அமர்ந்து வந்தவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தில் அவிசாவளை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார். (ச)

# அரிசித் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்?

கொழும்பு,டிசெ.20

இலங்கையின் பல பிரதேசங்களிலும் கடந்த 14 மாதங்களாக நிலவிய வறட்சி காரணமாக அரிசிப் பற்றாக்குறை ஏற்படும் என்று விவசாய அமைச்சின் செயலாளர் டபிள்யூ.ஏ.சகலசூரிய நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரிசித் தட்டுப்பாட்டால் அடுத்த வாரங்களில் விலை அதிகரிப்பு ஏற்படும் சூழ்நிலை காணப்படுகிறது. எதிர்வரும் பெப்ரவரி மாத நெல் அறுவடைக்குப் பின்னரே அரிசி விலைகள் குறைவடையலாம்.

பண்டிகைக் காலத்தில் உள்ளூர் சந்தைகளில் அரிசி பற்றாக்குறையைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவுள்ளது. நாட்டில் அரிசித் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதை அடுத்து அரசு அரிசி ஏற்று மதியை நிறுத்தியுள்ளது. எனினும் அரிசியை இறக்கு மதி செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.

மாதாந்த அரிசித் தேவை 198 ஆயிரம் மெட்றிக் தொன்னாக உள்ளது. ஆனால் தற்போது 179 ஆயிரம் நெல் மட்டுமே களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் அறிக்கைக்கு அமைய, வறட்யால் வடமத்திய, கிழக்கு, சப்ரகமுவ மாகாணங்களில் 160 ஆயிரம் ஏக்கரில் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக 4 லட்சம் மெட்றிக் தொன் நெல் உற்பத்தி இழப்பு ஏற்பட்டுள்ளது.-என்றார். (ச)

# இடர் நேரத்தில் பகிஷ்கரிப்பு

## சுகாதார அமைச்சு கண்டனம்

கொழும்பு,டிசெ.20

நாட்டில் இயற்கை இடர் ஏற்பட்டுள்ள நிலையில் சில சுகாதார தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையை மேற்கொண்டு வருவதை சுகாதார அமைச்சு கண்டித்துள்ளது.

நாட்டில் பெய்துவரும் கடும் மழை காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளனர். 80,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. இந்த நிலையில் சில சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று புதன்கிழமை காலை தொடக்கம் 24 மணிநேர பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளமையை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

# சட்டவிரோத ஆள்கடத்தலைத் தடுக்க ஆஸி - இலங்கை கூட்டு செயற்குழு



கொழும்பு,டிசெ.20

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாகப் படகுகள் மூலம் செல்லும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் வகையில் இரு நாடுகளும் இணைந்து, கூட்டு செயற்குழு ஒன்றை உருவாக்கியுள்ளன. ஆஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் பதில் செயலாளர் மார்டின் பொவல்ஸ் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சட்டவிரோதமாக படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்கள் எந்தவிதமான புகலிடக் கோரிக்கையையும் முன்வைக்க முடியாது. அவ்வாறு நுழைபவர்கள் உடனடியாகத் திருப்பி அனுப்பப்படுவார்கள். எந்தக் காரணம் கொண்டும் அவர்கள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குள் நுழைபவர்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்காகவே இலங்கை அரசுடன் இணைந்து கூட்டு செயற்குழுவொன்றை உருவாக்கியுள்ளோம். சட்டவிரோதமாக ஆள்களைக் கடத்துவது ஆஸ்திரேலியா உட்பட பல நாடுகளில் தண்டனைக்குரிய குற்றமாகும்.

சட்ட விரோதமாகப் படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்களில் 800 இலங்கையர்கள் இதுவரை திருப்பியனுப்பப்பட்டுள்ளனர். எஞ்சியவர்கள் தொடர்ந்தும் அனுப்பப்படுவார்கள்.

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக வருபவர்கள் எவரும் புகலிடக் கோரிக்கையை முன்வைக்க முடியாது. அவர்களுக்கு எந்தவிதமான வேலைவாய்ப்புக்களும் ஆஸ்திரேலியாவில் வழங்கப்படமாட்டாது. அவர்கள் வேலை செய்து பணம் சம்பாதிக்க முடியாது என்ற உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும்.

சட்டரீதியாக ஆஸ்திரேலியாவுக்கு வருபவர்கள் மாத்திரமே அங்கு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதனைத் தடுக்கும் வகையிலேயே ஆஸ்திரேலியாவின் சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்புத் திணைக்களம், சட்டமாஅதிபர் திணைக்களம், வெளி விவகாரத் திணைக்களம் ஆகிய பிரதிநிதிகளையும், இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு, கடற்படையினர், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக இணைந்த செயற்குழு உருவாக்கப்பட்டுள்ளது- என்றார்.

இந்த செயற்குழு இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஆஸ்திரேலியா வின் குடிவரவு மற்றும் குடியுரிமை திணைக்களத்தின் பதில் செயலாளர் மார்டின் பொவல்ஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



சாவகச்சேரி நகர சபையின்
தமிழ் தேசிய கூட்டமைப்பின்
கௌரவ உறுப்பினர் த.சுதர்சன்
அவர்களின் முயற்சியினால்
30 வருட காலமாக அபிவிருத்தி
செய்யப்படாமல் இருந்த
யாழ். வீதி, முதலாம் ஒழுங்கை,
நுணாவில் என்ற வீதியை சபை
நிதியில் இருந்து 16 லட்சம் ரூபா
செலவில் புனரமைப்புச் செய்து
வழங்கியமைக்காக மனதார
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நுணாவில் வாழ் மக்கள்.


## பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், டிசெ.20

தேசிய பயிலுநர் கைத் தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி ஜி.சீ.ஈ. சாதாரண தரம் வரை கற்றி ருப்பதுடன் 35 வயதுக் குட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதியுடையவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட சுயவிவரப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், என்.ஏ.ஐ.ரி.ஏ., இல.7, கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)


## 2013 இல் நீங்களும் பணிபுரியலாம்

பிரபல வங்கியின் உப நிறுவனமான எச்.என்.பி. அசூரன்ஸ் 2013 இற்கான புதிய முகவர்களை இணைத்துக் கொள்ளும் நோக்கோடு கூடிய அனுகூலங்களோடு உங்கள் வருமான மட்டங்களை அதிகரிக்க நீங்கள் விரும்பும் பட்சத்தில் உங்கள் சுயவிவரக்கோவையை எதிர்வரும் 28.12.2012 இற்கு முன்பாக உங்கள் தொலைபேசி இலக்கத்துடன் எமக்கு அனுப்பிவைக்கவேண்டிய முகவரி:

விளம்பர இலக்கம்: 4424
(C/o) உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம் குறிப்பு:
* முழுநேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பணி புரியலாம்.
* கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்குரிய நேர்முகத் தேர்வு அந்தந்த கிளைகளில் நடைபெறும்.

(சி/2676) (45.6.7)



## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

(சி/2671) (2.6)

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 0212224040 / 0772931062


## துயர் பகிர்கின்றோம்



கிளி / கனகபுரம்
மகாவித்தியாலயத்தின்
ஆசிரியையான
செல்வி அனுஷா இரத்தினம்
அவர்களின் தந்தை
சின்னவன் இரத்தினம்
அவர்களின்
மறைவுக்கான துயரில்
பாடசாலைச் சமூகம்
பங்கு கொள்வதோடு
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும்
பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
கிளி / கனகபுரம் ம.வி.

(26980) (11.6)


## நத்தார் தினத்தையும் புதுவருடத்தையும் முன்னிட்டு விசேட விலைக்குறைப்பு

hp DELL

### HP PRO 3330MT i3 DESTOP PC
- intel Core i3 3.3 processor
- M/Board HP 61
- 4GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- HP DVD-Rw
- HP 19" LED Monitor
- HP USB Kery Board,
- USB Optical Mouse
- Free DOS

RS.73,000/=

### HP PRO 3330MT DUALCORE PC
- intel Dual Core 2.7 processor
- M/Board HP 61
- 4GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- HP DVD-Rw
- HP 19" LED Monitor
- HP USB Kery Board,
- USB Optical Mouse
- Free DOS

RS.64,000/=

### HP PAVILION G6 NOTE BOOK
- intel i5 2.5 processor(3rd)
- 4GB DDR3 Memory
- 750 GB SATA Hard Drive
- DVD-Rw
- Display 15.6" LED
- Blue Tooth, Wirless Lan
- Web cam, Mic
- Free Dos

Rs.86,000/=

1 year international Warranty

### DELL INSPIRON 3520 i5 NOTE BOOK
- intel i5 2.5 processor
- 4GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- DVD-Rw
- Display 15.6" LED
- Blue Tooth, Wirless Lan
- Web cam, Mic
- Free Ubunthu

Rs.81,000/=

1 year international Warranty

### HP 630 i3 NOTE BOOK
- intel core i3 3.3 processor
- 2GB DDR3 Memory
- 320 GB SATA Hard Drive
- DVD-RW
- Display 15.6" LED
- Blue Tooth Wirless lan
- Web cam,Mic
- Free DOS

RS.61,000/=

1 year international Warranty

### DELL INSPIRON 3520 i3 NOTE BOOK
- intel i3 3.3 processor
- 4GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- DVD-Rw
- Display 15.6" LED
- Blue Tooth, Wirless Lan
- Web cam, Mic
- Free Ubunthu

Rs.75,000/=

1 year international Warranty

### ASSEMBLED i3 DESKTOP PC
- intel Core i3 3.3 processor
- M/Board intel 61
- 4GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- Samsung DVD-Rw
- Samsung 19" LED Monitor
- Dex Casing, Power Supply 550w
- UPS Squt 650w
- POWER LOQIC Kery Board,
- POWER LOQIC Optical Mouse
- Free DOS

Rs.58,500/=

### ASSEMBLED DUAL CORE PC
- intel Dual Core 2.7 processor
- M/Board intel 61
- 4GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- Samsung DVD-Rw
- Samsung 19" LED Monitor
- Dex Casing, Power Supply 550w
- UPS Squt 650w
- POWER LOQIC Kery Board,
- POWER LOQIC Optical Mouse
- Free DOS

Rs.49,800/=

### HP CQ 43-400TU NOTE BOOK
- intel Dual Core 2.6 processer
- 2GB DDR3 Memory
- 500GB SATA Hard Drive
- DVD-Rw
- Display 14" LED
- Blue Tooth, Wirless Lan
- Web cam, Mic
- Free DOS

Rs.52,000/=

1 year international Warranty

| | |
|---|---|
| 8GB Flash | -950/= (1Y) |
| 16GB Flash | -1,800/= (1Y) |
| 32GB Flash | -3,900/= (1Y) |
| DDR3 2GB Ram | - 1,900/= (1Y) |
| DDR3 4GB Ram | - 2,900/= (1Y) |
| Hard Disk 500GB | -8,200/= (1Y) |
| M/Board 41(DDR2&DDR3) | -7,300/= (1Y) |
| M/Board 61 | -7,400/= (1Y) |
| Multi Dongle | -3,200/= to 5,500/=(1Y) |

i7,5,i3 Processor 3Year Warranty

NALIN Information Technologies Pvt Ltd.

NALIN INFORMATION TECHNOLOGIES web - www.nit.lk

195/2,Palali road,Parameswara Junction, Jaffna. T.P: 0212221121 / 0777667975

(சி/2675) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.



வட்டு.வா க்கு பிரமனாச்சி தோட்டத்து கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற கஜமுக சூரசம்ஹார நிகழ்வின் போது பூதவாகனத்தில் விநாயகப் பெருமான் எழுந்தருளி கஜமுகா சூரனுடன் போரிடும் காட்சி.

## பாவம் என்றால் என்ன?

சுயநலத்தினால் உந்தப்பட்டு உடலையும், புலனின்பங்களையும் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்ட எல்லா நடவடிக்கைகளும் இதில் அடங்கும். ஒரு மனிதனைக் கடவுளருகே கொண்டுபோகும் எல்லா நடவடிக்கைகளும் புண்ணியமாகும். [பர- உப- காரம்].

தெய்வீகத்துக்கு ஊறுவிளைவிப்பதோ, அதை மறப்பதோ பாவம் [பரபீடனம்] ஆகும். எல்லோரிலும் உள்ள தெய்வீகத்தை நினைப்பது புண்ணியம் பெறும் வழியாகும்.

நன்றி
தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒரேநாளில் 60 பேர் இரத்ததானம்

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த 16 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்ட முதல்நாளே 60 பேர் வரையில் இரத்த தானம் செய்துள்ளனர்.

முதலாவது இரத்ததான நிகழ்வை மேற்படி வைத்திய சாலை ஊழியர்கள் மூவர் ஆரம்பித்து வைத்தனர். தொடர்ந்து இராணுவம் பொலிஸ் மற் றும் பொதுமக்கள் எனப் பலரும் முன்வந்து இரத்ததானம் செய்தனர். தொடர்ந்து எதிர்வரும் 31 ஆம் திகதி வரை இரத்த தானம் செய்ய முடியும் என வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது. (வ-36)

### மலேரியா ஒழிப்பு நடவடிக்கைகளில் ஏன் தாமதநிலை

## கிடைத்த அனுகூலம் பயனற்றுப் போகும் எச்சரிக்கிறது உலக சுகாதார நிறுவனம்

மலேரியா ஒழிப்புக்கு எதிரான நடவடிக்கைகளில் தற்போது தாமத நிலை காணப் படுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித் துள்ளது. இதன்மூலம் அந்த நோய் ஒழிப்பில் அண்மைக் காலங்களில் கிடைத்த அனு கூலங்கள், பயனற்றுப் போய் விடக் கூடும் என்றும் அது எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு மேலும் தெரிவித்ததாவது:-

மலேரியா நோயைத் தடுப்பதற்கும் அதனைக் கண்டறிவதற்கும் வைத்தியம் செய்வதற்குமான நிதிக் கையிருப்புக்கும் தேவைப்படும் நிதிக்கும் இடையில் பெரிய இடை வெளி உள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

உதாரணமாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் ஆபிரிக்காவில் கொசு வலை விநியோகிக்கப்படுவது முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் பாதிக்கும் குறைவான அள வுக்கு குறைந்துள்ளது. அதன் காரணமாக பல இலட்சம் மக்கள் மலேரியா நோய்த் தாக்குதலுக்கு உள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மலேரியா ஒழிப்புக்கு எதிரான செயற்பாடுகளை இன்னும் துரிதமாக முன்னெடுத்துச் செல்ல எமக்கு மேலதிகமாக மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவை. அதற்காக புதிய வழிகளில் நிதியாதாரங்களை அதிகரிக்கும் வழிகளை நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

அதன் ஒரு பகுதியாக நிதி பரிவர்த்தனைகள் மீது வரி விதித்தல் மற்றும் கடன் பத்திரங்களை வெளியி டுதல் போன்ற நடவடிக்கைகள் குறித்தும் நாம் பரிசீலித்து வருகின்றோம்- என்றுள்ளது. (வ)

## திருத்தியமைக்கப்படாத மதகால் தடைப்பட்டது போக்குவரத்து

வடமராட்சி,டிசெ.20

உடைந்த மதகு திருத்தப் படாமையினால், மாலுசந்தி, வியாபாரி மூலை வீதி ஊடான போக்குவரத்துக்கள் வாரக்கணக்காக தடைப்பட் டுள்ளன.

இந்த வீதியில் நாவலடிச் சந்திக்கும், மெதடிஸ்த தேவாலயத்துக்கும் இடைப்பட்ட வீதியில் இருந்த பழுதடைந்த மதகு மீது கனரக லொறி சென்ற போது மதகு உடைந்தது.

இதனால் சேதமடைந்த மதகின் ஊடாக எந்த வகையான வாகனங்களும் சென்று வர முடியாத நிலை ஏற்பட் டுள்ளது.

சேதமடைந்த மதகின் சிறுபகுதி ஊடாக மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கர வண்டிகள் மற்றும் பாதசாரிகள் மாத்திரமே சென்று வரக் கூடியதாக இருக்கின்றது.

**சேதமடைந்த மதகின் ஊடாக எந்த வகையான வாகனங்களும் சென்று வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.**

பல கிராமங்களை ஒன்றிணைக்கும் இந்த மதகினைத் திருத்தியமைப்பதில் யாழ். பிராந்திய வீதி அபிவிருத்தித் திணைக்களம் கால தாமதம் காட்டுவதால் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளார்கள். (3-8)

### பணம் தவறவிடப்பட்டமை தொடர்பானது

அளவெட்டி வடக்கு. அரசொல்லையில் வசித்து வரும் சுப்பிரமணியம் தனபாலசிங்கம் என்பவர் கடந்த திங்கட்கிழமை 17.12.2012 அன்று மு.ப 11.00 மணிக்கு முல்லைத்தீவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்ட அரச பேருந்தில் பயணித்த போது அவரிடமிருந்த 36,200 ரூபா பணம் பஸ்ஸினுள் தவறவிடப்பட்டுள்ளது . இதனைக் கண்டெடுத்த அன்புள்ளங் கொண்டவர்கள் 077 507 4527, 021 7911761 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாக அல்லது மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அறியத் தரும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சு.தனபாலசிங்கம் (பணம் தவறவிட்டவர்)
(சுருட்டு, புகையிலை வியாபாரி)

(28940) (6.7.4)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.மாவட்ட பிரபல ராஜன்ஸ் இசைக்குழுவின் முன்னணிப் பாடகரும் எமது சக பணியாளருமான சி.கோட்டீஸ் அவர்களின் தந்தை கதி சின்னத்தம்பி அவர்கள் 15.12.2012 அன்று கொழும்பு யோன் டீ சில்வா அரங்கில் இந்து கலாசார அமைச்சினால் வழங்கப்பட்ட கலைத்துறைக்கான "கலாபூஷணம்" விருது பெற்றமையையிட்டு வாழ்த்துவதோடு மேலும் அவருடைய கலைச் சேவை தொடர வாழ்த்கின்றோம்.

Best Wishes

பணியாளர்கள்
திக்கம் வடிசாலை, அல்வாயி

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இன்று (20.12.2012) வியாழக்கிழமை நடைபெறுகின்ற முன்பள்ளி டிப்ளோமாதாரிகளுக்கான பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறும் திருமதி அனந்தினி பாரதிராஜ் அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்,

வாழ்த்துவோர்: பா.அனஸ்ரிகா (மகள்),
மருமக்கள்:- சி.பிரியந்தி, வை.வைஷ்ஷாளினி, வை.வைஷ்மினி, வ.ஜெனிஸ்னா.
பெறாமக்கள்:- அ.அபிஷானி, அ.ஆருஷா.
தெய்வீகம், அல்வாயி.

### உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

### நாய்க்குட்டி விற்பனைக்கு

55 நாள் நிரம்பிய அல்சேஷன் ஜேர்மன் சப்பேட் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.
தொடர்பு:A.G.செல்வம்
107, பேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.
(26966) (6.4)

### ஆங்கில வகுப்புக்கள்

புதிய கல்வியாண்டுக்கான தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பும் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.எமது நிறுவனத்தில் வந்து கற்கும் வாய்ப்புகளும் உண்டு. மேலதிக விவரங்களுக்கு உடன் அழைக்கவும்.
தொடர்பு: சீனியர் ஒழுங்கை, கஸ்ட்டி, யாழ்ப்பாணம்.
0778361521
(29027) (6.7.4)

### கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உதவியாளராக கடமையாற்றும் சி.விவேகானந்தம் அவர்களின் அன்புத் தந்தை

**வேலன் சின்னத்தம்பி**



அவர்கள் 17.12.2012 அன்று சிவபதமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.

பிதேச செயலரும்,
ஊழியர் நலன்புரி
சங்க அங்கத்தவர்களும்.

(C/2870)(6.11)

### அறிவித்தல்
### மு/புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம்(வ.து) வாக்காளர் இடாப்பு மூடுதல்

மேற்படி புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் வாக்காளர் இடாப்பு 2012.12.31ஆம் திகதியுடன் மூடப்படுகின்றது. அனைத்து அங்கத்துவ கிளை நிலையங்களிலும் அங்கத்துவப் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கத்துவ படிவங்கள் பூரணப்படுத்தாத அங்கத்தவர்கள் படிவங்களைப் பூரணப்படுத்தி கிளைமுகாமையாளர்களிடம் வழங்குமாறும் பட்டியலில் ஏதாவது ஆட்சேபனைகள், தவறுகள் இருந்தால் புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கத்தின் தலைமைப் பணிமனையில் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறும், இந்தத்திகதிக்கு பின் வரும் ஆட்சேபனைகள், திருத்தங்கள் எவையும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

| இல. அங்கத்துவ கிளை | கிளை இல. | காட்சிப்படுத்தப்பட்ட இடம் |
|---|---|---|
| 01. புதுக்குடியிருப்பு மேற்கு | 01 | புதுக்குடியிருப்பு மேற்கு கிளை, கோம்பாவில் கிளை |
| 02. புதுக்குடியிருப்பு கிழக்கு | 02 | புதுக்குடியிருப்பு கிழக்கு கிளை |
| 03. புனித சூசையப்பர் | 03 | புனித சூசையப்பர் கிளை |
| 04. ஆனந்தபுரம் | 04 | ஆனந்தபுரம் கிராமசேவையாளர் அலுவலகம் |
| 05. இரணைப்பாலை | 05 | இரணைப்பாலை கிளை |
| 06. தேவிபுரம் | 06 | தேவிபுரம் கிளை |
| 07. உடையார்கட்டு | 07 | உடையார்கட்டு A கிளை |
| 08. சுதந்திரபுரம் | 08 | சுதந்திரபுரம் கிளை |
| 09. வள்ளிபுனம் | 09 | வள்ளிபுனம் கிளை |


பொது முகாமையாளர்,
புதுக்குடியிருப்பு ப.நோ.கூ.சங்கம் (வ.து)

(சி/2669)(5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆற்றலை வளப்படுத்துவது

## தனிப் பாடசாலைகள்



பாடசாலைப் பருவத்திலேயே உடல் உளரீதியான பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பாலியல் மற்றும் மனவெழுச்சி ரீதியாக ஏற்படும் இத்தகைய மாற்றங்களைப் பொருத்தமாகக் கையாள்வதற்கு கலவன் பாடசாலைகளை விட தனிப்பாடசாலைகளே பொருத்தமானவையாகும்.

பாடசாலைகளின் மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவதில் இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் காத்திரமான பங்களிப்பை வழங்குகின்றன. காலைப் பிரார்த்தனை, மாணவர் மன்றம், விளையாட்டுப் போட்டி, கல்விச் சுற்றுலா என்ற வகையில் இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் பல வகைப்படும். இந்தச் செயற்பாடுகளில் மாணவர்கள் பங்குபற்றி தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி அவற்றை வளர்ப்பதற்கு பொருத்தமாக அமைவது தனிப்பாடசாலையாகும்.

ஆண் மாணவர்கள் மற்றும் பெண் மாணவர்கள் தமது சுய ஆற்றலைத் தாமாகவே முன்வந்து வெளிப்படுத்துவதற்கும், வளர்ப்பதற்கும் கலவன் பாடசாலைகளை விட பொருத்தமாக அமைவது தனிப்பாடசாலைகளேயாகும். மாணவர்களில் இயல்பாகவே வெட்கப்படும்- பயப்படும் இயல்புடைய மாணவர்கள் காணப்படும் போது அவர்கள் தமது ஒத்த வயதுடைய எதிர்ப்பாலார் முன்னிலையில் தமது திறமைகளை வெளிப்படுத்தத் தயங்குவார்கள். இதனால், அந்தச் செயற்பாடுகளிலின்றும் ஒதுங்கிக் கொள்வார்கள். எனவே இத்தகைய மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்த பொருத்தமாக அமைவன தனிப்பாடசாலைகளாகும்.

கலவன் பாடசாலைகளில் சில செயற்பாடுகளுக்கு ஆண் மாணவர்களே பொருத்தமானவர்கள் எனக் கூறப்பட்டு பெண் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். இவ்வாறே ஆண் மாணவர்களும் புறக்கணிக்கப்படுகிறார்கள். குறிப்பாக வாணிவிழா காலங்களில் கலவன் பாடசாலைகள் பெருமளவானவற்றில் சகலகலா வல்லி மாலையை பெண் மாணவர்களே பாடுவார்கள். ஆண் மாணவர்கள் புறக்கணிக்கப்படுவதைக்காணலாம். ஆனால் தனிப்பாடசாலைகளில் இத்தகைய புறக்கணிக்கப்படுதல் தவிர்க்கப்படும். இதனால் எல்லாச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் பங்கு பற்றி தமது ஆற்றல்களை வளப்படுத்துவதற்கு தனிப்பாடசாலைகளே பொருத்தமானவையாகும்.

பாடசாலைப் பருவத்திலேயே உடல்- உளரீதியான பெரும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பாலியல் மற்றும் மனவெழுச்சி ரீதியாக ஏற்படும் இத்தகைய மாற்றங்களைப் பொருத்தமாகக் கையாள்வதற்கு கலவன் பாடசாலைகளை விட தனிப்பாடசாலைகளே பொருத்தமானவையாகும். இத்தகைய மாற்றங்கள் ஏற்படும் போது பெரும்பாலான மாணவர்கள் தமது எதிர்பாலர் முன்னிலையில் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தத் தயங்குவார்கள். இதனால் அவற்றைத் தம் மனதில் அடக்கி வைப்பார்கள். எனவே, இதற்குப் பொருத்தமாக அமைவது தனிப்பாடசாலைகளாகும்.

தனிப்பாடசாலைகளில் குறிப்பாக மகளிர் பாடசாலைகள் பெண் மாணவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு களம் அமைத்துக்கொடுக்கின்றன. மேலும், பெண் மாணவர்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கும், வெளிப்படுத்துவதற்கும், தாம் ஆண்களுக்கு சரி சமமானவர்கள் என்ற சிந்தனையை வளர்ப்பதற்கும் பொருத்தமாக அமைவது மகளிர் பாடசாலைகளாகும். எனவே, மாணவர்கள் தமது சுதந்திரத்தை வெளிப்படுத்தவும், தமது தனிப்பட்ட ஆற்றல்களை வளப்படுத்தவும் கலவன் பாடசாலைகளை விட தனிப்பாடசாலைகளே பொருத்தமானவை எனக்கூறலாம்.

பா. சிவானந்தன்
இல:- 65, ஐயனார் வீதி, பருத்தித்துறை.



# விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துவது

**கலவன் பாடசாலைகளா?**
**தனிப் பாடசாலைகளா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

# இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-....................................................

முகவரி :- ..................................................

..................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# மனதில் செய்யும் தவறுகள்

1. மற்றவர்களை அடக்குதல். இதன் மூலம் தனது மதிப்பு இரட்டிப்பு அடையும் என எண்ணுதல்.

2. மாற்ற முடியாத அல்லது திருத்த முடியாத விடயங்களுக்காக கவலைப்படுவது.

3. தன்னால் செய்ய முடியவில்லை என்பதற்காக எவரும் செய்ய முடியாது என எண்ணுதல்.

4. படித்து பண்படுத்திக் கொள்ளாமல். தனது காலத்தை விரயமாக்குவது.

5. தான் நம்புவதை எல்லோரும் நம்ப வேண்டும் என நினைப்பது.

6. எல்லாவற்றையும் நான் செய்ய வேண்டும் நான் செய்வது மட்டுமே சரியாக இருக்கும் என எண்ணுதல்

சா. ஜிந்துஜா
கோண்டாவில்

# கல்வியின் மகிமையினை உணர்வீர்


உலகச் செம்மொழிகளில் உயர் தனிச் சிறப்புடையது நம் தமிழ் மொழி. "தமிழ்ச் சொல்லின் உயர்வு" பற்றி "கல்வியின் மகிமை" பற்றி, கம்பர் சிறப்பித்து கூறியுள்ளார். ஒருவருக்கு கல்வி அறிவு மூலம் பெறப்படும் பெருமையே உண்மையான பெருமையாகும்.

"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல கல்வி அழகே அழகு" என்று ஔவையார் கல்வியே எல்லா அழகையும் விட தனிச் சிறப்பு உடைய அழகு என்று கூறுகின்றார். நாலடியார் எனும் நன்னூலும் "கல்வி அழகே அழகு" என்று உரைத்துள்ளமை இதனையே வலியுறுத்துகின்றது. முற்றிய நெற்கதிர் தலை சாய்ந்து நிற்கும் அதே போன்று ஆழ்ந்தகன்ற அறிவுடையோர் இனிய வார்த்தைகளைப் பேசுவோராக, அமைதியான குணப்பண்பு உடையோராக விளங்குவர். தேவையற்ற வார்த்தைகளைப் பேசமாட்டார்கள், அறிவிலிகளே அதிகம் பேசுவர். அறிவுடையோர் நிறைகுடம் போன்றவர்கள். அறிவிலிகள் குறைகுடம் போன்றவர்கள் எனலாம்.

எந்நாளும் கல்வியறிவுடையோர் மக்கள் தம் மதிப்புக்குரியவர்களாவர். அவர்களது செயல்கள் நல்லனவாக பிறருக்கு நன்மை பயப்பனவாகவே அமையும். வீண் ஆடம்பரங்களை விரும்பமாட்டார்கள். பட்டம் பதவிகளை எதிர்பார்க்கமாட்டார்கள். அவை அவர்களைத் தேடிச் செல்லும்.

"ஏழ்மையினால் ஒரு தமிழன் படிக்கவில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிட வேண்டும்" என்றார் பாவேந்தர் பாரதிதாசன். இதற்கமைய எல்லோருக்கும் கல்வி புகட்ட ஏற்றன யாவும் செய்யப்பட வேண்டும். கல்வி என்பது எமது கண் போன்றது. கல்விக் கண் இன்றேல் நாம் கண்ணிருந்தும் குருடராகவே கருதப்படுவோம். "விலங்கொடு மக்கள் அனையர் இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர்" என்பது வள்ளுவர் ... வாழக்கூட ... பண்புள்ளவனாக வாழ வேண்டும். அதற்கு கல்வியே அச்சாணியாக விளங்கும். ஒரு சமுதாயத்தில் ஒரு பகுதியினர் கல்வியறிவு படைத்தவர்களாகவும் இன்னொரு பகுதியினர் கல்வியறிவு இல்லாதவர்களாகவும் வாழ நேர்ந்தால் அந்த சமுதாயம் சீர்பெற முடியாது. முழுச் சமுதாயத்துக்குமே அது ஒரு இழுக்காகும்.

"அனைவருக்கும் கல்வி" என்றால் குடிமக்கள் அனைவருக்கும் எழுத வாசிக்கத்தெரிந்தால் போதும் என்று நாம் கருதி விடக் கூடாது. ஒருவன் தான் பெற்றுக்கொண்ட கல்வியினால் தனக்கும், தான் வாழும் சமுதாயத்துக்கும் பயன்படும் அளவுக்கு அவனது கல்வி அமைதல் வேண்டும். இன்று இத்தகைய பொருளுடையதான கல்வியைப் பெறுவதற்குப் பல்வேறு முட்டுக்கட்டைகள் இடப்படுகின்றன. இந்த நிலை மாற வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் எல்லா வசதிகளும் கிட்ட வேண்டும். கல்வியின் மகிமை பற்றி யாவரும் உணர்ந்து



சு. லக்ஸ்சனா
கெற்பேலி, மத்தி, மிருசுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அவசர நிலைமையை பிரகடனப்படுத்த வேண்டும்

## சஜித் பிரேமதாச எம்.பி. வேண்டுகோள்



கொழும்பு,டிசெ.20

நாட்டில் பல பாகங்களிலும் பெய்து வருகின்ற அடைமழையால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர். இதனால் தேசிய அவசர நிலைமையை பிரகடனப்படுத்த வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெள்ளத்தால் 30,000 குடும்பங்களும், 100,000 மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆனால் இந்த அரசு பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீர், உணவு கூட வழங்க வில்லை. ஆனால் ஊடக அறிக்கைகள் இதற்கு மாறாக உள்ளன.

ஹம்பாந்தோட்டையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதுவரை நிவாரணம் வழங்கப்படவில்லை.

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணையில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை தயாரிப்பதில் காட்டிய வேகத்தை மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலும் அரசு காட்ட வேண்டும்.

கார் பந்தயத்துக்காக இறக்குமதி செய்யப்பட்ட ஆடம்பர லம்போகினி வகைக் கார்களின் இறக்குமதிக்கு வரிச்சலுகைகளை வழங்கி நாட்டுக்கு வரவேண்டிய வரி வருமானத்தை அரசு இல்லாமல் செய்துள்ளது. சகல வளங்களையும் வெள்ள நிவாரண வேலைகளில் ஈடுபடுத்துவதற்கான தேசிய நிலையைப் பிரகடனப்படுத்த வேண்டும்.-என்றார். (ச)

## புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையச் சிறார்களின் கலைவிழா



தென்மராட்சி, டிசெ.20

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்களின் கலைவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன்கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை பேராசிரியர் கா.குகபாலன் கலந்து கொண்டார்.

மேற்படி நிலையத்தில் கல்வி கற்று அடுத்த வருடம் பாடசாலைக் கல்வியில் இணையவுள்ள மாணவர்கள் கல்விச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

தென்மராட்சி உதவிப் பிரதேச செயலர் செல்வி சி.நவரத்தினம், தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (தமிழ்) க.சின்னத்துரை, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.பாக்கியராசா, யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்ற நிலையப் பொறுப்பு நன்னடத்தை அதிகாரி சி.சிவகரன் உட்பட பலர் உரையாற்றினர். (வ-9)

## ஊர்காவற்றுறை நீதிபதி பொலிஸாருக்கு பாராட்டு

வலி. வடக்கு, டிசெ .20

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதியால் நீதிமன்றத்தில் கடமையாற்றும் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாராட்டப்பட்டனர், அது சம்பந்தமாக பொலிஸ் மா அதிபர் மற்றும் யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் பாராட்டுக் கடிதங்களின் பிரதிகளும் அனுப்பி வைக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள வழங்குகளைத் தகுந்த முறையில் விசாரணை செய்வதற்கு வசதியாக உரிய விவரங்களை நீதிமன்றத்திற்கு வழங்கியமை, குற்றவாளிகளை உரிய முறையில் கண்டு பிடித்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியமை, மற்றும் அதிக எண்ணிக்கையான வழக்குகள் விரைவாக தீர்ப்புக்களை பெறக் கூடிய வகையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்தமை ஆகிய காரணங்களுக்காக ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.மகேந்திரராசா இந்தப் பாராட்டை வழங்கியுள்ளார். இவ்வாறு பாராட்டைப் பெற்றவர்கள் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய சார்ஜன்ட நந்தகுமார் (54317) பொலிஸ் கன்ஸ்டபிள் அழகக்கோன் (27497) ஆகிய பொலிஸாரே ஆவர். (வ-86)

## தடம்புரண்டது தபால் ரயில் ....



கொழும்பு - பதுளை இரவு நேரத் தபால் ரயில் ஒஹிய பகுதியில் தடம்புரண்டுள்ளது.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசக விழா

வடமராட்சி,டிசெ.20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை வருடாந்தோறும் நடத்தி வரும் திருவாசக விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் பேரவை உறுப்பினர் கே.அருணகிரிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கோயிலில் இருந்து நால்வரின் திருவுருவப் படங்களும், திருவாசக ஏடுகளும் திருவாசக பாராயனத்துடன் ஆச்சிரம வளாகத்துக்கு எடுத்து வரப்படும்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு நிகழ்வுகளாக காரை நகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளும் முருகன் அடியார்களின் முருக நாம பஜனையும் பக்க வாத்தியங்கள் சகிதம் நடைபெறும்.

அத்துடன் திருவாசகப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பண்ணிசையும், அவர்களுக்குரிய பரிசில்களும் வழங்கப்படும். (வ-8)

## கைதடி தொழிற்பூங்காவுக்கு மேலைத்தேய இசைக்கருவிகள்



கைதடி, டிசெ. 20

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் கீழ் இயங்கும் கைதடி தொழிற்பூங்காவுக்கு மேலைத்தேச இசைக்கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இங்குள்ள கலைஞர்களின் நலன் கருதி சுவிஸ் நாட்டில் வசிக்கும் கைதடியைச் சேர்ந்த இரத்தினம் சிவபாலசூரியர் தனது பேரரான அமரர் ப.வல்லிபுரம் ஞாபகார்த்தமாக இந்த இசைக் கருவிகளை வழங்கியுள்ளார் என யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் வி.கனகசபை தெரிவித்துள்ளார்.

விழிப்புலனிழந்த கலைஞர்களை ஒன்றிணைத்து இசைக்குழு ஒன்றை உருவாக்கி இருப்பதாகவும், அதற்கு இசைக் கருவிகள் இல்லாத நிலையில் இப்படியான உதவிகள் மூலம் இசைக் குழுவை வளர்க்க வாய்ப்புள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேபோல் ஏனையோரும் உதவினால் இசைத் துறையில் விரைவில் வளர்ச்சியடையலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-288)

## சாவகச்சேரி மாதர் சங்க உறுப்பினர் 20 பேருக்கு வாழ்வாதார உதவிக் கடன்

தென்மராட்சி, டிசெ.20

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் 20 பேருக்கு வாழ்வாதார உதவி சுழற்சி முறைக் கடன் நேற்று வழங்கப்பட்டது.

சங்கத்திலிருந்த நிதியை உறுப்பினர்களின் வாழ்வாதார நிலையை உயர்த்தும் நோக்கில் சுழற்சி முறைக் கடனாக வழங்க தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்தி அலுவலர் எஸ்.ரவிகரன் அனுமதி வழங்கியதையடுத்து வங்கியிலிருந்து பெறப்பட்ட இரண்டு லட்சம் ரூபா அங்கத்தவர்களுக்கு கடனாக வழங்கப்பட்டது.

உணவு தயாரிப்பு, கால் நடை வளர்ப்பு, விவசாயம், வீட்டுத் தோட்டம் உட்பட்ட சுயதொழில்களை மேற் கொள்ள கடன்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் சங்கத் தலைவி திருமதி.ம.மூர்த்திநாதனால் 20 அங்கத்தவர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கு யாழ். மாவட்ட வாழ்வாதார உதவி முகாமைத்துவ சேவைகள் நிலையத்தினால் வாழ்வாதார உதவிக் கடன்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ.20

ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் கணித விஞ்ஞான பிரிவுகளில் அனுமதி பெறும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வல் வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

திசைமுகப்படுத்தலும் ஆய்வுகூட செய்முறை வழிப்படுத்தலும் தொடர்பில் மேற்படி கருத்தரங்கு இடம் பெறும். (வ)

## சாப்பாட்டுக் கடையில் வாய்த்தகராறு தாக்கப்பட்டார் உரிமையாளர்

நவாலி, டிசெ.20

ஆனைக்கோட்டையிலுள்ள பிரபல சாப்பாட்டுக்கடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தினால் கடை உரிமையாளர் பலமாகத் தாக்கப்பட்டார்.

அண்மையில் குறித்த பிரபல சாப்பாட்டுக்கடையில் மதுபோதையில் வந்த இருவர் அங்கு வடை சாப்பிட்டு விட்டு தமக்கு அங்கு வேலை தருமாறு கேட்டுள்ளனர். அப்போது இங்கு வேலை இல்லை என்று கூறப்பட்டதும் உரிமையாளரைப் பலமாகத் தாக்கி அவர் அணிந்திருந்த சேட்டைக் கிழித்து விட்டுச் சென்றனர். இவ்வாறு சென்றவர்கள் தமது சகாக்களைக் கூட்டி வந்து மீண்டும் கலாட்டாவில் ஈடுபடவே மானிப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதே வேளை அன்றைய தினம் இரவு நவாலியில் உள்ள கள்ளுத்தவறணையில் இடம்பெற்ற தகராறில் நபர் ஒருவரின் மண்டை உடைந்தது. அந்த வேளை வீதியால் சென்ற பெண்ணொருவரும் காயமுற்றார் என்று தெரியவந்துள்ளது. (வ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளுநர் வெற்றிக்கிண்ண இறுதியாட்டங்கள்

# கரப்பந்தில் உள்ளூராட்சி வலைப்பந்தில் பிரதம செயலர்



ஆளுநர் வெற்றிக்கிணத்துக்காக நடத்தப்பட்ட போட்டிகளில், மொத்தமாக 50 புள்ளிகளைப் பெற்ற உள்ளூராட்சி அணி சகலதுறைக்கான சம்பியனை தட்டிச் சென்றது.



யாழ்ப்பாணம், டிசெ .20

ஆளுநர் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்பட்ட வடமாகாண அமைச்சுகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் உள்ளூராட்சி அணியும், பெண்களுக்கான வலைப் பந்தாட்டத்தில் பிரதம செயலக கொத்தணி அணியும் சம்பியனாகின.

நல்லூர் ஸ்தான அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நேற்று புதன்கிழமை மாலை மூன்று மணியளவில் ஆரம்பமான இறுதியாட்ட நிகழ்வில், முதலில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் நடைபெற்றது.

கரப்பந்தாட்ட இறுதியில் பிரதம செயலக கொத்தணி அணியை எதிர்த்து உள்ளூராட்சி அமைச்சு அணி மோதிக் கொண்டது.

மூன்று செற்களைக் கொண்ட இந்த இறுதியாட்டத்தில் முதல் செற்றில் உள்ளூராட்சி அணிக்கு கடும் சவாலை பிரதம செயலக கொத்தணி அணி கொடுத்தது. எனினும் இறுதியில் போராட்டக் குணத்தை வெளிப்படுத்திய உள்ளூராட்சி அணி 25:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் செற்றைக் கைப்பற்றியது. அதே ஆக்ரோஷத்தோடு இரண்டாவது செற்றையும் 25:12 என்ற புள்ளிகள் அடிப்படையில் தனதாக்கிக், கரப்பந்தாட்டத்துக்கான ஆளுநர் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்தது உள்ளூராட்சி அணி.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பெண்களுக்கான வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் , பிரதம செயலக கொத்தணி அணியை எதிர்த்தாடியது உட்கட்டமைப்பு அமைச்சு அணி.

பிரதம செயலக கொத்தணி அணி வீராங்கனைகளின் அபார ஆட்டத்துக்கு முன்னால் உட்டகட்டமைப்பு அணி வீராங்கனைகளால் ஈடு கொடுக்க முடியவில்லை. இதனால் உட்டகட்டமைப்பு அணி முதல் பாதியாட்டத்தை 9:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் இழந்தது. முதல் பாதியாட்டத்தைப் போலவே இரண்டாம் பாதியாட்டத்திலும் வீறு கொண்டெழுந்தனர் பிரதம செயலக கொத்தணி வீராங்கனைகள். இதனால் 7:6 என்ற ரீதியில் இரண்டாம் பாதியாட்டத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் அவர்கள் கொண்டு வந்தனர். எனவே ஆட்ட நேர நிறைவில் 16:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் உட்கட்மைப்பு அணியை சரித்து, பெண்களுக்கான வலைப் பந்தாட்ட ஆளுநர் வெற்றிக் கிண்ணத்தை தன் வசமாக்கியது பிரதம செயலக கொத்தணி அணி.

இவற்றைத் தொடர்ந்து ஆண் ,பெண் இருபாலாருக்குமான கயிறு இழுத்தல் போட்டிகள் நடைபெற்றன. இதில் ஆண்கள் பிரிவில் உள்ளூராட்சி அமைச்சு அணியும், பெண்கள் பிரிவில் சுகாதார அமைச்சு அணியும் வெற்றியீட்டின.

இறுதி நிகழ்வாக பரிசளிப்பு வைபவம் நடைபெற்றது. வடமாகாண அமைச்சுகளுக்கிடையில் ஆளுநர் வெற்றிக்கிணத்துக்காக நடத்தப்பட்ட போட்டிகளில், மொத்தமாக 50 புள்ளிகளைப் பெற்ற உள்ளூராட்சி அணி சகலதுறைக்கான சம்பியனை தட்டிச் சென்றது.

இதேவேளை 38 புள்ளிகளுடன் கல்வி அமைச்சு இரண்டாவது இடத்தையும்,37 புள்ளிகளைப் பெற்ற பிரதம செயலக கொத்தணி அணி மூன்றாமிடத்தையும், 24 புள்ளிகளுடன் சுகாதார அமைச்சு நான்காமிடத்தையும், 21 புள்ளிகளுடன் உட்கட்டுமான அமைச்சு இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டது.(ங-23-86)

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.20

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்துக்கு 18 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், கழகத்தின் முன்னாள் வீரர்களான சாந்தன், யூட்கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காகவும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்பட்டு வருகிறது.

இந்தச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை மின்னொளியில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

மருதநிலா விளையாட்டுக்கழகம் எதிர் சன்சைன் விளையாட்டுக்கழகம்.

* * *

நியூ வோரியர்ஸ் விளையாட்டுக்கழகத்தின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டி, அழைக்கப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடத்தப்படும் லீக் முறையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

**மாலை 4.30 மணி**

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் எதிர் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம்.

(ங-23)

# உதைபந்து சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், டிசெ.20

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

7 பேர் பங்குபற்றும், விலகல் முறையிலான இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் டிசெம்பர் 26 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)

# மெய்வன்மைச் சங்கத்துக்கு புதிய நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம், டிசெ.20

வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கத்துக்கு புதிய நிர்வாகம் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்திலேயே இந்தப் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதன்போது நிர்வாக சபையில் உள்வாங்கப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:-

தலைவர் - தெய் வேந்திரன், உபதலைவர்கள் - கே.மங்களகுமார், பி.கமலன், எஸ்.சுதாகரன், செயலாளர் - எஸ்.அந்தரங்கன், பொருளாளர் - என். மயூரன், நிர்வாக சபை உறுப்பினர்கள் - பி.மனோகரன், புருனேகார்த்திக், எஸ்.முகுந்தன், எஸ்.செந்தில்குமரன், கே.விஜிதரன். (ங-23)

## பிரிவு 3 கிரிக்கெட் ஜனவரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.20

அகில இலங்கை ரீதியிலான பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான பிரிவு 3 இக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் ஜனவரி மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்த முறை பிரிவு 3 இக்கான போட்டியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி முதல்முறையாக பங்குபற்றவுள்ளது. (ங-23)

# தேசிய 'பரா' பூப்பந்துக்கு வடமாகாண போட்டியாளர்



யாழ்ப்பாணம், டிசெ.20

மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய மட்ட 'பரா ' பூப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் இன்று வியாழக்கிழமையும், நாளை வெள்ளிக் கிழமையும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் கொழும்பு - 7இல் உள்ள டொறிங்டன் பூப்பந்தாட்ட கழக உள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளன.


'ஹன்டிக்கப்' நிறுவனத்தின் 'அனைவருக்கும் விளையாட்டு' பிரிவின் முகாமையாளர் ஸ்ரீபன் தலைமையிலான வடமாகாணத்தைச் சேர்ந்த 15 போட்டியாளர்கள் தேசிய மட்ட பரா பூப்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

சக்கரநாற்காலி பயன்படுத்துவோர், முழங்காலுக்குக் கீழ் கால் இல்லாதோர், முழங்காலுக்கு மேல் கால் இல்லாதோர், ஒரு கை இழந்தோர் என நான்கு பிரிவுகளில் இந்த பூப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வடமாகாணத்தில் இருந்து பங்குபற்றவுள்ள போட்டியாளர்கள் அனைவரும் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய மட்ட பரா பூப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் வடமாகாண போட்டியாளர்கள் விவரம்:-

எஸ்.மயூரன், வி.ஜெயக்காந்தன், கி.சுவர்ணன், கெ.ஜனார்த்தனன், நி.கஜன், ச.திலீபன், வி.வினோத், உ.நிருஜன், ம.இதயகுமார், க.கபிலன், கெ.[illegible], [illegible].கவிதா, ச.சிந்துஜா. (ங-422)



கொழும்பு பிங்பொங் மேசைப்பந்தாட்டப் பயிற்சி நிலையம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு இடையே நடத்திய மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அனைத்துப் பிரிவுகளிலும் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி மாணவன் மோகன் ஆகாஷனுக்கு 'ஹன்டிக்கப்' நிறுவனத்தின் வேலைத்திட்ட முகாமையாளர் ஸ்ரீவ் கவட் வெற்றிக் கிண்ணம் வழங்கிக் கௌரவித்தார். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஸி. அடுத்த ஆட்டத்துக்குத் தயார்

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணிக்கும், ஆஸ்திரேலிய அணிக்குமிடையிலான 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது ஆட்டத்தி ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றுள்ள நிலையிலேயே இரண்டாவது ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. முதலாவது ஆட்டத்தைப் போலல்லாது 13 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.


முதலாவது ஆட்டத்தில் வேகப்பந்து வீச்சாளர் பென் ஹில்பன்ஹாஸ் காயமடைந்திருந்த நிலையில் இரண்டாவது ஆட்டத்துக்கான குழாமிலிருந்து அவர் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக ஜக்ஸன் பேர்ட் என்ற வீரர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியின் தலைவரான மைக்கல் கிளார்க் உபாதையால் அவதிப்பட்டுவரும் நிலையில் அவருக்கு மேலதிக வீரராக உஸ்மான் கவாஜா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். 26 ஆம் திகதி மெல்போர்ணில் ஆரம்பிக்கவுள்ள ஆட்டத்தில் பங்குபெறுமளவுக்கு மைக்கல் கிளார்க் உடற்தகுதியை அடையாதுவிடின் அவருக்குப் பதிலாக உஸ்மான் கவாஜா அந்த ஆட்டத்தில் பங்குபெறவுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள 13 பேர் கொண்ட குழாம்:

மைக்கல் கிளார்க், ஷேன் வொற்சன், எட் கோவன், பிலிப் ஹியூஸ், மைக்கல் ஹசி, மிற்சல் ஜோன்சன், நதன் லயன், பீற்றர் சிடில், மிற்சல் ஸ்ரார்க், ஜக்ஸன் பேர்ட், மத்தியூ வேட், டேவிட் வோணர், உஸ்மான் கவாஜா. (5)

# தப்புக் கணக்கு போட்டது இந்தியா




போலித் துணிச்சலினாலும், ஆர்ப்பாட்டத்தினாலும் இங்கிலாந்து அணிக்கெதிரான தொடரை இந்திய அணி தோற்றதாக இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் நசார் ஹூசைன் தெரிவித்துள்ளார்.

இரு அணிகளுக்குமிடையிலான 4 போட்டி கொண்ட தொடரை இந்திய அணி 1-2 என்ற கணக்கில் இந்தியாவில் வைத்தே தோற்றமை குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே நசார் ஹூசைன் இவ்வாறு தெரிவித்தார்.

முன்பிருந்ததைப் போன்ற இந்திய அணி தற்போது இல்லை எனத் தெரிவித்த நசார் ஹூசைன், இரு அணிகளிலிருந்தும் ஓர் அணியைத் தெரிவுசெய்ய விரும்பினால், இங்கிலாந்து அணியின் பந்துவீச்சாளர்கள் அனைவரையும் தெரிவுசெய்வார் எனத் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணி முதன்முறையாக இந்தியாவில் வைத்து இந்தியாவை விடச் சிறந்த சுழற்பந்து வீச்சாளர்களைக் கொண்டிருந்ததாகவும் ஹூசைன் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் வீரர்கள் அதிக உடற்தகுதியுடனும், மனத்திடனுடனும் காணப்பட்டார்கள் எனத் தெரிவித்த அவர், டெஸ்ட் போட்டி குறித்த பசியோடும் அவர்கள் காணப்பட்டார்கள் எனத் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை (ஆட்டத்தின் நான்காம் நாள்) முதலிரண்டு பகுதி (மதியபோசனத்திற்கு முன்பு, தேநீர்பான இடைவேளைக்கும் மதியபோசனத்திற்கும் நடுவே) பந்துப் பரிமாற்றங்களிலும் இலக்கு எதனையும் கைப்பற்றாமல் இருந்த இங்கிலாந்து அணி, தேநீர்பான இடைவேளைக்குப் பின்னர் 4 இலக்குகளைக் கைப்பற்றியிருந்ததைச் சுட்டிக் காட்டிய நசார் ஹூசைன், இந்திய அணியால் அதைப்போன்று செய்ய முடியாதிருந்திருக்கும் எனவும் தெரிவித்தார்.சுழலும் ஆடுகளத்தைத் தயாரித்தால் போதும் இங்கிலாந்தை வெற்றிகொண்டுவிடலாம் என்று இந்தியா நினைத்திருந்ததாகத் தெரிவித்த ஹூசைன், போலித் துணிச்சல், ஆர்ப்பாட்டத்தினாலேயே இந்தியா தோல்வியடைந்ததாகத் தெரிவித்துள்ளார். (5)




# இந்திய வீரர்கள் தலை தப்பியது

இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடரில் வேகப்பந்து வீச்சில் மிரட்டிய அண்டர்சன் 12 இலக்குகள் வீழ்த்தினர். அண்டர்சனது 'ஸ்விங்' தான் தோல்விக்கு காரணம் என்று இந்திய அணியின் அணித்தலைவர் டோனியே புலம்பும் அளவுக்கு அவரது பந்து வீச்சு இருந்தது. இவ்வாறு இந்திய அணிக்கு எதிராக அசத்திய அண்டர்சன் ஒரு நாள் மற்றும் 'ரி-20' தொடரில் இடம்பெற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு அணிகள் மோதும் இரண்டு 'ரி-20' போட்டி புனே (டிசெம்பர் 20 ஆம் திகதி) மற்றும் மும்பையில் (டிசெம்பர் 22 ஆம் திகதி) நடைபெறவுள்ளது.

பின்பு, இங்கிலாந்து அணி கிறிஸ்மஸ் கொண்டாட நாடு திரும்புகிறது.

மீண்டும் இந்தியா சென்று ஜனவரி 11 ஆம் திகதி முதல் ஐந்து போட்டி கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

இதற்கான அணியில், முதல் மூன்று போட்டியில் விளையாட இருந்த அண்டர்சன், டெஸ்ட் தொடரில் 294 ஓட்டங்கள் எடுத்த ரொரட் இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்குப் பதில் கிறிஸ் வோக்ஸ், ஜோஸ் பட்லர் இடம் பெற்றனர்.

'ரி-20' தொடருக்கான இங்கிலாந்து அணி வீரர்கள் விவரம்:

இயன் மோர்கன் (அணித்தலைவர்), பேர்ஸ்டோவ், பிரஸ்னன், டேனி பிரிக்ஸ், ஜோஸ் பட்லர், டெர்ன்பாக், அலெக்ஸ் ஹேல்ஸ், மைக்கல் லம்ப், ஸ்டூவர்ட் மீக்கர், ஸ்மித் பட்டேல், டிரட்வெல், லுக் ரைட், ஜோ ரூட், ஜேம்ஸ் ஹாரிஸ்.

ஒருநாள் தொடருக்கான இங்கிலாந்து அணி வீரர்கள் விவரம்:

அலஸ்டயர் குக் (அணித்தலைவர்), இயன் பெல், ஸ்டீவன், கீஸ்வெட்டர், பீட்டர்சன், இயன் மோர்கன், பேர்ஸ்டோவ், பிரஸ்னன், டேனி பிரிக்ஸ், ஜோஸ் பட்லர், டெர்ன்பாக், ஸ்டூவர்ட் மீக்கர், ஸ்மித் பட்டேல், டிரட்வெல். (5)

# பாகிஸ்தானுடன் மோதல் நடந்தே தீரும்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான கிரிக்கெட் தொடர் திட்டமிட்டபடி நடக்கும். இதை ரத்து செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லை, என்று இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இரண்டு 'ரி-20', மூன்று ஒரு நாள் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்க, பாகிஸ்தான் அணி 22 ஆம் திகதி இந்தியா செல்கிறது. பெங்களூரில், முதல் 'ரி-20' ஆட்டம் (டிசெம்பர் 25) நடக்கிறது.

இதனிடையே, இந்தியா வந்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், இந்தியாவுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க. மூத்த தலைவர் யஷ்வந்த் சின்கா கூறுகையில், நமது உள்துறை அமைச்சர் பலவீனமாக உள்ளார். கடின வார்த்தைகளை மாலிக் பேசும் போது, நாமும் கடினமாக பதிலடி கொடுத்திருக்க வேண்டும். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாகிஸ்தான் அணியின் கிரிக்கெட் தொடரை ரத்து செய்ய வேண்டும், என்றார்.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கூறுகையில், விளையாட்டில் அரசியலை கலக்கக்கூடாது. பாகிஸ்தான் தொடர் ஏற்கனவே திட்டமிடப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுவிட்டன. இந்த நிலையில் தொடரை ரத்து செய்வது என்ற கேள்விக்கு இடமில்லை. போட்டி வழக்கம் போல நடக்கும் - என்றார்.

# களமிறங்கும் 'சன்ரைசர்ஸ்'

இந்தியன் பிறிமியர் லீக் (ஐ.பி.எல்.) 'ரி-20' சம்பியன் தொடரில் பங்கேற்க உள்ள ஹைதராபாத் அணிக்கு 'சன் ரைசர்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. முதல் ஐ.பி.எல். பருவகாலம் தொடங்கிய போது டெக்கான் குரோனிக்கில் ஹோல்டிங்க்ஸ் நிறுவனம் ஹைதராபாத் அணிக்கான உரிமத்தை பெற்றிருந்தது.

டெக்கான் சார்ஜர்ஸ் என்ற பெயரில் அது ஒரு அணியை உருவாக்கி ஐ.பி.எல். போட்டியில் பங்கேற்றது. இரண்டாவது பருவகாலத்தில் அந்த அணி சம்பியன் பட்டத்தை வென்றது. கடன்களால் டெக்கான் குரோனிக்கில் நிறுவனம் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கி தவித்தது. இதனையடுத்து ஹைதராபாத் அணிக்கான உரிமம் கடந்த ஒக்டோபர் மாதம் ஏலம் விடப்பட்டது. இதில் ரூ.85 கோடிக்கு சன் குழுமம் ஏலம் கேட்டது.

ஏலத்தில் பங்கேற்ற இதர நிறுவனங்கள் கேட்டதை விட அது அதிகமாக இருந்ததால் சன் குழுமம் ஹைதராபாத் அணிக்கான உரிமத்தை வென்றதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.

ஹைதராபாத் அணியின் புதிய பெயர் சூட்டுவதற்கு 5 லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் போட்டி ஒன்றை சன் குழுமம் அறிவித்தது. இதனையடுத்து தற்போது 'சன் ரைசர்ஸ்' என்று அந்த அணிக்கு பெயர் சூட்டப்பட்டுள்ளது. (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சங்கா -5 ஹேரத்- 4

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் வீரர்களுக்கான தரப்படுத்தலில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கையின் குமார் சங்ககார 5 ஆம் இடத்திலும், பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் இலங்கையின் ரங்கன ஹேரத் 4 ஆவது இடத்திலும் காணப்படுகின்றனர்.

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நிறைவு பெற்றதும் வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலிலேயே இந்த மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள வீரர்களுக்கான தரப்படுத்தலில் குமார் சங்ககார தவிர, முதல் இருபது இடங்களில் திலான் சமரவீர 17 ஆவது இடத்தில் காணப்படுகிறார். 20 இடங்களுக்கு வெளியே மஹேல ஜெயவர்தன 21 ஆவது இடத்திலும், அன்ஜலோ மத்தியுஸ் 23 ஆவது இடத்திலும், திலகரட்ண டில்ஷான் 24 ஆவது இடத்திலும் காணப்படுகின்றனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தலில் ரங்கன ஹேரத் தவிர வேறு எந்த இலங்கை வீரரும் முதல்இருபது இடங்களுக்குள் இல்லை. சானக வெலகெதர 34 ஆவது இடத்தில் காணப்படுவதே அடுத்த சிறப்பான நிலையாகக் காணப்படுகிறது.

புதிதாக வெளியிடப்பட்டுள்ள தரப்படுத்தலில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலின் முதல்இருபது இடங்களுக்குள் இந்திய வீரர்கள் எவரும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல்:

மைக்கல் கிளார்க், ஷிவ்நரின் சந்தர் போல், ஹசிம் அம்லா, அலஸ்ரெயர் குக், குமார் சங்ககார, ஜக்ஸ் கலிஸ், ஏபி.டி. வில்லியர்ஸ், ரோஸ் ரெய்லர், மைக்கல் ஹசி, யுனிஸ் கான்

பந்துவீச்சாளர்களுக்கான தரப்படுத்தல்:ஸ்ரெய்ன், வேர்ணன் பிலாந்தர், சயிட் அஜ்மல், ரங்கன ஹேரத், பீற்றர் சிடில், ஜேம்ஸ் அண்டர்சன், கிரேம் ஸ்வான், மோர்னி மோர்க்கல், பிரக்ஜான் ஓஜா, பென் ஹில்பன்ஹாஸ் (5)

# ஹேரத்தை நம்பியே இலங்கை

ஆஸ்திரேலியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, இந்தத் தொடரில் வெற்றிகளைப் பெறுவதற்கு ஹேரத்தையே நம்பியிருக்கிறது.

இந்த நிலையில் அடுத்த இரண்டு போட்டியில் தன்னால் சிறப்பாகச் செயற்பட முடியும் என்று ரங்கன ஹேரத் தெரிவித்துள்ளார்.

முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்திருந்த போதிலும் அந்த ஆட்டத்தின் மூன்றாவது இன்னிங்ஸில் ரங்கன ஹேரத் 5 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். அத்தோடு ஆஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்களையும் சற்று தடுமாற வைத்திருந்தார்.

மெல்பேர்ண், சிட்னி ஆடுகளங்களில் சுழற்பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளனர் என்பதை வரலாறு சொல்கிறது எனத் தெரிவித்த இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட், அந்த மைதானங்களில் சுழற்பந்து வீச்சாளர்கள் போட்டியை மாற்றிய பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளார்கள் எனத் தெரிவித்தார்.

வேலைக்கு ஆள் தேவை
கணக்கு வேலை
செய்வதற்கு கணினி அறிவு
உடைய ஆண் தேவை.
தொடர்பு- 0778314201

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் விலைக்குறைப்பும்,
மலிவு விற்பனையும்.
அலுமாரி 12750/= 10950/=
மரக் கட்டில் 7250/= 4900/=
குசன் செற் 21500/= 15500/=
மெத்தை 2400/= 1950/=
கணினி மேசை 3275/= 2900/=
கணினி கதிரை 4050/= 3300/=
← 6 கதிரைக்கு ரீப்போ FREE →
மற்றும் TV ஸ்ராண்ட், மரமேசைகள், சோக்கேஸ், றெசின் ரேபிள், பிளாஸ்ரிக் மேசைகள் மற்றும் வீட்டு அலுவலக தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள
இல-230, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்கும் இடையில்)
T.P- 0773583879, 0778314201 (சி/2682)(9.14)

HOTEL NOKIYA
நா சுவைத்திட மனம் நிறைவடைய மனம் மகிழ்ந்திட
HOTEL NOKIYAவின்
இன்றைய SPECIAL
மொகாலி ஸ்பெஷல் புரியாணி
இந்தியன் புரியாணி
With ரைத்தா ஒனியன் செலட்
அனைத்து வகை ஸ்பெஷல் கொத்து
சூப் free >
உங்களின் தேவைக்கேற்ப அலுவலகம், தொழிலகம், இல்லங்கள், வர்த்தக நிலையங்கள் போன்ற இடங்களுக்கு விநியோகம் செய்யப்படும்.
இல-110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு- 0779258957 (அலியான்ஸ் அருகாமை)

நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி-வதிரி
புதிய இடத்தில் புதிய நிர்வாகத்தின் கீழ்
A/L 2015 கணித, விஞ்ஞான வகுப்புக்கள் ஆரம்பம்.
காலம் : 28.12.2012 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 7.30 மணி
இடம் : வடமராட்சி மத்தியமகளிர் கல்லூரிக்கு அருகில் (வதிரியில்)
இரசாயனவியல் : S.தங்கராசா, K.சிவத்திரன்
பௌதிகவியல் : S.சோதிலிங்கம், J.சந்திரப்பிரகாசம், G.பிரபா
இணைந்தகணிதம் : S.செந்தில்ராஜ், K.அருளானந்தம், P.விமலநாதன்
உயிரியல் : பொன் திவாகரன், E.இளங்கோ
அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளலாம்.
தம்பியோடை, வதிரி,கரவெட்டி. (C/2679)(14) நிர்வாகி.

கிறிஸ்மஸ் மலிவு விற்பனை
ரவுஸர் ரூபா 1400/= ரூபா 500/=
சேர்ட் ரூபா 700/= ரூபா 300/=
பாடசாலைச் சீருடைகள் தேவையான அளவுக்கேற்ப றெடிமேட் ஆகவும் தைத்தும் கொடுக்கப்படும்.
ஆகாஸ் ரெயிலரிங் & டெக்ஸ் டைல்ஸ்
19, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P.0776701495 (சி/2850)(8.2)

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

I.B.S
கல்வி நிறுவனம்
சுன்னாகம்
தரம் 3,4,5
புலமைப்பரிசில்
பரீட்சை-01
ஞாயிறு தோறும்
வெளியாரும்
பங்குகொள்ளலாம்.

சல்லிக்கற்கள் விற்பனைக்கு
கருங்கல் (6x9), சல்லிக்கற்கள், கிரவல், கட்டுமண், செங்கல் என்பன வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு தரமான பொருள்கள் குறைந்த விலையில் விநியோகம் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு:
077 4169026
(24374)(2.6)

இன்றே விரையுங்கள்..........
இதயதுடிப்பு
நவீன தொழில் நுட்பத்துடன் Orbitrack மற்றும் Home Gym,Bench,AbCircle, Trade mill போன்ற பல உடற்பயிற்சி சாதனங்களுக்கு
கலோரி இழப்பு
17900/= 17500/=
16900/= 16500/=
15900/= 15500/=
13900/= 13500/=
இத்துடன்
பெறுமதி மிக்க பரிசு
Sports Shoes- 2550/=, 2000/= மற்றும்
Jersey- 875/= 700/=
Bottom- 750/= 600/= shorts- 450/= 300/=
நீங்கள் நம்பமுடியாத விலைக்கழிவில்.......
கொள்வனவு செய்யப்படும் Orbitrack இற்கு Scaleஒன்று......
31.12.2012 வரை
T.P:021 222 3490, 077 806 0267
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல.06,ஜும்மாபள்ளிவாசல் லேன்,
கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

கண்ணீர் அஞ்சலி
கிளி/ உமையாள்புரம் அ.த.க.பாடசாலையின் ஆசிரியை திருமதி கௌசலா ராஜ்குமார் அவர்களின் அன்புத் தந்தை
சபாபதி தங்கராஜா
(ஓய்வுநிலை அதிபர், யா/ கோப்பாய் ம.வி.)
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
கிளி/ உமையாள்புரம் அ.த.க.பா. ஆனையிறவு.
(26987)(3.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.12.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.